REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 21 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 90 இல. 44 | Monday 21,February, 2022 | 16பக்கங்கள் | 30/-

## மேலும் ஐந்து எரிபொருள் கப்பல்கள் இலங்கை வருகிறது

**இவ்வாரத்தில் வந்து சேருமென அறிவிப்பு**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

இந்த வாரத்தில் மேலும் 5 கப்பல் எரிபொருட்கள் நாட்டுக்கு கிடைக்கவுள்ளதாகவும் அந்த வகையில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். 06

## மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

**அரச நிறுவனங்களிடம் உள்ளூராட்சி அமைச்சு கோரல்!**

*(லோரன்ஸ் செலவநாயகம்)*

மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. 06

## "பூஸ்டர்" தடுப்பூசி வெற்றியளிப்பின் முகக்கவசத்திற்கு விடை கொடுக்கலாம்



03





லேக் ஹவுஸ் ஸ்தாபகர் அமரர் டி.ஆர்.விஜேவர்தனவின் 136 ஆவது ஜனன தின நிகழ்வுகள் லேக்ஹவுஸ் வளாகத்தில் நடைபெற்றது. நிறுவன தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி பி.தயாரத்னவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். இதன் போது மதஅனுஷ்டானங்களும் இடம்பெற்றன.

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர்;**

# சவால்களை வெற்றிகொள்ளும் நம்பிக்கையுடன் வெள்ளி பயணம்

**அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில் உயர்மட்டக்குழு**




*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான குழு எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜெனீவா பயணமாகிறது. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கை 3 ஆம் திகதி வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் அதற்கான பதிலளிப்பை அன்றைய தினமே முன்வைக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் 06

**இலங்கையின் இராஜதந்திர குழுவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்**

## திறமையான சேவைக்கான கட்டமைப்புகளில் மாற்றம்


**ஜனாதிபதி செயலக பணிகள் விரிவுபடுத்தல்**



ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள காமினி செனரத்தின் பதவியேற்புடன், ஜனாதிபதி அலுவலகத்தின் பணிகளை மேலும் வினைத்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கத்தில், கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, ஜனாதிபதி நிதியம், 06

**ஐ.நா மனித உரிமைகள் பேரவையில்**

## இலங்கை குறித்து முன்வைக்கவுள்ள அறிக்கைக்கு பதில் தயாரானது



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து முன்வைக்கப்படவுள்ள அறிக்கைக்கு இலங்கை தமது பதிலை வழங்கியுள்ளது. இந்த மாதம் ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் இலங்கை குறித்த அறிக்கையை 06



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம் நேற்று (20) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு கோதுமை மா பொதியை குடும்பஸ்தரொருவருக்கு வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

## நிதி அமைச்சரின் இந்திய விஜயம் முக்கியமானது

**நன்மைகளை கொண்டு வருமென நம்பிக்கை**



நாடு அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இன்றைய நிலையில், இலங்கைக்கான இந்தியாவின் பொருளாதார நிவாரணப் பொதியை முறைப்படுத்த நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ இந்த மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் இரண்டு மாதங்களில் நிதியமைச்சர் இந்தியாவிற்கு மேற்கொள்ளும் 06

## அரசிலிருந்து வெளியேறும் எந்த எண்ணமும் கிடையாது

**SLFP உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



அரசாங்கத்திலிருந்து வெளியேறும் எந்த எண்ணமும் கிடையாது. ஜனாதிபதியும் பிரதமரும் விடுத்துள்ள தகவல்களுக்கிணங்க நாம் உருவாக்கிய அரசாங்கத்தோடு புதிய பயணத்தை தொடருவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது நிலவும் மாற்றுக் கருத்துக்கள் தொடர்பில் 06

## பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் விரைவில் நீங்கும்

*(ஹற்றன் சுழற்சி நிருபர்)*



"அரிசி, சீனி உட்பட நுகர்வுப் பொருட்களுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு மற்றும் பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டுள்ளன. ஏனைய பிரச்சினைகளும் விரைவில் தீர்க்கப்படும். அந்தவகையில் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் 06

## நாடளாவிய ரீதியில் 9,000 GS மாருக்கான வெற்றிடம்

**போட்டிப் பரீட்சை மூலம் விரைவில் நியமனம்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

நாடளாவிய ரீதியில் 9000 கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாகவும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம்.சித்ரானந்த:

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க அதற்கான 06

**பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும்**

## பிரிவினைவாத எண்ணத்தில் நாட்டில் சிலரது செயற்பாடு



03



## எரிபொருளுக்கான தட்டுப்பாடு மீண்டும் ஏற்பட வாய்ப்பு

**நிவர்த்தி செய்யும் தீவிர முயற்சியில் அரசு**

03

## கொவிட் –19 பரவல்; சிறுவர்களிடையே திடீர் அதிகரிப்பு



கொரோனா தொற்றுக்குள்ளான சிறுவர்களை அனுமதிக்கும் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக கொழும்பு, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார். நாளொன்றுக்கு சுமார் 20 சிறுவர்கள் வைரஸால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகவும் 06

**எரிபொருள் விலைகள் அதிகரித்தால்**

## பஸ் கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டும்

**அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்**



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருளின் விலையை மீண்டும் அதிகரித்தால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது எரிபொருள் நிவாரணம் 06

## போதையில் வாகனம் செலுத்துவோருக்கு ஆபத்து

**கடுமையான புதிய சட்டம் தயாராகிறது**



போதைப் பொருள் பயன்படுத்தி விட்டு வாகனங்களை செலுத்துபவர்களுக்கு எதிராக புதிய சட்டமொன்று நடைமுறைக்கு வரவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சாரதிகளின் சட்டவிரோத செயற்பாடுகள் காரணமாக வீதி விபத்துகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதனை கட்டுப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 06

## உடப்புஸ்ஸலாவயில் பாரிய தீ; 07 கடைகள் எரிந்து நாசம்

**உயிர்ச் சேதம் இல்லை; பல இலட்சம் ரூபா நஷ்டம்**

உடப்புஸ்ஸல்லாவ நகரத்தில் நேற்று முன்தினம் (19) மாலை ஏற்பட்ட தீ விபத்தில் 7 தற்காலிக வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகியுள்ளன. இத் தீ விபத்தில் எவருக்கும் உயிர்ச்சேதங்களோ, காயங்களோ ஏற்படவில்லை 06



**விக்கல் வீராச்சாமி**



தமிழ் கூட்டமைப்பு இந்திய தூதுவரை அடிக்கடி சந்தித்து தமிழர் தீர்வு காண உதவி செய்யுங்கோ எண்டு கேட்டு வருகினமே, ஏதாவது நடந்ததோ....

எதுவுமே நடக்கல, மோடியை சந்திக்க கேட்டுச்சினம், அது பழைய கதையா போச்சு, இப்ப கையெழுத்து வேட்டை, பாப்பம் எங்க போய் முடியுது எண்டு..!!!

**89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# சர்வதேச செய்திகள்

## ரஷ்யாவின் ஆத்திரமூட்டும் செயலுக்கு உக்ரைன் பதிலளிக்காது: ஜனாதிபதி

### கிளர்ச்சியாளர் பகுதியில் மோதல் உக்கிரம்

கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக மோதல் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் தமது நாடு ஆத்திரமூட்டல்களுக்கு பதிலளிக்கப்போவதில்லை என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

எனினும் ரஷ்யாவின் தாக்குதலுக்கு எதிராக உக்ரைன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் என்று உலகத் தலைவர்களிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் இராணுவம் மற்றும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கு இடையே மூன்றாவது நாளாக இடம்பெற்ற மோதல்களில் இரு உக்ரைன் வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்யா உக்ரைன் மீது ஆக்கிரமிப்பு தொடுக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதியாகக் கூறுகின்றபோதும் ரஷ்யா அதனை மறுத்து வருகிறது.

உக்ரைனின் கிழக்கில் ரஷ்யா போலியான பிரச்சினை ஒன்றை காட்டி ஆக்கிரமிப்பை நடத்த முயற்சிப்பதாக மேற்குலக நாடுகள் குற்றம்சாட்டுகின்றன.

எனினும் மியுனிச்சில் நடந்த பாதுகாப்பு மாநாடொன்றில் உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி, உக்ரைன் பயப்படவில்லை என்றும் எமது வாழ்க்கையை வாழ விரும்புகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலகத் தலைவர்கள் ரஷ்யாவை அமைதிப்படுத்தும் கொள்கைகளை பின்பற்றுவதாக குற்றம்சாட்டிய அவர், உக்ரைனுக்கு புதிய பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நாட்டை விட்டு வெளியேறுவது ஆபத்தானது என்று அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்திருந்த நிலையிலேயே உக்ரைன் ஜனாதிபதி ஜெர்மனியின் மியுனிச் நகருக்கு பயணித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு உக்ரைனில் கிளர்ச்சியாளர் மற்றும் அரச படைகளை பிரிக்கும் எல்லைக் கோட்டை ஒட்டி தாக்குதல்கள் வேகமாக அதிகரித்திருப்பதாக கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டிருக்கும் நிலையிலேயே உக்ரைன் ஜனாதிபதியின் கருத்து வெளியாகியுள்ளது. கடந்த சனிக்கிழமை மாத்திரம் பிளவுபட்டுள்ள டொனட்ஸ் மற்றும் லுஹன்ஸ்க் பகுதிகளில் 1,400க்கும் அதிகமான வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர்.



உக்ரைன் உள்துறை அமைச்சர் டெனிஸ் மொனஸ்டைர்ஸ்கி முன்னரங்கு பகுதிகளுக்கு சென்றிருந்த நிலையில் ஷெல் வீச்சு காரணமாக பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

தன்னிச்சையாக குடியரசுகள் என அறிவித்திருக்கும் டொனட்ஸ் மற்றும் லுஹன்ஸ்க் பகுதிகளில் இருக்கும் போர் புரியும் வயதைக் கொண்ட அனைத்து ஆண்களும் அணிதிரளும்படி கிளர்ச்சியாளர்கள் உத்தரவிட்டிருப்பதோடு ஏனைய பொது மக்கள் ரஷ்யாவுக்கு இடம்பெயரும்படி வலியுறுத்தப்பட்டுள்ளனர். உக்ரைன் தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிடுவதாக எந்த ஆதாரத்தையும் கூறாது பிரிவினைவாதிகள் அறிவித்துள்ளனர்.

இந்த உத்தரவை பொருட்படுத்தாத பெரும்பாலான மக்கள் தமது வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

கிளர்ச்சியாளர் பகுதிகளில் இடம்பெறுவதான தாக்குதல் மற்றும் தாக்குதல் முயற்சிகள் பற்றி உறுதி செய்யப்படாத அறிக்கை ஒன்றை ரஷ்ய ஊடகம் வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கைகள் தொடர்பில் ரஷ்யா குற்றவியல் விசாரணை ஒன்றை ஆரம்பித்திருப்பதோடு, உக்ரைன் எல்லையில் இருந்து சுமார் 1 கிலோமீற்றரில் ரஷ்ய நிலப் பகுதியான ரொஸ்டொவ் பிராந்தியத்தில் ஷெல் குண்டுகள் வெடித்ததாகக் கூறப்படுவதை உக்ரைன் மறுத்துள்ளது.

ஷெல் வீச்சுகள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில், உக்ரைனில் இருந்து தமது நாட்டு மக்களை வெளியேறும்படி ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளும் வலியுறுத்தியுள்ளன. ஜெர்மனி ஏர்லைன்ஸ் லுப்தன்சா உக்ரைனுக்கான விமானப் பயணங்களை இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஒரு வாரத்திற்கு இடைநிறுத்தியுள்ளது.

மேற்குலகத் தலைவர்கள் மியுனிச் நகரில் கூடியிருக்கும் நேரம் ரஷ்யா தனது இராணுவத் திறனை காட்டும் மற்றொரு செயலில் ஈடுபட்டுள்ளது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் மேற்பார்வையில் இடம்பெற்று வரும் மூலோபாய அணு ஒத்திகைகளின் ஓர் அங்கமாக மேம்பட்ட ஹைப்பர்சொனிக் ஏவுகணைகள் வீசப்பட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

பெலாரஸில் உக்ரைனுடனான எல்லைக்கு அருகில் ரஷ்யா இராணுவ ஒத்திகை ஒன்றை நடத்தி வருகிறது. கிழக்கு உக்ரைனின் கிளர்ச்சியாளர்கள் உக்ரைன் எல்லைகளுக்கு அருகில் 169,000 மற்றும் 190,000 இற்கு இடையிலான ரஷ்ய துருப்புகள் குவிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்கா கணித்துள்ளது.

ரஷ்ய படைகள் உக்ரைனுடனான எல்லைக்கு நெருக்கமாக நகர்ந்து சுற்றிவளைக்க ஆரம்பித்திருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் தெரிவித்துள்ளார்.

## ஆப்கான் பெண் செயற்பாட்டாளர் தொடர்பில் குட்டரெஸ் கவலை



ஆப்கானிஸ்தானில் காணாமல் போயுள்ள பெண் செயற்பாட்டாளர்களின் நலன்கள் குறித்து கவலை தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று தலிபான்களை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ட்வீட்டில் “ஆப்கானில் காணாமல் போயுள்ள பெண் செயற்பாட்டாளர்களின் நலன்கள் குறித்து நான் அதிகளவில் கவலையடைகிறேன். கடந்த சில வாரங்களாக எதிர்பாராதவர்களும் காணாமல் போயுள்ளனர். அவர்கள் பாதுகாப்பாக தம் இல்லங்களுக்கு திரும்புவதை தலிபான்கள் உறுதி செய்ய வேண்டுமென நான் கடுமையாக வலியுறுத்துகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

தங்களது அடிப்படை உரிமைகளைத் தலிபான் ஆட்சியாளர்களிடம் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட ஆப்கான் பெண் செயற்பாட்டாளர்கள் பலர் காணாமல் போயுள்ளமை குறித்து உலக அளவிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

## ஐ.அ. இராச்சியம்: இந்தியா 80 வீத வரியின்றி ஏற்றுமதி



இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தவுடன், இந்தியா தனது உற்பத்திகளில் குறைந்தது 80 வீதத்தை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு வரியின்றி ஏற்றுமதி செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கைச்சாத்திடப்பட்டுள்ள விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பிளாஸ்டிக் ஏற்றுமதிகளை மூன்று மடங்காக அதிகரிப்பது மற்றும் அடுத்து இரண்டு ஆண்டுகளில் மேலதிகமாக 2 பில்லியன் புடவை ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கு இந்தியாவுக்கு முடியுமாகவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் தற்போது 60 பில்லியன் டொலர் பெறுமதி கொண்ட இரு தரப்பு வர்த்தகத்தை அடுத்து ஐந்து ஆண்டுகளில் 100 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்தியாவில் 500,000க்கு மேல் தொழில் வாய்ப்புகளை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளம் தாக்கிய பிரேசில் நகரத்தில் 191 பேர் மாயம்



பிரேசிலின் பெட்ரோபொலிஸ் நகரில் நான்கு நாட்களுக்கு முன் பெரும் அழிவை ஏற்படுத்திய நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் உயிர்தப்பியோரை தேடும் மீட்பு நடவடிக்கைகளுக்கு மோசமான காலநிலை இடையூறை ஏற்படுத்தியுள்ளது.

கடும் மழை காரணமாக அவசர மீட்புக் குழுவினர் கடந்த சனிக்கிழமை பல முறை தமது பணிகளை இடைநிறுத்தினர். உயிர் தப்பியோரை மீட்கும் எதிர்பார்ப்பு குறைந்து வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறைந்தது 27 சிறுவர்கள் மற்றும் பதின்ம வயதினர் உட்பட 146 பேர் உயிரிழந்திருப்பதோடு மேலும் 191 பேர் தொடர்ந்து காணாமல்போயிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

900க்கும் அதிகமானவர்கள் பாடசாலைகள் மற்றும் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர்.

அடர்ந்த பனிக்கு மத்தியில் பணியாளர்கள் இடிபாடுகள் மற்றும் சேற்று மண்ணை அகற்றி வருகின்றனர். தன்னார்வலர்கள் அந்த பணிகளுக்கு உதவி வருகின்றனர்.

## கனடா ஆர்ப்பாட்டக்காரர் பொலிஸாரால் கலைப்பு



கனடா தலைநகர் ஒட்டாவாவில் பாராளுமன்றத்திற்கு வெளியில் கடந்த மூன்று வாரங்களாக முகாமிட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் கலைத்துள்ளனர்.

இதன்போது சில அதிகாரிகள் குதிரைகளின் மீது வந்து ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்ததோடு 170க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு, 38 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

எதிர்ப்பு வெளியிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் நிலத்தில் வீழ்த்தப்பட்டு பின்புறமாக கைகள் கட்டப்பட்டனர். ஒட்டாவாவில் இந்த நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

கனடா வரலாற்றில் மிகப்பெரிய பொலிஸ் நடவடிக்கையாக இது உள்ளது. சில ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மிளகாய் தூள் வீசப்பட்டதை பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு எதிராக கட்டாய தடுப்பூசி மற்றும் கட்டுப்பாடுகளை எதிர்த்து கனடா லொரி ஓட்டுநர்களே வாகனங்களை நிறுத்தி தலைநகரில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கான் கிணற்றில் சிக்கிய ஆறு வயது சிறுவன் மரணம்



ஆப்கானிஸ்தானில் கிணறு ஒன்றில் நான்கு நாட்கள் சிக்கி இருந்த சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்

ஹைதர் என்ற அந்த ஆறு வயது சிறுவனை மீட்பாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மீட்டு வெளியே கொண்டுவந்தனர். எனினும் அவன் மீட்கப்படும்போதே மூச்சு இன்றி காணப்பட்டதாக செய்தியாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

நாட்டின் தெற்கில் சபுல் மாகாணத்திலேயே அந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவசர மருத்துவ உதவிக்காக தலைநகர் காபுலுக்கு அந்த சிறுவன் ஹெலிகொப்டரில் அழைத்துச் சென்ற நிலையில் அவன் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஷொகாக் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வீதியில் இருந்து தவறியே சிறுவன் கிணற்றுக்குள் விழுந்துள்ளான். கிணற்றின் அடிப் பகுதியில் குறுகலான 80 அடி ஆழத்தில் அந்த சிறுவன் சிக்கியுள்ளான். மீட்பாளர்கள் பள்ளம் ஒன்றைத் தோண்டியே சிறுவனை அடைந்துள்ளனர்.

ஆழ்துளை கிணற்றில் சிக்கிய மொரோக்கோ நாட்டு சிறுவன் உயிரிழந்து சில வாரங்களிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## கடற்கரையில் விழுந்த ஹெலி



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் வானில் பறந்து கொண்டிருந்த ஹெலிகொப்டர் திடீரென கடற்கரையில் விழுந்து விபத்துக்குள்ளானது.

மியாமி கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்த பொது மக்கள், மற்றும் ஸ்கை டைவிங்கில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் அருகே ரொபின்சன் நிறுவனத்தின் ஆர் 44 இலகு ரக ஹெலிகொப்டர் விழுந்தது.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரித்து வருவதாகவும், ஹெலிகொப்டரில் பயணித்த மூன்று பேரில் இருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து குறித்த வீடியோ இணையத்தில் வெளியாகி வேகமாக பரவி வருகிறது.

## சிறுத்தைகளை இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கு திட்டம்



சிறுத்தைகளை இடம் மாற்றுவதற்கான ஏற்பாடுகள் குறித்து நமிபிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்தியாவில் இருந்து தூதுக்குழு ஒன்று அந்நாட்டுக்கு பயணித்திருப்பதாக இது தொடர்பில் அறிந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

தேசிய புலிகள் பாதுகாப்பு அதிகாரசபை, சுற்றுச்சூழல் அமைச்சு, இந்தியாவின் வனவிலங்கு நிறுவனம், மத்திய பிரதேச அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுக்குழுவே இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளது. இதில் பொருத்தமான சிறுத்தைகளை அடையாளம் கண்டு சுகாதார ஆய்வுக்கு உட்படுத்தி அவைகள் இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கு தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த சிறுத்தைகள் மத்திய பிரதேசத்தின் குனோ தேசிய பூங்காவுக்கு இடம் மாற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“இந்த செயற்பாட்டுக்கு எத்தனை காலம் எடுத்துக் கொள்ளும் என்று எம்மால் கூற முடியாது. முதலில் ஏற்பாட்டு வேலைகளை செய்ய வேண்டி உள்ளது” என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## சோமாலியா: தற்கொலை தாக்குதலில் 13 பேர் பலி



சோமாலியாவில் உள்ளூர் தேர்தல் ஒன்றுக்கு முன் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் குறைந்தது 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய நகரான பெலெட்வைன் நகரில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் கூடும் விடுதி ஒன்றில் கடந்த சனிக்கிழமை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஹசன் திப் விடுதியில் மக்கள் மரங்களுக்குக் கீழ் திரண்டு பகலுணவை சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் திறந்த வெளியில் பாரிய வெடிப்பு இடம்பெற்றதாக பார்த்தவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் தற்போது இடம்பெற்று வரும் சோமாலிய பாராளுமன்ற தேர்தலின் வேட்பாளர் ஒருவரும் கொல்லப்பட்டிருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு அல் ஷபாப் போராட்டக் குழுவினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த இஸ்லாமியவாதக் குழு சோமாலிய அரசுடன் ஒரு தசாப்தத்திற்கு மேல் போராடி வருவதோடு நாட்டின் சில பகுதிகளில் தமது பலத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

## எத்தியோப்பியாவில் நைல் நதி அணையில் மின்சார உற்பத்தி



எத்தியோப்பியா, நைல் நதியில் கட்டப்பட்டுள்ள மிகப் பெரிய அணையில் இருந்து மின்சார உற்பத்தியை நேற்று அதிகாரபூர்வமாக ஆரம்பித்தது.

கிராண்ட் எத்தியோப்பியன் மறுமலர்ச்சி அணையை நாட்டின் பிரதமர் அபி அகமது மின்னணுத் திரை வாயிலாக திறந்துவைத்தார்.

3.7 பில்லியன் யூரோ செலவில் உருவான இத்திட்டம் குறைந்தது 5,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது எத்தியோப்பியாவின் மின்சார உற்பத்தியை இரட்டிப்பாக்கும் எனவும் நம்பப்படுகிறது.

இந்தப் பெரிய அணை எத்தியோப்பியர்களால் கட்டப்பட்டது. தற்போது அனைத்து ஆபிரிக்க மக்களும் இந்த அணையால் பயனடைய உள்ளதாக அரசாங்கம் தெரிவித்தது.

எத்தியோப்பியாவின் அண்டை நாடுகளான எகிப்து, சூடான் ஆகியவை நைல் நதிநீரைச் சார்ந்திருப்பதால் இந்த அணையைப் பெரும் அச்சுறுத்தலாகவே கருதுகின்றன.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 21 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්


**தொழுகை நேரம்**

18முதல் 24 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.11 |
| லுஹர் | 12.26 |
| அஸர் | 03.47 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.33 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 9

ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: சித்தஅமிர்த யோகம்

திதி: பஞ்சமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | செலவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | நிறைவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# நெல்லியடியில் நடந்த சு.க யாழ். மாவட்ட மாநாடு





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட மாநாடு நேற்று நெல்லியடி கொலின்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் உப செயலாளருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியும்,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, இராஜாங்க அமைச்சரும், கட்சியின் பொதுச் செயலாளருமான தயாசிறி ஜயசேகர, அமைச்சர்களான நிமல் சிறிபால டிசில்வா, துமிந்த திசாநாயக்க மற்றும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன், சாந்த பண்டார உள்ளிட்ட கட்சியின் பிரமுகர்கள் கலந்து கொண்டுள்ளதையும் பொதுமக்கள் மற்றும் ஆதரவாளர்களையும் படத்தில் காணலாம்.

---

தெற்காசிய வலய நாடுகளில்:

## மிகக் குறைந்த எரிபொருள் விலை இலங்கையில் மட்டுமே

**மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தெற்காசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையிலேயே மிகவும் குறைந்த விலையில் எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நீண்ட காலமாக எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படாமையே அதற்கான காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை அமெரிக்க டொலர் என்ற ரீதியில் பார்க்கும்போது 0.88 டொலராகவும் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 0.66 டொலராகவும் விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்து வரும் நிலையில் நாட்டில் எரிபொருள் விலைகளை அதிகரிப்பதற்கான 06

---

சிங்கப்பூருடன்

## நீதித்துறை ஒத்துழைப்பு குறித்து அமைச்சர் அலி சப்ரி ஆராய்வு



சிங்கப்பூர் சட்ட அமைச்சர் கே.சண்முகத்தின் அழைப்பின் பேரில் நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான உயர்மட்டக் குழு அண்மையில் சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டது. இந்த விஜயம் வெற்றிகரமாக அமைந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது அமைச்சர் அலி சப்ரி, அமைச்சர் கே.சண்முகத்தை சந்தித்து பேசினார்.

சட்டத்துறையில் இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்து இருவரும் ஆராய்ந்தார்கள்.

இந்த விஜயத்தின் போது அமைச்சர் மத மறுசீரமைப்பு குழு (RRG) அலுவலகத்திற்கு விஜயம் செய்தார். உள்துறை 06

---

## கச்சதீவு திருவிழாவில் பக்தர்களுக்கான அனுமதி

**ஜனாதிபதியுடன் கதைத்து முடிவை அறிவிப்பேன் – அமைச்சர் டக்ளஸ்**



கச்சதீவு திருவிழாவில் பக்தர்களை அனுமதிப்பது தொடர்பில் இன்னும் சில தினங்களில் ஜனாதிபதியுடன் கதைத்து முடிவை அறிவிப்பேன் என கடற்றொழில்அமைச்சர்டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் – பாசையூர் கடல் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அடையாள விளக்கு கோபுரத்தின் செயற்பாடுகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்பதாக யாழ்ப்பாணம் – பாசையூர் கடல் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அடையாள விளக்கு கோபுரத்தின் செயற்பாடுகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுமாலை இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராக சிறீகஜன், செயலாளராக ஜெயேந்திரன் தெரிவு



தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவிற்கான பொதுக்கூட்டம் நேற்று கொழும்பு தமிழ்ச் சங்க கலாவினோதன் மண்டபத்தில் முன்னாள் தலைவர் ஆர்.சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன் போது புதிய நிர்வாக சபைத் தலைவராக எஸ்.சிறீகஜன் தெரிவு செய்யப்பட்டதோடு உபதலைவர்களாக யாழ். தர்மினி பத்மநாதன் மற்றும் லியோ நிரோஷ தர்ஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். செயலாளராக கே.ஜெயேந்திரன் உப செயலாளராக சு. சிவசண்முகநாதனும் தெரிவானார்கள்.

பொருளாளராக ப. விக்னேஸ்வரனும் உப பொருளாளராக எஸ். வாஸ் கூஞ்ஞையும் நியமிக்கப்பட்டார்கள்.

ஆர். சிவராஜா, எஸ். அனந்த பாலகிட்ணர், என். ஜெயகாந்தன், வி. பிரியதர்ஷன், ஆர். சேதுராமன், கி. லக்ஸ்மன் சிசில், பிரியங்கா சந்திரசேகரம், 06

---

## கட்சி அரசியலில் இருந்து ஒதுங்கி தேசிய அரசியலுக்கு வர வேண்டும்

**நாட்டுக்காக ஒத்துழைக்க தயார் என்கிறார் மனித நேயக் கட்சி தலைவர் டொக்டர் சந்திமா**

**ஷம்ஸ் பாஹிம்**

இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக முன்னேற்ற வேண்டுமாயின் கட்சி அரசியலில் இருந்து விலக வேண்டும் என இலங்கை மனித நேயக் கட்சியின் தலைவர் டொக்டர் சந்திம விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கட்சி அரசியலில் இருந்து தேசிய அரசியலுக்கு மக்களை தூண்ட வேண்டும் எனவும் இளைஞர் சமூகம் மற்றும் இலங்கையிலுள்ள பெரும்பான்மையான பெண்களின் ஆதரவைப் பெற்று, அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு பதில் தேட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கை மனிதநேயக் கட்சி உருவாக்கப்பட்டது தொடர்பாக கொழும்பில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தற்போது அரசாங்கம் பல பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது. இந்தச் சவால்களில் இருந்து விடுபடுவதற்கு இந்நாட்டின் கற்ற மக்களின் ஆதரவைப் போன்று பெரும்பான்மையான இளைஞர்கள் மற்றும் பெண்களின் ஆதரவையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். தற்போது டாலர் பற்றாக்குறையை சந்தித்து வருகிறோம். இந்நிலையிலிருந்து ஓரளவு விடுபட வேண்டுமானால், தேவைக்கேற்ப பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். பெண்கள் தாங்கள் விரும்பும் பயிர்களை வளர்க்க முயற்சிக்க வேண்டும். சிக்கனம் மிகவும் முக்கியமானது. இந்த சூழ்நிலையிலும் வீடுகளில் உணவுப்பொருட்கள் வீணாக்கப்படுகின்றன. தேவையற்ற வீண் விரயத்தையும் தவிர்க்கலாம்.

74 ஆண்டுகளாக வளரும் நாடு என்று முத்திரை குத்தப்பட்டுள்ளோம். எங்களின் நோக்கம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது அல்ல, நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான். இந்நாட்டின் துன்புறும் பெண்களுக்கு அதிகாரம் 06

---

## "பூஸ்டர்" தடுப்பூசி வெற்றியளிப்பின் முகக்கவசத்திற்கு விடை கொடுக்கலாம்



பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டதன் பின்னர் நாட்டில் உள்ள அனைத்து மக்களினதும் நோயெதிர்ப்பு திறன், எதிர்பார்க்கும் மட்டத்தை அடையும் பட்சத்தில், முகக்கவசம் அணிவதை தவிர்ப்பதற்கும், விழாக்களை நடத்துவதற்கும் அனுமதித்து நாட்டை முழுமையாக திறப்பதற்கு தயாராக உள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று மேலும் 1,273 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து, நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 35 ஆயிரத்து 606 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன் நேற்று மேலும் 20 கொரோனா இறப்புகள் பதிவாகியுள்ள நிலையில், நாட்டில் மொத்த கொரோனா இறப்பு எண்ணிக்கை 15 ஆயிரத்து 969 ஆக உயர்ந்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, கொரோனா அவசர சிகிச்சை மையங்களின் வசதிகளை 06

---

## எரிபொருளுக்கான தட்டுப்பாடு மீண்டும் ஏற்பட வாய்ப்பு

**நிவர்த்தி செய்யும் தீவிர முயற்சியில் அரசு**



எதிர்வரும் நாட்களில் எரிபொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படக் கூடிய நிலை காணப்படுவதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 37, 300 மெற்றிக் தொன் பெற்றோல் அடங்கிய கப்பல் ஒன்று நேற்று நாட்டை வந்தடையவிருந்தது. அத்துடன் இன்றைய தினம் 37, 500 மெற்றிக் தொன் அடங்கிய கப்பல் ஒன்று நாட்டை வந்தடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும் என வலுசக்தி அமைச்சு அறிவித்திருந்தது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது எனத் தொடர்ந்தும் உறுதியளிக்க முடியாத நிலை உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதமும் ஜூன் மாதமும் தெரிவித்த விடயங்கள் தற்போது 06

---

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும்

## பிரிவினைவாத எண்ணத்தில் நாட்டில் சிலரது செயற்பாடு

**முறியடிக்க வேண்டும் என்கிறார் ஞானசார தேரர்**



பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும், பிரிவினைவாத எண்ணத்தை முறியடிக்க வேண்டிய பொறுப்பு இன்னும் நமக்கு உள்ளது என “ஒரே நாடு – ஒரே சட்டம்” ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

அதற்காக, அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளுடன் இணைந்து பயணிக்கத் தமது குழு தயாராக உள்ளதென்றும் அவர் கூறினார். ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, பல்கலைக்கழக சமூகத்தின் கருத்துக்களைக் கேட்டறியும் நிகழ்வு, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு, ருஹுணு, ஜயவர்தனபுர, யாழ்ப்பாணம், தென்கிழக்கு, பேராதனை, களனி, ரஜரட்ட, வயம்ப உள்ளிட்ட 06

---

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

ஒரு காரியத்தை ஒருவர் எப்படி செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## மின்நெருக்கடியிலிருந்து மீள்வதாயின் வீண்விரயங்களைத் தவிர்ப்பதே வழி

நாட்டில் மின்வெட்டை நடைமுறைப்படுத்துவதற்கான அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. கொவிட் தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக நாட்டுக்கு போதியளவு எரிபொருள் வந்து சேருவதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. அதன் விளைவாக மின்சார உற்பத்தியில் நெருக்கடி உருவாகியுள்ளது. எனவே மின்சார விநியோகத்தில் மக்கள் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கொவிட் நிலைமையினால் டொலருக்கு பற்றாக்குறை நிலவுவதாலேயே மின்சார உற்பத்தியில் நெருக்கடியான நிலைமை ஒன்றை எமது நாடு கடந்து செல்ல வேண்டியுள்ளது. இந்த நெருக்கடியானது சிறிது காலத்துக்கே தொடரும் என்றும், அதன் பின்னர் நிலைமை சீரடைந்து விடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சனத்தொகை அதிகரிப்பின் விளைவாகவும், கைத்தொழில் பொருளாதாரத் துறையின் முன்னேற்றம் காரணமாகவும் மின்சாரத்தின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. முன்னர் எமது நாட்டின் மின்சாரத்தேவையில் 100 சதவீதத்தையும் நீர்மின்சார உற்பத்தி மூலம் எம்மால் ஈடு செய்ய முடிந்தது. ஆனால் நாட்டின் மின்சாரத் தேவை படிப்படியாக அதிகரித்துச் சென்றதனால் நீர்மின்சார உற்பத்தி நாட்டிற்கு தற்போது போதுமானதாக இல்லை.

இலங்கையின் மொத்த மின்சாரத் தேவையில் இருபது சதவீதத்தை மாத்திரமே நீர்மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து தற்போது பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மீதியான மின்சாரத்தை நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தில் இருந்தும், திரவ எரிபொருள் மூலமான ஜெனரேட்டர் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்துமே நாம் பெற்றுக் கொள்கின்றோம்.

நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தில் அவ்வப்போது ஏற்படுகின்ற கோளாறு காரணமாக மின்விநியோகம் தடைப்பட்டுப் போகின்றது. அவ்வேளைகளில் திரவ எரிபொருள் மூலமான மின்பிறப்பாக்கிகளில் இருந்தே நாட்டின் தேவைக்கான பெருமளவு மின்சாரம் பெறப்படுகின்றது. இதன் காரணமாகவே நாட்டின் மின்சார உற்பத்திக்காக எரிபொருளுக்கான செலவினம் அதிகளவில் ஏற்படுகின்றது.

மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரை திரவ எரிபொருளைப் பயன்படுத்தி மின்உற்பத்தி செய்வதென்பது நாட்டுக்கு பெரும் சுமையாக உள்ளது. இந்த நிலைமையில் இருந்து படிப்படியாக நாம் விடுபட வேண்டியது அவசியமாகும். மின்சக்தி பிறப்பாக்கத்தில் உலகின் பலநாடுகள் மாற்று வழிகள் தொடர்பாக கவனம் செலுத்தி வருகின்றன. ஜப்பான் உற்பட சில நாடுகளில் அணுசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியா போன்ற சில நாடுகளில் சூரியப்படல், காற்றாலை போன்றவற்றின் மூலம் கணிசமான அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இலங்கையில் அணுசக்தி மூலமான மின்சார உற்பத்தி குறித்து இன்னும் யோசனை எதுவும் முன்வைக்கப்படவில்லை. ஆனால் காற்றாலை மற்றும் சூரியப்படல் போன்றவற்றின் மூலம் குறைந்தளவான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இவ்விரு முறைகள் மூலமான மின்சார உற்பத்தி குறித்து நாம் இனிமேல் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நிலைமையில் உள்ளோம்.

உலகின் எரிபொருள் வளம் என்பது மட்டுப்படுத்தப்பட்டதாகும். எதிர்காலத்தில் உலகில் எரிபொருள் வளம் குறைந்து கொண்டு செல்லுவதற்கான வாய்ப்பே காணப்படுகின்றது. எனவே மின்சார உற்பத்திக்காக திரவ எரிபொருளில் தங்கியிருப்பது என்பது எக்காலமும் சாத்தியமாகப் போவதில்லை. எரிபொருளுக்காக எக்காலமும் பெருமளவு நிதியை செலவிட்டுக் கொண்டிருக்கவும் முடியாது.

மின்சார நெருக்கடியில் இருந்து நாம் மீள்வதாயின் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் மீதே இனிமேல் கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவில் தனியார் பலர் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து தங்களது சுயதேவைக்குப் பயன்படுத்துவதுடன் அம்மின்சாரத்தை அரசாங்கத்துக்கு விற்பனை செய்தும் வருகின்றனர். சூரியப்படல் மூலம் ஏராளமானோர் தங்களது வீட்டுத்தேவைக்கான மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியை அரசுக்கு விற்பனை செய்தும் வருகின்றனர்.

இதுபோன்ற மாற்று வழிகள் குறித்து இலங்கை எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அரசாங்கத்தினால் மன்னார் பகுதியில் காற்றாலை மின்உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புத்தளம், அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களிலும் காற்றாலை மூலம் மின்உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இவற்றைத் தவிர மக்கள் பலர் தமது வீடுகளில் சூரியப்படல் உபகரணங்களை பொருத்தி தங்களுக்கான மின்சாரத் தேவையில் சிறுபகுதியை பூர்த்தி செய்து வருகின்றனர்.

இவையெல்லாம் குறைந்த அளவிலேயே செயற்படுத்தப்படுகின்றன. இவ்வாறான புதுப்பிக்கத்தக்க மாற்றுவழிகளை ஊக்குவிப்பதற்கு பரந்தளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். இவை ஒருபுறமிருக்க எமது நாட்டில் மின்சாரப் பாவனையில் வீண்விரயங்கள் அதிகமாகவே உள்ளன. மின்சாரத்தில் இயங்கும் உபகரணங்கள் புதிது புதிதாக நாட்டுக்குள் வந்து சேருவதனால் மின்சாரத்தின் தேவையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு எமது நாட்டில் பெரும்பாலான மக்களிடம் இல்லாத காரணத்தினால் மின்சார நெருக்கடி ஏற்படுவதை தவிர்ப்பது இயலாத காரியமாகவே உள்ளது. எனவே புதுப்பிக்கத்தக்க சக்திவளங்கள் மீதும் மின்சார சிக்கனம் தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்துவது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# தாய்மொழிப் புலமை உள்ளவராலேயே முழுமையான மனிதராக திகழ முடியும்

அப்போதைய கிழக்கு பாகிஸ்தானின் தலைநகர் டாக்காவில் 1952ம் ஆண்டு, வங்கதேச மொழியைஆட்சி மொழியாக்க கோரி பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். அப்போது, மாணவர்கள் சிலர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தாய்மொழிக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்த மாணவர்களின் நினைவாக 2000 ஆம் ஆண்டு முதல், ஆண்டு தோறும் பெப்ரவரி 21 ஆம் திகதி சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாப்பட்டு வருகிறது. 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உலகில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் பேச்சுவழக்கில் இருப்பதும், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் அழியும் தறுவாயில் இருப்பதும் கண்டறியப்பட்டன.

இதையடுத்து அனைத்து மொழிகளையும் பாதுகாக்க ஏதுவாக தாய்மொழி தினத்தன்று விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு, இன்று உலகெங்கும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மொழிக்கும் அந்த மொழிக்கே உரிய சிறப்புத் தன்மைகள் உள்ளன. ஒவ்வொரு இனக் குழுவுக்கும் அடையாளமாக இருப்பது அவர்களின் தாய்மொழி. தாய்மொழியைக் கற்றுக் கொள்வது இயல்பான, எளிமையான செயல். தாய்மொழியைக் கற்றுக் கொள்ளாமல் ஓர் அயல் மொழியையோ, குடியேற்ற மொழிகளையோ கற்றுக் கொள்ள முயற்சிப்பது அறியாமை.

ஒவ்வொரு மொழிக்கும் சில தனித்தன்மைகள் உள்ளன. தாய்மொழியில் உள்ள அனைத்தையும் பிற மொழிகளில் மொழி பெயர்த்து விட முடியாது. உதாரணமாக, தமிழில் 'மனம் குளிர வரவேற்கிறோம்' என்ற சொற்றொடரை ஆங்கிலத்தில் 'Warm Welcome' என்று மொழிபெயர்க்கும் போது அதன் பொருளே மாறுபட்டு விடும்.

எழுத்தறிவிற்கு தாய்மொழிக் கல்வி மிக அவசியம். ஆபிரிக்க நாடான கானாவில் நடைபெற்ற ஓர் ஆய்வில், பிறமொழிக் கல்வி கற்றவர்களை விட, தாய்மொழிக் கல்வி கற்றவர்களுக்கு 40 சதவீதம் எழுத்தறிவுத்திறன் அதிகமாக இருக்கின்றது என்பது உறுதியாகி இருக்கின்றது. எவராவது தாய்மொழிக் கல்வியினை புறக்கணித்தால் அவர்கள் தாய்மொழியில் புலமை பெற்றவர்களாக இருக்க மாட்டார்கள் அத்துடன் அவர்களால் எந்த மொழியிலும் துல்லியமான சொற்களைக் கொண்டு தங்களுடைய கருத்துகளை ஆழமாக சொல்ல முடிவதில்லை. இலக்கியமாகட்டும், அன்றாட வாழ்வியலாக இருக்கட்டும், அரசியலாக இருக்கட்டும், அறிவியலாக இருக்கட்டும்... துல்லியமாக பேச, எழுத, கேட்டு புரிந்து கொள்ள திறமை உடையவர்களாக இருத்தல் அவசியம்.

தமிழ்மொழியின் சிறப்பு பற்றி இங்கு கூற வேண்டுமெனில் தமிழறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பி "தமிழின் சிறப்பு அதன் தொன்மையில் இல்லை, அதன்

### காலமாற்றத்தின் சவால்களால் அருகிப் போகாமல், தன்னை தகவமைத்துக் கொண்டு நிலைத்து நிற்பது தமிழ்மொழி

தொடர்ச்சியில் இருக்கிறது" என்று கூறுவார். ஆகவே, தமிழ் மொழியின் மேன்மை அதன் தொன்மையிலும், தொடர்ச்சியிலும் இருக்கின்றது என்பதே அவரது கருத்தாகும்.

இரண்டாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட மரபுடையது நம் தமிழ்மொழி, இந்த மரபு உலகத்தில் வெகு சில மொழிகளுக்கு மட்டும்தான் உண்டு. கிரேக்க மொழிக்கு இந்த சிறப்பு உண்டு, ஆனால் தொன்மையான கிரேக்க மொழியின் இலக்கியத்தை இன்றைக்கு அவர்களால் எளிதாக கற்றுக் கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ முடியாது.

ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியமான திருக்குறளை இப்போதும் புரியும்படியாக வாசித்தறிய முடிகின்றது. திருக்குறளில் உள்ள சொற்கள் பல நம்முடைய இன்றைய வாழும் மொழியிலும் இருக்கின்றன. இந்த அளவிற்கு தொடர்ச்சியான மரபுடைய மொழிகள் உலகத்தில் இல்லவே இல்லை என்று சொல்லலாம்.

சீன மொழியான மண்டரின், அரபு மொழி என தொன்மையான மொழிகள் எதனை எடுத்துக் கொண்டாலும் அதனுடைய தொடர்ச்சி அறுந்து போயிருக்கின்றது. வடமொழியினை எடுத்துக் கொண்டால் அது வாழும் மொழியாக இல்லை. எபிரேய மொழியினை புதுப்பித்துக் கொண்டு இருக்கின்றார்கள், அதன் தொன்மையை மீண்டும் கொண்டு வர முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் தமிழில் அறுபடாத தொடர்ச்சி இருக்கின்றது. இடையில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் குறைந்தது 500 ஆண்டுகள் அந்நியர் ஆதிக்கத்தில் இருந்தன. அப்படி இருந்த போதிலும் தமிழ் மொழி எந்த விதமான அரசின் துணையும் இல்லாமல் மக்களால் மட்டுமே தொடர்ச்சியாக உயிர்ப்புத்தன்மையுடன் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருக்குறளோ, சங்க இலக்கியங்களோ எதுவாயினும் ஒவ்வொரு தலைமுறையும் , அடுத்த தலைமுறைக்கு இந்த இலக்கியங்களை கொண்டு போய் சேர்க்க வேண்டும்




என்ற விழிப்புணர்வோடு செயல்பட்டு இருக்கின்றனர். நாம் புதியதாக கற்றுக் கொள்ளும் மொழி நம்முடைய தாய்மொழியாக மாறப் போவதில்லை. எப்பொழுதும் குடியேற்ற மொழிகள் அயல் மொழிகளாகத்தான் இருக்கும்.

தமிழ் நவீன காலத்திற்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்கின்றது. தற்கால தொழில்நுட்பங்கள் வளரத் தொடங்கிய காலத்தில், தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு வடிவமைத்து தமிழை புழங்கத் தொடங்கியவர்கள் தமிழ் பேசும் மக்கள்.

உலகமெங்கும் வாழும் தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய தனித்தன்மையில் இந்த நுட்பத்தை எடுத்து சென்றுள்ளனர். எந்த தொழில்நுட்பம் எடுத்துக் கொண்டாலும் ஏதாவது ஒரு தமிழ்மொழி பேசுபவர் அதில் தமிழை பயன்படுத்தும் வகையில் வடிவமைத்து வைத்திருப்பார். பெரியதாக அரசு, அதிகார உதவியில்லாமலேயே தமிழ் மொழி,தமிழர்களால்வளர்ந்துவந்திருக்கின்றது.

தாயைப் போலவே ஒவ்வொரு தாய்மொழியும் சிறந்தது. உலகத்தில் இப்பொழுது சுமார் 7,000 தாய்மொழிகள் பேசப்படுவதாக கூறப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் ஒன்றான பட்டினப்பாலையில் "மொழி பெயர் தேயத்து புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உரையின் முட்டாச் சிறப்பின் பட்டினம்" என்ற வரிகள் உள்ளன. இது ஒரு மிகசிறந்த பன்மையம் பற்றிய புரிதலுக்கான ஒரு அடையாளம் ஆகும். இந்த நாளில் நமது மொழியை நேசிக்கவும், பிற மொழி பேசும் மக்களை மதிக்கவும் கற்றுக் கொள்ள அனைவரும் உறுதியெடுக்க வேண்டும். மொழி பண்பாட்டினுடைய மிகப்பெரும் கருவூலம். உலகில் அடையாளம் காணப்பட்டுள்ள 6000 மொழிகளில் ஏறக்குறைய 43 சதவீத மொழிகள் அருகிவரும் நிலையில் உள்ளன. இதில் சில நூறு மொழிகள் மட்டுமே கல்வித்துறையிலும், அரசுத்துறையிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

100க்கும் குறைவான மொழிகள்தான் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படுகின்றன. உலக மயமாக்கலால் தாய்மொழிகள் வேகமாக அருகி வருகின்றன. மக்கள் தங்களது பாரம்பரிய அறிவினையும், பண்பாட்டினையினையும் நிலைநிறுத்திக் கொள்ள தங்களது தாய்மொழியினைக் காத்துக் கொள்வது அவசியம்.

மொழி என்பது மனிதர்களின் கல்வி, மேம்பாட்டுக்கு உதவும் தகவல் தொடர்புக் கருவி மாத்திரமல்ல, அது பண்பாட்டு அடையாளம். நமது மொழி குறித்து நமக்கு எவ்வளவு கவனம் தேவை என்பதையே இந்த நாளில் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

# அமைச்சுச் செயலாளராக இன்று பதவியேற்கும் திருமலை அரசாங்க அதிபருக்கு பிரியாவிடை

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய சமன் தர்சன பாண்டிகோராள அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கரும்பு, சோளம்,மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அதனோடு இணைந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளாராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து அவர் தமக்கான நியமனத்தை பெற்றுக் கொண்டார். இன்று திங்கட்கிழமை அவர் தமது கடமைகளை இராஜாங்க அமைச்சில் பொறுப்பேற்கின்றார்.

அரசாங்க அதிபருக்கான பிரியாவிடை வைபவம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

"திருகோணமலை மாவட்டம் பல அரிய வளங்களை கொண்டு அமைந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி மாவட்ட அபிவிருத்தி உட்பட நாட்டின் அபிவிருத்தியைக் கூட ஏற்படுத்த முடியும். அதற்காக அரச உத்தியோகத்தர்களும் அரசியல் தலைமைகளும் பொறுப்புடன் செயற்படல் வேண்டும். குறுகிய காலமே எனக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்ற சந்தர்ப்பம் கிட்டியது. நாட்டின் தேவை கருதி தேசிய ரீதியாக கடமையாற்ற எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் மூலம் திருகோணமலை மாவட்டத்திற்கு என்னாலான சேவைகளை வழங்குவேன்" என்று சமன் தர்சன பாண்டிகோராள தனது உரையின் போது தெரிவித்தார்.

"இம்மாவட்டம் யுத்தம், சுனாமி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை கொண்டு காணப்படுகின்றது. நான் அரசாங்க அதிபராக பதவியேற்ற நாள் தொடக்கம் மாவட்ட மக்களுக்கு உயர்ந்தபட்ச சேவையை வழங்கியுள்ளேன். குறிப்பாக மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் உட்பட ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் அதற்கு வலு சேர்த்தார்கள். அதற்காக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று பிரியாவிடை பெற்றுச் செல்லும் அரசாங்க அதிபரான சமன் தர்சன பாண்டிகோராள மேலும் தெரிவித்தார்.

"மூவின மக்களும் இணக்கமாக வாழ்கின்ற மாவட்டமே திருகோணமலை. மாவட்டத்தின் கல்விநிலை பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. கல்வியின் மூலம்தான் மாற்றங்களைக் கொண்டு வர முடியும். மாவட்ட கல்வி நிலையை மேம்படுத்த மாகாண சபையுடன் இணைந்து செயற்படல் வேண்டும். மாகாண சபைக்கு அந்த விடயத்தில் கூடிய வகிபாகம் உள்ளது. கல்வி அடைவு மட்டம் குறைவாக அமையும் போது பல பிரச்சினைகள் தோன்றும். எனவே இவ்விடயத்தில் உரிய துறைசார் அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி செயற்படுவதன் மூலம் மாவட்டத்தை ஏனைய மாவட்டங்களின் நிலைக்கேற்ப முன்னேற்றகரமான நிலைக்கு கொண்டுவர முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார்.


அரசாங்க அதிபர் திருகோணமலை மாவட்டத்திற்கு குறுகிய காலத்தில் ஆற்றிய அளப்பரிய பணிக்காக மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தினரால் கௌரவிக்கப்பட்டதுடன் பல நினைவுப்பரிசில்களும் இதன் போது அவருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அரசாங்க அதிபரின் பாரியார், புதல்வன்,மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ்,மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

எம்.ஏ.முகமட் ...

# அவுஸ்திரேலியாவில் எழுத்தாளர் சுந்தரமூர்த்தியின் நூல் வெளியீடு

அவுஸ்திரேலியாவில் மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக வசித்து வருகின்ற சமூகப்பணியாளரும், தமிழ் அமைப்புகள் பலவற்றில் அங்கம் வகித்திருப்பவருமான சபாரத்தினம் சுந்தரமூர்த்தி எழுதியிருக்கும் Dare to Differ நூலின் வெளியீட்டு அரங்கு இம்மாதம் 26 ஆம் திகதி (26. 02. 2022) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு மெல்பனில் Glen Waverley Community Centre மண்டபத்தில் (692724, Waverley Road, Glen Waverley 3150 ) நடைபெறவுள்ளது.




திருமதி பிருந்தா கோபாலனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் நூல்வெளியீட்டு அரங்கை, திருமதி பாக்கியம் அம்பிகைபாகர், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி தொடக்கி வைப்பர்.



அவுஸ்திரேலிய பூர்வ குடி மக்களை நினைவு கூர்ந்தவாறு, இலங்கை உட்பட உலகெங்கும் யுத்த சூழல் காரணமாக மறைந்தவர்களுக்கும் கொவிட் பெருந்தொற்றினால் உயிரிழந்தவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

எழுத்தாளர் லெ. முருகபூபதி, வழக்கறிஞர் ஜே. பிள்ளை ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து, எழுத்தாளர் சட்டத்தரணி 'பாடும் மீன் ' சு. ஸ்ரீகந்தராசா, கலாநிதி ஆனந்த ஜெயசேகரம், ஜூட் பிரகாஷ் ஆகியோர் நூல் நயப்புரை நிகழ்த்துவர்.

நூலாசிரியர் சபாரத்தினம் சுந்தரமூர்த்தி ஏற்புரை நிகழ்த்துவார். இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(tamilforumaustralia@gmail.com)

# லேக்ஹவுஸ் ஸ்தாபகர் டி.ஆர்.விஜேவர்தன அவர்களின் 136 ஆவது ஜனனதின நிகழ்வுகள்




















லேக் ஹவுஸ் ஸ்தாபகரான அமரர் டி.ஆர். விஜேவர்தன அவர்களின் 136 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை லேக் ஹவுஸ் நிறுவனத்தில் விசேட சமய வைபவங்களும், தானம் வழங்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மேற்படி நிகழ்வுகளின் போது நிறுவனத்தின் தலைவர், பணிப்பாளர் சபையினர், ஊழியர்கள் மற்றும் பௌத்த தேரர்கள் உட்பட பலரும் பங்கேற்றிருந்தனர்.

# ஒரே சட்டத்தால் ஆளப்படும் நாட்டை கட்டியெழுப்ப வேண்டியது அவசியம்

## 'ஒரே நாடு, – ஒரே சட்டம்' செயலணி முன்னிலையில் பல்கலைக்கழக சமூகம் கருத்து

உலகில் எந்தவொரு நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்படாத ஒரு கருத்தை கருப்பொருளாகக் கொண்டு, நாட்டுக்குள் பொதுச்சட்டத்தை நிறுவுவதற்கான அடித்தளத்தை அமைக்கும் அரசாங்கத்தின் முயற்சி பாராட்டுக்குரியது என பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் கலாநிதிகள் தெரிவித்தனர்.

'ஒரேநாடு ஒரேசட்டம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, பல்கலைக்கழக சமூகத்தின் கருத்துக்களைக் கேட்டறியும் நிகழ்வு, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (19) இடம்பெற்ற போதே, அவர்கள் இந்தப் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.



கொழும்பு, ருஹுணு, ஜயவர்தனபுர, யாழ்ப்பாணம், தென்கிழக்கு, பேராதனை, களனி, ரஜரட்ட, வயம்ப உள்ளிட்ட 18 பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைக்குள் 'ஒரேநாடு ஒரே சட்டம்' என்ற எண்ணக்கருவைச் செயற்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினர் கொண்டிருக்கும் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை அவதானத்துக்கு உட்படுத்தி, அவற்றை ஆராய்ந்த பின்னர் நாட்டுக்குள் செயற்படுத்தக் கூடிய கருத்துருவைச் சமர்ப்பிப்பதற்காக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டது.

அதற்காக, பல்கலைக்கழக சமூகத்தின் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் பலவும் இதன் போது முன்வைக்கப்பட்டதோடு, இந்தச் செயலணியினால் இதுவரை நடத்தப்பட்ட சந்திப்புகளில், இன்றைய சந்திப்பு மிகவும் முக்கியத்துவமிக்கதாக அமைந்திருந்ததென்று, செயலணியின் தலைவர் ராஜகீய பண்டித வணக்கத்துக்குரிய கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்தார். வளமானமண், வளமானநிலம், சுபீட்சம், நாகரிகம் மற்றும் கலாசாரத்தை மதிக்கும் சுதந்திர நாடொன்று எமக்கு அன்று உரித்தாக இருந்தது. ஏகாதிபத்தியவாதிகள் எங்களிடம் இருந்து பறித்த அந்த நாட்டை, நாம் அனைவரும் ஒன்றிணைந்து மீண்டும் கோர வேண்டுமெனவும் தேரர் தெரிவித்தார்.



## நாட்டுக்குள் பொதுச் சட்டத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு பாராட்டு

களத்தில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காண்பதற்கான புதிய அணுகுமுறையாகவே இந்தச் செயலணி முன்னோக்கி நகர்கின்றது என்றும் நல்ல நோக்கங்களை எழுத்துக்களில் மாத்திரம் வைத்திருப்பதில் பயனில்லை எனவும் அவற்றை வெற்றி கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும், பிரிவினைவாத எண்ணத்தை முறியடிக்க வேண்டிய பொறுப்பு இன்னும் நமக்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## செயலணி முன்பாக கருத்து தெரிவிக்க பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் ஆர்வம்

அதற்காக, அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளுடன் இணைந்து பயணிக்கத் தமது குழு தயாராகவே உள்ளதென்றும் தேரர் தெரிவித்தார்.



சர்வதேச சட்டங்களுடன் உள்நாட்டையும் இணைப்பது தேசியத் தேவையாக அடையாளம் காணப்பட வேண்டும். ஒரு சமூகத்துக்கோ அல்லது குறிப்பிட்ட சிலருக்கோ அநீதி இழைக்கும் வகையில் சட்டத்தில் முரண்பாடுகள் இருந்தால், அவற்றை உடனடியாக நீக்க வேண்டுமென்று, கொழும்பு சட்டபீடத்தின் பேராசிரியர் வசந்தா செனவிரத்ன தெரிவித்தார். அரசியலமைப்பு என்பது ஒரு மாய ஆவணமல்ல. அடிப்படைச் சட்டங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதைக் கருத்திற் கொண்டு, ஒரே சட்டத்தால் ஆளப்படும் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமென்றும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

பல்வேறு இனங்கள், கலாசாரங்கள் மற்றும் மொழிகள் காணப்படுவதென்பது, ஒரு நாட்டின் பலமாகவும் அந்நாட்டின் பெறுமதியாகவும் கருதப்படுகிறது. அதனால், எந்தவோர் இனத்தைச் சார்ந்த மக்களையும் புண்படுத்தாத சமூகநீதி மற்றும் சமத்துவத்துக்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் தேவை எழுந்துள்ளதென்றும் அவர் வலியுறுத்தினார். அத்துடன், ஒரேநாடு ஒரே சட்டம் தொடர்பான வேலைத்திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்காக, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தினது ஒத்துழைப்பை முழுமையாக வழங்குவதாகவும் பேராசிரிய ர்தெரிவித்தார். செயலணியின் முன்னால் கருத்துத் தெரிவிப்பதற்கு, பல்கலைக் கழக அறிஞர்கள் பெரும் ஆர்வம் காட்டினர்.

மாறிவரும் உலகை எதிர்கொள்ளும் வகையில் சட்டமும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று எடுத்துரைத்த அவர்கள், அதற்குத் தேவையான பொறிமுறையானது, இந்தச் செயலணி மூலம் முன்வைக்கப்படும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர்.

(06ஆம் பக்கம் பார்க்க)





ஸ்ரீலங்கா அச்சக சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த ' பிரிண்ட் 2022 ' கண்காட்சி 18 முதல் 20 வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அச்சுத்துறையில் அனுபவமுள்ள , ஆர்வமுள்ள வெளிநாட்டு உள்நாட்டு முக்கியஸ்தர்கள் பலர் இக் கண்காட்சியில் கலந்து கொண்டனர். (எம்.எம்.ஜெஸ்மின்)

## திறமையான சேவைக்கான...

மக்கள்தொடர்புப் பிரிவு உள்ளிட்ட மக்களுக்கு நேரடியாகச் சேவைகளை வழங்குப் பிரிவுகளின் பதவிகளுக்குப் புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் நிர்வாக ரீதியிலான மாற்றங்களின்போது பெயர்களைக் குறிப்பிட்டு, தவறான அர்த்தப்படுத்தல்களை வெளிப்படுத்த சில சமூக ஊடகங்கள் முயற்சித்து வருகின்றமை காணக்கிடைக்கிறது. அவை உண்மைக்குப் புறம்பானவை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## உடப்புஸ்ஸலாவயில்...

என்றும் வர்த்தக நிலையங்களில் இருந்த பொருட்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவற்றில், புடவை மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை நிலையங்களும் அடங்குவதாகவும், குறித்த வர்த்தக நிலையங்கள் தகரங்கள் மற்றும் பலகைகளால் அமைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து பல மணிநேர போராட்டத்தின் பின் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்ததாக தெரிவிக்கப்படுகிறது. தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத அதேவேளை, சேதவிபரங்கள் தொடர்பான மதிப்பீட்டு பணிகள் இடம்பெற்று வருகின்றன.சம்பவம் தொடர்பில் உடப்புஸ்ஸல்லாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொவிட் 19 பரவல்...

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சிறுவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக நான்கு விடுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வைத்தியசாலையில் தற்போது 80 சிறுவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். எவ்வாறாயினும், கொவிட்19, வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்கு உட்பட இதேபோன்ற நோய்கள் பரவுவதால் பெற்றோர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

## பஸ் கட்டணங்களையும்...

வழங்கப்பட வேண்டும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் ஒன்றிணைந்து போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐ.ஓ.சி.எண்ணெய் நிறுவனம் எரிபொருளின் விலையை அதிகரித்துள்ள காரணத்தினால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்க முயற்சிக்கிறது.

தற்போதைய நிலைமைக்கமைய கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்கும் சாத்தியம் அதிகளவில் காணப்படுகிறது.

எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டாலும் எதிர்வரும் ஜூன் மாதம் வரை பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் கடந்த மாதம் 3 ஆம் திகதி பஸ் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டது.

எரிபொருளின் விலை நிர்ணயத்தன்மையற்றதாக காணப்படும் பட்சத்தில் பஸ் கட்டணத்தை மாத்திரம் எவ்வாறு நிலையான தன்மையில் பேணுவது என்ற சிக்கல் நிலைமை தோற்றம் பெறுகிறது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருளின் விலையை அதிகரிக்கும் பட்சத்தில் பஸ் கட்டணத்தை குறைந்தபட்சமேனும் அதிகரிக்க வேண்டும் அல்லது எரிபொருள் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதை அனைத்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினரும் ஒன்றிணைந்து போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுப்பெற்றுக்கொடுக்குமாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## அரசிலிருந்து வெளியேறும் ...

கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாம் பொதுஜன பெரமுனவுடன் தேர்தலுக்கு முன்பதாக ஒப்பந்தங்களை மேற்கொண்டோம். சில இணக்கப்பாடுகளை செய்தோம். எனினும் தேர்தலுக்குப் பின்னர் நாம் செய்த சேவை எமது அர்ப்பணிப்பு எதிர்பார்த்தளவு கவனத்திற்கொள்ளப்படவில்லை. தேர்தலுக்கு முன்னர் சிலர் சஜித் பிரேமதாசதான் தேர்தலில் வெல்லுவார். நாம் அவருடன் இணைவோம் என ஆலோசனை கூறினர். அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெருமளவிலானோரின் கருத்து அதுவாகவே இருந்தது. நான் கட்சியின் செயற்குழுவில் கட்சியின் மாநாட்டின் போதும் பொதுஜனவுடனேயே நாம் இணையவேண்டுமென வலியுறுத்திக்கூறினேன்.

அதனையடுத்தே நாம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக ஒன்றிணைந்து உழைத்தோம்.அப்போதுநாம்பொதுஜனபெரமுனவுடன் சில உடன்படிக்கைகளை மேற்கொண்டோம். எனினும் தேர்தலுக்குப் பின்னர் அவை கணக்கிலெடுக்கப்படவில்லை. மக்கள் இந்த அரசாங்கத்திற்கு 5 வருட ஆட்சிக்காக வாக்களித்துள்ளனர். இந்தநிலையில் நாம் அவசரமாக எந்த தீர்மானத்தையும் எடுத்துக்கொண்டு நிர்க்கதிக்குள்ளாகும் நிலையை ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது. தொடர்ந்தும் அரசாங்கத்துடனிருந்து பிரயோசனமில்லையென இப்போதும் சிலர் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கும் ஆலோசனைகளை முன்வைக்கின்றனர். நாம் வெளியே சென்று என்ன செய்வது என நான் கேட்கவிரும்புகிறேன். ஜே.வி.பி.யினரைப் போன்று பதாகைகளை ஏந்திக்கொண்டு திரிவதா? இந்த அரசாங்கம் நாம் உருவாக்கிய அரசாங்கம். நாம் பொறுமையுடன் காத்திருக்கிறோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் முக்கியமான விடயங்களை அண்மையில் வெளியிட்டுள்ளனர். நடந்த தவறுகள் எதிர்காலத்தில் நடக்காது என உறுதியளித்து புதிய பயணத்தைத் தொடருவோம் என தெரிவித்துள்ளனர். நாம் அதை நம்புவோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## மின்சாரம் மற்றும்...

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அதன்படி, குளிரூட்டிகள் (ஏ/சி) மற்றும் தேவையற்ற விளக்குகள் நிறுவனங்களின் பயன்பாட்டை முடிந்தவரை குறைக்குமாறு அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு எரிபொருளை பயன்படுத்த வேண்டாம் என அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து அதிகாரிகளை கொழும்புக்கு வரவழைப்பதற்காக அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்துவது ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ரத்னசிறி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போதையில்...

கடந்த ஆண்டு 22 ஆயிரம் வாகன விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 2 ஆயிரத்து 470 பேர் உயிரிழந்தனர்.அத்துடன் குறித்த விபத்துகளில் 14 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.நாளாந்தம் வாகன விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதிகரித்து வரும் விபத்துகள் காரணமாக வீதிகளில் உடற்பயிற்சி செயற்பாடுகளில் ஈடுபடாமல் விளையாட்டு மைதானங்கள் மற்றும் நடைபாதை என்பவற்றை பயன்படுத்துமாறும் சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன அறிவுறுத்தியுள்ளார்.

## நாடளாவிய ரீதியில்...

போட்டிப் பரீட்சைக்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கிராமசேவகர்களுக்கான வெற்றிடங்கள் நிலவும் நிலையில் 2,3 கிராம சேவகர் பிரிவுகளை ஒருவரே நிர்வகிக்கும் நிலை உருவாகி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக பரீட்சைகள் திணைக்களம் கடந்த சில மாதங்களாக பெரும் வேலைப்பளுவுடன் காணப்படுகின்ற நிலையில் மேற்படி திறந்த போட்டிப் பரீட்சைக்கான திகதி ஒன்றை நிர்ணயித்துக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. விரைவில் அதற்கான தகுதியை பெற்றுக்கொள்ள முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

## நிதி அமைச்சரின்...

இரண்டாவது விஜயம் இதுவாகும். டிசம்பரில் பசில் ராஜபக்ஷ இந்தியா சென்றிருந்த நிலையில், “இந்தியாவிடமிருந்து 2.4 பில்லியன் டொலர் உதவியைப் பெற முடிந்தது எனவும், இதனால் பல பயனுள்ள விடயங்கள் நடைபெற்றதாகவும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் இந்தியாவின் தலையீடு மிகவும் சாதகமானது மற்றும் முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.“இந்தியாவுடன் எமது பொருளாதாரத்தை நெருக்கமாக ஒருங்கிணைப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும், எமது சுற்றுலாப் பயணிகளில் மூன்றில் ஒருபங்கு இந்தியாவிலிருந்து வந்தவர்கள்” என்றும் அமைச்சர் கூறினார்.

## மேலும் ஐந்து...

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றும் தொடர்ந்து வரும் நாட்களிலும் 5 எரிபொருள் கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளன. டீசல், பெற்றோல் மற்றும் விமானங்களுக்கான எரிபொருளை தாங்கிய கப்பல்களே அவையாகும்.

அதற்கிணங்க எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் என்ற பேச்சுக்கு இடமில்லை.

நாட்டின் எரிபொருள் தேவை 6000 மெட்ரிக் தொன்னாக உள்ளதுடன் தற்போது எரிபொருளுக்கான கேள்வி வெகுவாக அதிகரித்துள்ளது. அதற்கிணங்க தற்போது 9000 மெட்ரிக் தொன் எரிபொருள் தேவைப்படுகின்றது. (ஸ)

## சாவால்களை வெற்றிகொள்ளும்...

பீரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள ஜெனீவா கூட்டத்தொடரின் உண்மை நிலையையும் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதகமான நிலைமை குறித்தும் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களுக்கு அமைய அவற்றை எதிர்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட இலங்கை இராஜதந்திர குழுவிற்கு ஜனாதிபதி ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். மறுபுறம் இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் இம்முறை சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தின் வரைபும் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த தீர்மானத்தின் உள்ளடக்கமாக இரு முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது இறுதிக்கட்ட போரில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கான பொறுப்புக்கூறல் மீதான அரசாங்கத்தின் பாராமுகம் மற்றும் அண்மைய மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்களும் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே, ஜெனீவாவில் இம்முறை ஏற்பட கூடிய சவால்களை எதிர்கொள்ளஅரசாங்கம்பல்வேறுவழிகளில் முயன்று வருகின்றது. கடந்த அமர்வுகளை போல் அல்லாது எதிர்ப்பு நிலையிலிருந்து பின்வாங்கவும், ஒத்திசைவாக செயற்பட்டு நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும் விருப்பத்தை வெளிப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக முக்கிய தகவல் மூலங்கள் குறிப்பிடுகின்றன. அதிலும் இரு முக்கிய விடயங்கள் குறித்து அரசாங்கம் ஏற்கனவே அவதானம் செலுத்தியிருந்தது. அதாவது இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்பை முழு அளவில் பெற்று அதனூடாக தீர்மானத்திற்கு எதிராக வாக்கெடுப்பை கோரி தோல்வியடைய செய்தல் மற்றும் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புகளை பெற்று நெருக்கடிகளுக்கு தீர்வு காணுதல் என்பவையாகும்.

## இலங்கை குறித்து...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பெச்லெட் முன்வைக்கவுள்ளார். இந்த அறிக்கையின் பிரதி கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம், ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அந்த அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, இந்த அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ள நிலையில், அறிக்கைக்கான பதிலை இலங்கை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கட்சி அரசியலில் இருந்து...

அளிப்பதுடன், எதிர்கால இளம் தலைமுறையினரை நேர்வழியில் செலுத்துவதும் ஆகும்.பெருமளவிலான அறிஞர்கள் மற்றும் கல்விமான்கள் எமது கட்சியுடன் கைகோர்த்துள்ளனர். நாட்டுக்காக ஆற்ற வேண்டிய பங்கை நிறைவேற்றுவதே எமது கட்சியை உருவாக்கியதன் நோக்கம். பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதியாக வருவதோ வேறுநோக்கமோ கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

## "பூஸ்டர்" தடுப்பூசி... 03ஆம் பக்க தொடர்...

மேம்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இருப்பினும், தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் வெற்றியளித்துள்ளதையடுத்து, அவசர சிகிச்சை மையங்களில் அனுமதிக்கப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்துள்ளது என்று அவசர சிகிச்சைகளுக்கான விசேட வைத்தியர்களின் நிறுவகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருளுக்கான தட்டுப்பாடு... 03ஆம் பக்க தொடர்...

உறுதியாகியுள்ளன. இன்று பொருளாதார சிக்கலை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. இதற்கான தீர்வு தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி அறிவித்தேன்.

இதுவரையில் அது தொடர்பான கலந்துரையாடல் அரசாங்கத்துக்குள்ளும் நாட்டிலும் இடம்பெறவில்லை எனவும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரிவினைவாத எண்ணத்தில்... 03ஆம் பக்க தொடர்...

18 பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் போன்றோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

வளமான மண், வளமான நிலம், சுபீட்சம், நாகரிகம் மற்றும் கலாசாரத்தை மதிக்கும் ஒரு சுதந்திர நாடொன்று எமக்கு அன்று உரித்தாக இருந்தது. ஏகாதிபத்தியவாதிகள் எங்களிடம் இருந்து பறித்த அந்த நாட்டை, நாம் அனைவரும் ஒன்றிணைந்து மீண்டும் கோர வேண்டுமெனவும் இங்கு கருத்து வெளியிட்ட கலகொட அத்தே ஞானசார தேரர் கூறினார். களத்தில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காண்பதற்கான புதிய அணுகுமுறையாகவே இந்தச் செயலணி முன்னோக்கி நகர்கின்றது என்றும் நல்ல நோக்கங்களை எழுத்துக்களில் மாத்திரம் வைத்திருப்பதில் பயனில்லை. அவற்றை வெற்றிகொள்வதற்கு அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்திய தேரர், பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும், பிரிவினைவாத எண்ணத்தை முறியடிக்க வேண்டிய பொறுப்பு இன்னும் நமக்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மிகக் குறைந்த எரிபொருள்... 03ஆம் பக்க தொடர்...

கோரிக்கையை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்வைத்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அதற்கான கோரிக்கையை கடந்த வாரத்தில் நிதி அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ள நிலையில் நிதி அமைச்சிடமிருந்து இதுவரை அதற்கான பதில் கிடைக்கவில்லை என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பது அல்லது எரிபொருள் மீதான வரியை நீக்குவது என இரண்டு கோரிக்கைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதியமைச்சுக்கு முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## நீதித்துறை ஒத்துழைப்பு... 03ஆம் பக்க தொடர்...

அமைச்சர் பேராசிரியர் டாக்டர் முஹம்மது பைசல் இப்ராஹிமையும் அவர் சந்தித்தார்.

மறுவாழ்வுக்கு ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவத்துடன் மத தீவிரவாதத்தை கையாள்வதற்கான அணுகுமுறை குறித்து அமைச்சர் அலி சப்ரி இதன் போது விளக்கமளித்தார். சிங்கப்பூர் நீதிமன்ற செயற்பாடுகள் குறித்து இலங்கை குழுவுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இலங்கை அதிகாரிகளுக்கு இணைய வழியினூடாக நீதிமன்ற தன்னியக்க முறைமைகள் குறித்து அறிவூட்டவும் உடன்பாடு எட்டப்பட்டது. (பா)

## தமிழ் ஊடகவியலாளர் ... 03ஆம் பக்க தொடர்...

கே.ஹரேந்திரன், கே. பிரசன்ன குமார் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் வடமாகாண இணைப்பாளர் கணபதி சர்வானந்தா ,கிழக்கு மாகாண இணைப்பாளர் எஸ். சரவணன் மற்றும் மலையக இணைப்பாளர் சி.சிவகுமார் ஆகியோருடன் ஒன்றியத்தின் மேலதிக இணைப்பாளராக யாழ். தர்மினி பத்மநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த இரண்டு வருட கால கொரோனா நெருக்கடிநிலையின் பின் இடம்பெற்ற இக் கூட்டத்தில் பல ஊடகவியலாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே சட்டத்தால் ஆளப்படும்... (05ஆம் பக்கத் தொடர்)

ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான பயணத்தில், போதிய சட்ட அறிவு இல்லாதது ஒரு பிரச்சினையாக உள்ளதென்று எடுத்துக்காட்டிய பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய கல்விக் கொள்கை மூலம் அதைச் சரி செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மருத்துவ முதுகலை நிறுவனத்தின் பணிப்பாளர் டொக்டர் சமத்தர்மரத்ன, ருஹுணு பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கயத்திரிவி ஜேசுந்தர, ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் ஜே.எம்.எஸ்.பீ.ஜயசுந்தர, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசாரபீடத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை பிரிவின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான பேராசிரியர் எம்.ஏ.எம்.ஃபவுசர், வயம்ப பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அசங்க பல்லேகெதர, வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவிரிவுரையாளர் கயான் பண்டார, பேராசிரியரான சலீகா ஃபாருக், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் பீடாதிபதி சம்பத் புஞ்சிஹேவா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நிர்மால்தேவசிறி, பேராசிரியர் சர்வேஸ்வரன், சிரேஷ்ட பேராசிரியர் ஹலீம்அபூபக்கர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைப்பேராசிரியர் சரண்யா சாமித்தம்பி, களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எச்.எம்.நவரத்னபண்டா ஆகியோரும் இதன் போது கருத்துத் தெரிவித்ததோடு, Zoom தொழில்நுட்பத்தின் ஊடாகவும், பேராசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியானது, நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில், கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்று வருகின்றது.

மேலும், அச்செயலணியைத் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கிக் கொண்ட பல்வேறு அமைப்புகள் மற்றும் அவற்றின் உறுப்பினர்கள், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள செயலணியின் அலுவலகத்துக்குச் சென்று, தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

செயலணியின் உறுப்பினர்களான பேராசிரியர் சாந்திநந்தன விஜேசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் சுமேதவீரவர்தன, சட்டத்தரணி சஞ்ஜயமாரம்பே, சட்டத்தரணி இரேஷ் செனவிரத்ன, எரந்தநவரத்ன, பானீ வேவல, டொக்டர் சுஜீவபண்டிதரத்ன, அசீஸ்நிசார்தீன் ஆகியோரும் செயலணியின் செயலாளர் ஜீவந்தி சேனாநாயக்கவும் கலந்து கொண்டனர். **(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)**

## பொருட்களுக்கான தட்டுப்பாடுகள்...

பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம் நேற்று (20) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

" தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப்பகுதியில் தட்டுப்பாடின்றி மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கான சூழலை உருவாக்குவதற்காக நிதி அமைச்சர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த குழு வாராந்தம் கூடி நிலைமைகளை சீர்செய்து வருகின்றது. கடந்த காலங்களில் இருந்த முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. அரிசி, சீனி மற்றும் சமையல் எரிவாயுவுக்கு இருந்த தட்டுப்பாட்டு நிலை சரி செய்யப்பட்டுள்ளது.

ஏனைய பொருட்களுக்கு இருக்கும் தட்டுப்பாட்டு நிலையும் சீர் செய்யப்படும். ஆக, எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் நியாயமான விலைக்கு பொருட்களை வாங்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே செயற்பட்டு வருகின்றோம்.

பெருந்தோட்ட மக்களுக்கு தற்போது மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது சம்பந்தமாகவும் ஆராயப்படும்.

தேயிலை ஏற்றுமதி மூலம் எமக்கு அந்நிய செலாவணி கிடைக்கின்றது. உலக சந்தையில் சிறந்த கேள்வி உள்ளது. இதற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களே பங்களிப்பு வழங்கி வருகின்றனர்.

அதேவேளை, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சந்திரிக்கா அம்மையார், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன போன்ற ஜனாதிபதிகளின் கீழ் தொண்டமான் குடும்பம் செயற்பட்டுள்ளது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் மலையக மக்களுக்கு ஆற்றிய சேவைகளை மறந்துவிடமுடியாது. ரமேஷ் உள்ளிட்டவர்கள் அதற்கு உறுதுணையாக நின்றனர்.

தற்போது சிறந்த படித்த இளம் தலைவராக ஜீவன் தொண்டமான் செயற்பட்டுவருகின்றார் என்றார்.







தம்புள்ளை கலேவலே ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. ஆலயத்தின் அறங்காவலர் மனோகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த சிவாச்சாரியார்கள் முன்னின்று நடத்தியிருந்தார்கள்.

# மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு மானிய விலையில் கோதுமை மா







**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

"கண்கள் இருந்தும், பார்வையற்றவர்களாக வலம்வரும் சில அரசியல்வாதிகளே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒன்றும் செய்யவில்லை என விமர்சிக்கின்றனர். இப்படியானவர்களுக்கு சொல்லில் அல்லாமல் நாம் செயல்கள் ஊடாகவே பதிலளித்து வருகின்றோம்" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம் நேற்று (20.02.2022) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்குவதற்கு சுமார் ஆயிரம் தொன் மாவு தேவை. இவ்வாறு மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படுவதால் அரசுக்கு மாதம் ஆயிரத்து 200 லட்சம் ரூபா செலவு ஏற்படுகின்றது. வருடம் சுமார் 1400 பில்லியன் ரூபா செலவு ஏற்படுகின்றது. அரசுக்கு நிதி பற்றாக்குறை உட்பட பல பிரச்சினைகள் உள்ளன. அப்படி இருந்தும் பெருந்தோட்ட மக்களுக்கு இந்த அரசு நேசக்கரம் நீட்டுகின்றது. இதையும்கூட சிலர் இன்று விமர்சிக்கின்றனர். அமைச்சரவைக்கு சென்றது குறித்தும் நகைச்சுவையாக கதைக்கின்றனர். நல்லாட்சியின் போது 50 ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றனர். அது நடந்ததா? இல்லை. அதேவேளை, ஜீவன் தொண்டமான் ஒன்றுமே செய்யவில்லையென சிலர் விமர்சிக்கின்றனர். அவர்கள் நிச்சயம் குருடர்களாகவே இருக்க வேண்டும். சுயதொழில்ஊக்குவிப்பு உட்பட மலையகத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. மக்களை அடிப்படையாகக்கொண்டே நாம் செயற்படுகின்றோம். மாறாக கட்சி பேதம் எம்மிடம் இல்லை " என்றார்.

## வீட்டு அறைக்கு தீ மூட்டியதால் கள்ளக்காதலன் பலி மனைவி படுகாயம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

தனது மனைவி இன்னொருவருடன் படுக்கை அறையில் இருக்கும் போது அதற்கு கணவன் தீமூட்டியதால் மனைவியின் கள்ள காதலன் தீயில் கருகி மாண்ட சம்பவம் பலாங்கொடை பின்னவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இவரது மனைவி தீக்காயங்களுக்குள்ளானதால் ஆபத்தான நிலையில் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.


## பெறுகை அறிவித்தல்

களுத்துறை நகர சபை

### பொஹொரவத்த குப்பை களஞ்சியத்தில் குப்பை மற்றும் மண் சிறு துணிக்கையாக்குதல்

01. களுத்துறை நகர சபைக்கு சொந்தமான பொஹொரவத்த குப்பை களஞ்சியத்தின் குப்பைகள் மற்றும் மண் சிறு துணிக்கையாக்குதல் சார்பாக D4D இயந்திரமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல் சார்பாக கீழ்க்காணும் மாதிரிகளுக்கு அமைவாக கேள்வி தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- Gross power - 75HP min 90 max
- Length of blade - 10ft-12ft
- Fuel capacity - 200L - 250L
- உற்பத்தி ஆண்டு - 2000 ஆண்டிற்குப் பிறகு
- Number of track rollers for side - 5min
- Track Gauge - 5ft min
- Operation Weight - 13500 kg
- Ground Pressure - 40kpa
- மேற்படி மாதிரிகளுக்கு அமைவாதல் வேண்டும்
- சிறந்த செயற்பாட்டு நிலைமையில் உள்ளக இயந்திர பொறியியல் அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
- இயந்திர போக்குவரத்து (பொஹெர வத்த நாகொட குப்பைக் களஞ்சியத்திற்கு) இற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ஒருவருட சேவை ஒப்பந்தத்திற்கு உட்படல் வேண்டும்.
- எரிபொருள் மற்றும் சாரதியுடன் மீட்டர்/மணித்தியாலத்திற்கான கட்டணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்வி கோரப்படுவது தேசிய போட்டி முறைமையின் பிரகாரமாகும்.
03. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2022.02.21ம் திகதி முதல் அரச அலுவலக நாட்களில் 2022.03.14 வரையான காலத்திற்குள் களுத்துறை நகர சபை தலைமையகத்திற்கு வருகை தந்து செயற்றிட்டம் சம்பந்தமாக மேலதிக விபரங்களை வேலை அதிகாரி 034-2222273 இடம் பெற்றுக் கொள்ளலாம்.
04. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதியின் இடது பக்க மேல் மூலையில் 'D4D இயந்திரமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்' என்று குறிப்பிட்டு 2022.03.14 மு.ப. 10.00 இற்கு முன் 'தலைவர், களுத்துறை நகர சபை' என்ற முகவரிக்கு கேள்விப் படிவம்/கேள்வியை பொறியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
05. கேள்விப் பத்திரத்திற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 1000.00 உம் மீளளிக்கப்படும் கட்டணமாக ரூ. 20,000.00 உம் செலுத்தி 2022.02.21 முதல் 2022.03.13 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 வரை கேள்விப பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகைப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் இவ் அலுவலகத்தில் திறக்கப்படுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
07. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும் என்பதை தயவுகூர்ந்து கவனிக்கவும்.

**ஆமிர் நஸீர்,**
**தலைவர்,**
**களுத்துறை நகர சபை.**



## மத்திய சுற்றாடல் அதிகார சபை

***தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ உப பிரிவு (2) இன் கீழான அறிவித்தல்***

**ஜா-எல/ ஏக்கல உத்தேசிக்கப்பட்ட கழிவு நீரை அகற்றும் இரண்டாம் கட்டத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) அறிக்கை**

மத்திய சுற்றாடல் அதிகார சபையினது 1988ம் ஆண்டின் 56ம் இலக்க மற்றும் 2000ஆம் ஆண்டின் 53ம் இலக்க சட்டங்களால் திருத்தி அமைக்கப்பட்டவாறு 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (1)ற்கு அமைவாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட உத்தேச கருத்திட்டத்துக்கான சுற்றாடல் தாக்கமதிப்பீட்டு (சு.தா.ம) அறிக்கையானது பின்வரும் இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை 30 நாட்களுக்கு பொது மக்களின் பார்வைக்காக (ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர) பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து வைக்கப்பட்டுள்ளது.

1. பிரதேச செயலகம் ஜா-எல
2. நகர சபை, ஜா-எல
3. பிரதேச சபை, ஜா-எல
4. கம்பஹா மாவட்ட அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை. இல. 184/1, கண்டி வீதி, யக்கல.
5. தேசிய சுற்றாடல் தகவல் மையம், மத்திய சுற்றாடல் அதிகார சபை 'பரிசரபியச', 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
6. இணையம்: www.cea.lk

பொது மக்கள் எவரேனும் இவ்விளம்பர திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தமது கருத்துக்களை பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**'பரிசரபியச',**
**இல. 104, டென்சில்கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**



திகதி 18.02.2022 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4682 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 13,436,350.00 — ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 1 2 7 2 7 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 45,379,832.00

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் : 2977 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,477,580.00 — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 14 33 62 66 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,371,082.80

Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1030 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,032,560.00 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 236,681,010.00 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — ஆங்கில எழுத்து Q — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 03 24 64 76

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 712 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,039,700.00 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 19 28 47 63 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,898,974.40

ஹந்தஹன ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் : 0023 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,174,040.00 — இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 16 18 40 50 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,578,673.44

வாசனா சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் :1696 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,748,700.00 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 04 39 71 92 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,553,270.70

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 — பெக்ஸ்: 0114 669 416



திகதி 19.02.2022 சனிக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4683 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,866,910.00 — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 6 4 9 1 6 7 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 45,406,733.00

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் : 2978 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,128,000.00 — ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 21 28 40 63 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,535,554.80

Mega Power மெகா பவர் கோடி 23+ — சீட்டிழுப்பு இலக்கம் 1031 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,476,260.00 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 236,785,438.00 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — ஆங்கில எழுத்து Z — சுப்பர் இலக்கம் 17 — வெற்றி இலக்கங்கள் 04 23 27 80

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 713 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,840,360.00 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 03 20 34 38 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,098,882.40

ஹந்தஹன ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் : 0024 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,923,333.44 — இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 10 19 25 32 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1213 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,177,380.00 — வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 8 0 4 1 6 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,048,637.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 — பெக்ஸ்: 0114 669 416



## மாகாண விவசாயத் திணைக்களம் - சப்ரகமுவ மாகாணம்

### 2022/2023 ஆம் ஆண்டிற்கு பாதுகாப்புச் சேவைக்கான பெறுகை அறிவித்தல்

சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான கீழக்காணும் அலுவலகங்களுக்கு 2022.05.01 முதல் 2023.04.30 வரை பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு இலங்கை பிரஜைகளிடம் மற்றும் நிறுவனங்களில் இருந்து சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| சேவை | நிறுவனம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | வங்கிப் பிணை முறிக் கட்டணம் ரூ. | சொத்து சான்றிதழ் பெறுமதி ரூ. |
|---|---|---|---|---|
| பாது காப்பு சேவை யை வழங் குதல் | கேகாலை மற்றும் இரத்தினபுரி பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனை, எம்பிலிபிட்டிய, பலங்கொட நிவித்திகல, ருவன்வெல்ல மற்றும் கேகாலை உதவி விவசாயப் பணிப்பாளர் பணிமனை, வாகொல்ல மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் மாருக்வத்துர பண்ணை, பெமினிவத்த மத்திய நாற்றுமேடை, கரபிங்ச மாவட்ட விவசாயம் பயிற்சி நிலையம், ரஜவக சேவை ஒழுங்குபடுத்தல் பயிற்சி நிலையம் ஆகிய நிறுவனங்களுக்கு | 3500.00 | 108,500.00 | 600,000.00 |

01. கேள்விப் படிவங்கள் 2022.02.22 முதல் 2022.03.14 வரை அரச வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை மாகாண விவசாய பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
02. கீழ்க்காணும் ஆவணங்களை சமர்ப்பிக்கும் கேள்விதாரர்களுக்கு மட்டும் கேள்விப்படிவங்கள் விநியோகிக்கப்படும்.
   - தேசிய அடையாள அட்டை
   - 2022.02.22 அல்லது அதற்கு பிறகு பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளரின் கையொப்பத்துடனான பொது 170 மாதிரிப்பத்திரத்தின் சொத்துச் சான்றிதழ் அல்லது கம்பனியாக பதிவுசெய்து இருப்பின் கடந்த ஆண்டில் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரதிகள்

மேற்கண்டவாறு கேள்விப்படிவக் கட்டணத்தை மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு

03. கேள்விகளை சமர்ப்பிக்கும்போது எம்மால் வழங்கப்படும் கேள்விப்படிவங்களை நன்றாக வாசித்துப் பார்த்து அதற்கு அமைவானதாக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் 2022.03.16 மு.ப.11.00 இற்கு முன் "விவசாயத் திணைக்கள பெறுகைக்குழு" இற்கு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது திணைக்கள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் அன்றே மு.ப.11.00 இற்கு இடம்பெறுவதுடன் அதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
05. இது பற்றிய மேலதிக விபரங்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தை அழைத்து தொடர்புகொள்ளலாம்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண விவசாயத் திணைக்களம்,**
**முவகம, இரத்தினபுரி**
**தொலைபேசி இலக்கம் : 045-2222356**

## வயலுக்குள் பாம்பு கடித்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட மூங்கிலாறு கிராமத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவர் அரவம் தீண்டி உயிரிழந்த சம்பவம் 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

மூங்கிலாறு தெற்கு உடையார் கட்டினை சேர்ந்த 46 அகவையுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான வீரசிங்கம் வினோதீபன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மூங்கிலாறு பகுதியில் நெல் அறுவடைக்கு சென்ற வேளை அரவம் தீண்டியுள்ளது.

இதன்போது விவசாயி மயங்கி வீழ்ந்த நிலையில் மூங்கிலாறு மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார்.

# இலங்கையின் பாதுகாப்புக்கு ஏற்ற வகையில் பயங்கரவாத சட்டத்தை அமைக்க வேண்டும்

- கலாநிதி சுரேன் ராகவன் எம்.பி

வவுனியா விசேட நிருபர்

சர்வதேச சட்டங்களை பரிசீலித்து இலங்கையின் பாதுகாப்புக்கும், மக்களின் பாதுகப்புக்கும் ஏற்ற வகையில் பயங்கரவாத சட்டத்தை அமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னித் தொகுதி தலைவருமான கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளரின் கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இருந்த கஷ்டமான ஒரு நிலையில் பயங்கரவாத சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில் பங்கரவாதத்திற்கு எதிராக அது பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அதிக நேரங்களில் அநீதி நடந்திருக்கின்றது என்பதை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் சர்வதேசமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது.



பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமாயின் அந்த சட்டத்தை நாங்கள் முற்றாக நீக்க வேண்டும். எனினும், 2019 ஆம் ஆண்டு பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்கியது. உதிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது. ஆகவே பயங்கரவாதத்திற்கு எதிராக நாட்டில் சட்டங்கள் இருப்பது பிரச்சினையல்ல. ஆனால் அந்த சட்டங்கள் சாதாரண மக்களை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். ஆகையினால் அந்த சட்டத்தை சீர்திருத்தி நாட்டின் இறைமையை சரியான விதத்தில் பாதுகாத்துக் கொண்டு, இலங்கையில் மத ரீதியான, இன ரீதியான பயங்கரவாதம் இருக்குமாயின் அதற்கு எதிராக அதனை பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

இதற்கு சமாந்தரமாக இருக்கின்ற சர்வதேச சட்டங்களை பரிசீலித்து இலங்கையின் பாதுகாப்புக்கும், மக்களின் பாதுகப்புக்கும் ஏற்ற வகையில் பயங்கரவாத சட்டத்தை அமைக்க வேண்டும் என்பது தான் எனது கருத்தாகவுள்ளது எனத் தெரிவித்தார்.





முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தின் மதஸ்தலங்களிற்கு விஜயம் மேற்கொண்டு விசேட வழிபாடுகளை மேற்கொண்டார். நல்லூர் ஆலயத்திற்குச் சென்று விசேட வழிபாடுகளை மேற்கொண்ட அவர் பின்னர் ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்று வழிபட்டார். அவருடன் நிமல் சிறிபால டி சில்வா, தயாசிறி ஜயசேகர, துமிந்த திசாநாயக்க, அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் பலரும் பங்கேற்று இருந்தனர்.

(படங்கள்: யாழ்.விசேட நிருபர்)

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பேரணி

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சியில் கொட்டும் மழையிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பேரணியானது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு டிப்போ சந்தியில் நிறைவடைந்தது.

குறித்த பேரணியில் வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கொட்டும் மழையின் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மழையில் நனைந்தவாறு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டிப்போ சந்தியில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் செயலகத்திற்கான மகஜரை வேலன் சுவாமிகளிடம் கையளித்தார்.

## கசூரினா கடலில் மூழ்கி குளியாப்பிட்டி வாசி பலி!

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் காரைநகர் கசூரினா கடலில் நீராடிய முதியவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

குருநாகல் குளியாப்பிட்டியவைச் சேர்ந்த அன்ரன் ஜேக்கப் ( வயது 57 ) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவரென ஊர்காவற்துறை பொலிஸார் தெரிவித்தனர் .

இவர் தொழில் நிமித்தம் குளியாப்பிட்டி பகுதியிலிருந்து மண்டைதீவு பகுதிக்கு வந்து, தங்கி நின்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முதியவர் சனிக்கிழமை சிலருடன் இணைந்து கசூரினா கடற்கரைக்கு சென்று கடலில் நீராடியுள்ளார்.

அதன் போது அலையில் சிக்கி நீரில் மூழ்கிய நிலையில் அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது , ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் அறிக்கையிட்டனர். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஐரோ.ஒன்றியத்தின் பங்களிப்பில் "நீதிக்கான எங்களின் குரல்" நிகழ்ச்சித்திட்டம்

சாவகச்சேரி விசேட நிருபர்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்பில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் "நீதிக்கான எங்களின் குரல்" நிகழ்ச்சித்திட்டம் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

"நீதிக்கான எங்களின் குரல்" எனும் கருப்பொருளில் மனித உரிமை மற்றும் அடிப்படை சுதந்திரத்தை வலியுறுத்தி அரசியல் வாதிகளை அணுகும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரன் மற்றும் சிறிதரன், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கஜதீபன், சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் வாமதேவன் மற்றும் பருத்தித்துறை நகரசபை தவிசாளர் ஆகியோர் கலந்து கொண்டு பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சட்டவிரோத மணல் அகழ்வு, வாழ்வாதார உதவித் திட்டங்கள், மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரக் கொடுப்பனவுகள், சமுர்த்திக் கொடுப்பனவுகளில் பாரபட்சம், போதைப் பொருள் பாவனையால் சீரழியும் இளைய சமுதாயம், உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் குரல் கேட்கப்படாமை, முன்னாள் போராளிகளின் பாதுகாப்பு ஆகிய விடயங்கள் தொடர்பாக கேட்டறிந்து அதற்கான தீர்வுத்திட்டங்களுக்கான ஆலோசனைகளையும் வழங்கி வைத்திருந்தனர்.

நிகழ்வில் முக்கிய அம்சமாக இலங்கையில் பெண்களால் 20.02.2022 வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான ஆய்வு நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றிருந்தது. மேலும் குறித்த நிகழ்வில் விழுது ஆற்றல் மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், பொது அமைப்புக்கள் என ஏராளமானோர் பங்கெடுத்திருந்தனர்.

## இளவாலையில் தந்தை குழந்தையுடன் தலைமறைவு; தாய் பொலிஸில் முறைப்பாடு!

யாழ்.இளவாலையில் 5 மாத குழந்தையுடன் கணவன் தலைமறைவாகியுள்ளதாக மனைவி இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கணவன் 5 மாதப் பிள்ளையை துாக்கி சென்ற சம்பவம் தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இதடையடுத்து கணவனை குழந்தையோடு நீதிமன்றில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டது.

எனினும் பிள்ளையின்றி நீதிமன்றில் முன்னிலையான நிலையில், 5 மாத பாலூட்டும் குழந்தை என்பதற்கிணங்க தாயாரிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் பணித்தது.

இந்நிலையில் குழந்தையை தாயாரிடம் ஒப்படைக்காது கணவர் குழந்தையோடு தலைமறைவாகியுள்ளார்.

இதையடுத்து மனைவி இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதோடு தாயார் குழந்தையை பல இடங்களிலும் தேடி அலைகின்றார்.

## யாழ்ப்பாணத்தில் பற்றிக் உற்பத்தி நிலையம் அமைச்சர் தயாசிறி ஜயசேகர திறந்து வைப்பு





சௌபாக்கியா பற்றிக் உற்பத்தி விற்பனை நிலையம் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவினால் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கபட்டுள்ளது.

ஜனாதிபதியின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்தின் படி நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் " என் கனவு யாழ்" எண்ணக்கருவில் குறித்த விற்பனை நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விற்பனை நிலையத்தினை திறந்து வைத்துள்ளார்.

நிகழ்வில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல்

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளியன்று (18) நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவினரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கான முன்னாயத்த கலந்துரையாடலானது அண்மையில் மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதானமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு பரவக்கூடிய இடங்களை இனங்கண்டு பரவாமல் இருப்பதற்கான அவசியமானதும் அவசரமானதுமான வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பான விளக்கத்தினை முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் வைத்தியர் வி.விஜிதரன் வழங்கினார். இக் கலந்துரையாடலில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வன்னி மாநாடு





ஓமந்தை விஷேட நிருபர்

ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியின் வன்னி மாநாடு வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் குறித்து கட்சி உறுப்பினர்களால் கலந்துரையாடப்பட்டதுடன். இக்கலந்துரையாடலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வளர்த்து மக்களுக்கு சிறந்த ஆட்சியை ஏற்படுத்த மாவட்டம் மாவட்டமாக செல்கின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துங்கள். உங்களுடன் சகோதரமாக வேலை செய்ய இன்னும் பல சகோதர கட்சிகளை இணைத்துக் கொண்டு உங்களிடத்தில் வர இருக்கின்றோம் எனவும் மக்கள் அனைவரும் குறித்த கட்சிக்கு ஆதரவு வழங்குமாறும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். குறித்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான நிமால் சிறிபால, தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க, முன்னாள் மத்திய மாகாண ஆளுனர் சரத் ஏக்கநாயக்கா, பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் மற்றும் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கிழக்கின் குரல்



# மட்டு. மாவட்டம் சிவப்பு வலயமாக அடையாளம்



## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன்

*மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்*

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டம் சிவப்பு வலயமாக அடையாளப்படுத்தபட்டுள்ளதாக, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சனிக்கிழமை (19)இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் கடந்த ஆண்டு அதிக டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இருப்பதாகவும், அதில் 2800 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்ததாகவும் அத்தோடு, அதில் நான்கு பேர் மரணத்தை தழுவியிருந்ததாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இவ்வாண்டின் மாசி மாதம் வரையான காலப்பகுதியில் 75 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், டெங்கு நோயின் பரம்பலில் முக்கிய விடயமாக காணப்படுவது டெங்கு நுளம்பை அழித்தல் என்னும் விடையத்தில் நாங்கள் அனைவரும் விளங்கிக்கொள்ளுதல் அவசியமானதெனவும், அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு நகரப்பகுதியில் அதிக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருப்பதால், முக்கியமாக நகரப்பகுதிகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் செயற்பாட்டை தாம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதனை மாவட்டத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதாயின் உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் கிராமிய சங்கங்களின் ஒத்துழைப்பு சுகாதார துறைக்கு மிகவும் அவசியமாக இருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதன்போது தெரிவித்துள்ளார்.

# காத்தான்குடி காங்கேயனோடையில் கைகலப்பு; ஒருவர் உயிரிழப்பு

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காங்கேயனோடையில் இருவருக்கிடையில் சனிக்கிழமை (19) மாலை இடம் பெற்ற கை கலப்பில், ஒருவர் உயிரிழந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேயனோடையில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கை கலப்பாக மாறியுள்ளது. ஒருவர் மற்றயவரை தாக்கியுள்ளார். தாக்கப்பட்ட நபரை காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையில் அவர் உயிரிழந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் காங்கேயனோடை வாவிக்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் காங்கேயனோடை 13யைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய உதுமாலெவ்வை முகம்மட் இல்பான், என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் தாக்கியதாக கூறப்படும் சந்தேக நபரான காங்கேயனோடையைச் சேர்ந்த கையூம் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

# மூதூரின் முதுசங்கள் நூல் வெளியீட்டு விழா



*தோப்பூர் குறூப் நிருபர்*

மூதூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் கலாபூசனம் எம்.சீ.எம். ஷெரிப் எழுதிய "மூதூரின் முதுசங்கள் பகுதி I" நூல் வெளியீட்டு விழா மூதூர் பெரிய முத்து விருந்தினர் மண்டபத்தில் சனிக்கிழமை (19) இடம்பெற்றது.

மூதூரைச் சேர்ந்த 170 தனிநபர்களின் வரலாற்றுக் குறிப்புகளுடன் 588 பக்கங்களைக் கொண்ட இந்நூலானது எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் கலாசாரம், வரலாறு சம்மந்தமான ஆராய்ச்சிக்கு துணை நிற்கும் ஓர் அரிய பொக்கிஷமாகுமென வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் கருத்தாக அமைந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் ,முதன்மை அதிதியாக ஜோர்தான் நாட்டுக்கான முன்னாள் தூதுவர் எம்.லாபீர், ஏனைய அதிதிகளாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், மூதூர் பிரதேச சபை தவிசாளர், மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர், மூதூர் பிரதேச சபையின் செயலாளர், பிரதேச இலக்கியவாதிகள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மூதூர் பொது நிறுவனங்களுக்கு உதவிகள்

*மூதூர் தினகரன் நிருபர்*

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மூதூர் பிரதேச அபிவிருத்திக் குழு தலைவருமான எம்.எஸ்.தௌபீக்கின் 2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூதூர் பிரதேச பொது நிறுவனங்களுக்கான பொருள் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மூதூர் பிரதேச செயலகத்தில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மூதூர் பழீலியா அரபுக்கல்லூரி, ஹதீப்மார் சம்மேளனம், பஹ்ரியா ஜும்ஆப் பள்ளிவாசல், அல்மனார் வித்தியாலயங்களுக்கான தளபாடம், ஒலிபெருக்கி மற்றும் ஒலி உபகரணங்களும் விளையாட்டுக் கழங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், திட்டமிடல் பணிப்பாளர் பி.அறபாத், மூதூர் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது நிறுவனங்களின் நிருவாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியாவில் பொது காணி பயன்பாடு தொடர்பான கூட்டம்

*கிண்ணியா மத்திய நிருபர்*



கிண்ணியா பிரதேசத்தின் பல்வேறு தேவைகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் ஒழுங்கு படுத்தப்பட்ட காணி பயன்பாட்டு தொடர்பாக, ஏற்பாடு செய்யப்பட்ட ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை (19) கிண்ணியா வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா சூரா சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக் கூட்டத்தில், கிண்ணியா நகரத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் , அரச நிறுவனங்களின் தேவைகளுக்காக காணிகளை இனங்காண்பதில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

பொதுமக்களின் தேவைகளுக்காக அரச காணிகளை ஒதுக்கீடு செய்வதிலும் அதனை அடையாளம் காண்பதிலும் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல அரச காணிகளை அடையாளப்படுத்தி ஒதுக்கீடு செய்வதன் அவசியம் பற்றியும் இங்கு பல தரப்பினரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

குறிப்பாக தற்போது கிண்ணியா தள வைத்தியசாலையில் இடமாற்றமும் அதில் உள்ள பிரச்சினை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதோடு, கிண்ணியா கல்வி வலயத்திற்கு ஒதுக்கப்பட்ட கணனி வள நிலையத்திற்கான காணிகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

அத்தோடு இடப்பற்றாக் குறையாக இருக்கின்ற அரசு அலுவலகங்கள் தொடர்பாகவும் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் நிறுவனங்கள் தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான

எம்.எஸ்.தௌபீக், இம்ரான் மகரூப், கிண்ணியா நகர சபை தவிசாளர் எம். எம். நிவாஸ்,கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் ஏ. எஸ். நசீர் கிண்ணியா ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் அஷ் ஷெய்க் ஏ. எம்.ஹிதாயத்துல்லா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# நூலகங்களை அபிவிருத்தி செய்ய ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்

## சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.குகநேசன்

*துறைநீலாவணை நிருபர்*

கொவிட் தொற்று காலத்தில் பொது நூலகங்கள் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அளப்பரிய சேவையினை வழங்கியதைக் காணமுடிந்தது. எனவே சமூகத்திலுள்ள அனைவரும் பொது நூலகங்களை அபிவிருத்தி செய்ய ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. குகநேசன் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கும் துறைநீலாவணை பொது நூலகத்தின் வாசகர் வட்டத்தின் வருடாந்த பொதுக் கூட்டம், ஓய்வு நிலை அதிபரும் நாடக கலைஞருமான ஆ.தட்சணாமூர்த்தி தலைமையில் சனிக்கிழமை (19) இடம்பெற்றது.

இந் நிகழ்வில், அதிதிகளாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் க. சரவணமுத்து, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.குகநேசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தொடர்ந்தும் உரையாற்றிய குகநேசன் இங்குள்ள பொது நூலகம் எதிர் காலத்தில் நவீன தொடர்பாடல் வசதிகளைக் கொண்ட பொது நூலகமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

எதிர் காலத்தில் "வீட்டுக்கொரு புத்தகத் திட்டத்தை" அறிமுகம் செய்து பிறந்த நாள் பரிசாகவும். நினைவு தின அன்பளிப்பாகவும் நூல்களைச் சேகரிக்கும் பணியில் வாசகர் வட்டம் முனைப்புடன் தொழில்பட வேண்டும் என்றார்.

# பொத்துவில் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

*ஒலுவில் விசேட நிருபர்*



பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 02 நபர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும், 27 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொத்துவில் பிரதேசத்தில் சனிக்கிழமை (19) பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் விசேட டெங்கு ஒழிப்பு செயலணியினர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கொழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

பருவ மழை பெய்ததையடுத்து பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடந்த இரண்டு மாதங்களில் சுமார் 198 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும், இதில் கூடுதலாக கர்ப்பிணித்தாய்மார்கள், சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட 07 கிராம சேவகர் பிரிவுகளில் 535 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கொழிப்பு பரிசோதனையின் போதே டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 02 நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதோடு, 27 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவர்கள் ஒரு வார காலத்திற்குள் குறித்த இடங்களை துப்புரவு செய்ய வேண்டுமெனவும், மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# பஸ் தரிப்பிடம் திறந்து வைப்பு



*கந்தளாய் தினகரன் நிருபர்*

குச்சவெளி பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.சி.எம்.மீசானின் வேண்டுகோளுக்கிணங்க தவிசாளர் ஏ.முபாறக்கினால் ஜாயாநகர் வட்டாரத்தின் பல்வக்குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் சனிக்கிழமை (19) பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாரக்கினால் திறந்து வைக்கப்பட்டது.

இப்பகுதியில் நீண்ட காலமாக காணப்பட்ட பிரச்சினை இதன் மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.மீசான், ஜாயா சனசமூக நிலைய உறுப்பினர்கள், சல்லிமுனை, பல்வக்குளம் பள்ளிவாசல் நிருவாகிகள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சன சமூக உறுப்பினர்கள், இளைஞர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

# மூதூர் கல்வி வலய உத்தியோகத்தர்கள் அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு விஜயம்

*அட்டாளைச்சேனை மத்திய நிருபர்*



மூதூர் வலயக் கல்வி அலுவலக கல்வி அதிகாரிகள் குழு, அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்திற்கு ஒருநாள் அனுபவப்பகிர்வு விஜயம் மேற்கொண்டு, கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை நேரடியாகப் பார்வையிட்டனர்.

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் இஸற்.எம்.எம்.நளீம் தலைமையிலான குழுவில், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ரீ.ஜயந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணனி வள நிலைய முகாமையாளர் எஸ். ஹூஸைன் உள்ளிட்டவர்கள் அடங்கியிருந்தனர்.

மூதூர் கல்விக் குழுவினரை, அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் தலைமையிலான குழுவினர் வரவேற்றனர்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகப் பணிகள், அன்றாட செயற்பாடுகளை மூதூர் குழுவினர், பார்வையிட்டதுடன், வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அனுபவப் பகிர்வு கூட்டமொன்றிலும் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் இஸற். எம்.எம்.நளீம் கூறுகையில், மூன்று கல்விக் கோட்டங்களிலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் என்றார்.



# சிவராத்திரி

சிவராத்திரியை ஒளிமயமான இரவு, இன்பம் தருகின்ற இரவு என்று அழைக்கலாம். ஒருவர் தன் வாழ்வின் வினைப்பயனை அழிக்க, எட்டு விதமான சிவ வழிபாட்டு முறைகளை கடைப் பிடிக்கலாம் என புராணங்களில் கூறப்பட்டுள்ளது. அவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுவது மாசி மாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி திதி அன்று வரும் மகா சிவராத்திரி விரதமாகும்.

உலகம் முழுவதும் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்ட காலத்தில், அன்னை பார்வதி உலக உயிர்களுக்காக தவம் இருந்து இறைவனை பூஜித்தார். அந்த இரவே சிவராத்திரி நாளாகும். பார்வதிதேவி தவமிருந்து, சிவ பெருமானின் இடப்பாகத்தில் இடம் பெற்றது சிவராத்திரி தினமாகும். உமாதேவி சிவபெருமானிடம் ஆகம உபதேசம் பெற்றதும் சிவராத்திரி அன்றுதான்.

பாண்டவர்களில் ஒருவரான அர்ச்சுனன் தவம் செய்து, சிவபெருமானிடம் இருந்து 'பாசுபதம்' என்னும் அஸ்திரத்தை பெற்றதும் இந்த சிவராத்திரி தினமே. மார்க்கண்டேயனுக்காக, எமதர்மனையே சிவபெருமான் சம்ஹாரம் செய்த நாள் மகாசிவராத்திரி. பகீரதன் ஒற்றைக் காலில் கடுந்தவம் புரிந்து, கங்கையை பூமிக்குக் கொண்டு வந்ததும் சிவராத்திரி தினத்தில் தான். கண்ணப்ப நாயனார், குருதி வடியும் லிங்க வடிவிலிருந்த ஈசனின் கண் மீது தன் கண்களைப் பொருத்தி முக்தி அடைந்ததும் மகாசிவராத்திரி நாளில்தான். பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும், லிங்க ரூபமாக சிவ பெருமானின் அருள் வழங்கிய நாள் மகா சிவராத்திரி.

சிவன் என்ற சொல்லுக்கு மங்கலம், இன்பம் என்று பொருள். சிவபெருமான் தன்னை வணங்குபவர்களின் மனதில் இருக்கும் தீய எண்ணக் கழிவுகளான காமம், கோபம், குரோதம், பேராசை, பொறாமை போன்ற கர்ம வினைக் கழிவுகளை அழிப்பவர். அவரை வழிபடுபவர்களின் வாழ்வில் நிலவும் நோய்கள், மனக் கவலைகள், வறுமை நிலை போன்றவற்றை அறவே அழிப்பவர்.

ஒருவர் தனது மூன்று பிறவியில் செய்த பாவங்களையும் அழிப்பவர் சிவபெருமான். சிவராத்திரியை, ஒளிமயமான இரவு, இன்பம் தருகின்ற இரவு என்று அழைக்கிறோம். ஒருவர் தன் வாழ்வின் வினைப்பயனை அழிக்க, எட்டு விதமான சிவ வழிபாட்டு முறைகளை கடைப் பிடிக்கலாம் என சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. அவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுவது மாசி மாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி திதி அன்று வரும் மகா சிவராத்திரி விரதமாகும்.

சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### கண்ணப்ப நாயனார்



61

இரண்டு கண்ணினின்றும் கண்ணீர் சொரிய வெயிலிடைப் பட்ட மெழுகு போல மனங்க சிந்துருகிய திண்ணன்;

"இந்தச்சுவாமி அடியேனுக்கு அகப்பட்டது என்ன ஆச்சரியம்" என்று சொல்லி ஆனந்தம் கொண்டார்.

"ஐயையோ! சிங்கம் யானை புலி கரடி துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கின்ற காட்டிலே நீர் யாதொரு துணையுமின்றி வேடர்போலத் தனியே இருப்பது ஏது" என்று சொல்லித் துக்கித்து, தம்முடையகையில் இருந்த வில்லுக் கீழே விழுந்ததையும் அறிந்தவரகிப் பரவசமடைந்தார்.

பின் ஒருவாறு தெளிந்து "இவருடைய முடியிலே நீரை வார்த்துப் பச்சிலையையும் பூவையும் இட்டவர் யாரோ" என்றார் திண்ணன்.

அப்பொழுது சமீபத்திலே நின்ற நாணன் "நான் முற்காலத்திலே உம்முடைய பிதாவுடனே வேட்டையாடிக் கொண்டு இம்மலையிலே வந்தபொழுது, ஒரு பிராமணன் இவர்முடியிலே நீரைவார்த்து, இலையையும் பூவையும் சூட்டி உணவை ஊட்டி, சிலவார்த்தைகள் பேசினதைக் கண்டிருக்கின்றேன், இன்றைக்கும் அவனே இப்படிச் செய்தான் போலும்" என்றான்.

அதைக்கேட்ட திண்ணனார் அந்தச் செய்கைகளே திருக்காளத்தியப்பருக்குப் பிரீதியாகிய செய்கைகளென்று கடைப்பிடித்தார். பின்பு, "ஐயோ! இவருக்கு அமுது செய்தற்கு இறைச்சிகொடுப்பார் ஒருவரும் இல்லை. இவர் அங்கே தனியே இருக்கின்றார். இறைச்சி கொண்டு வரும் பொருட்டு இவரைப் பிரியவோ மனமில்லை. இதற்கு யாதுசெய்வேன்? எப்படியும் இறைச்சிகொண்டு வரவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு...

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**18881) ஹோமங்கள், யாகங்கள் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?** தேவர்களும் இறைவனும் மகிழ்ச்சியடைந்து நமக்கு அருள்புரிவார்கள்.

**18882) இதனால் ஏற்படும் நன்மை என்ன?** வாழ்க்கையில் ஏற்பட்டு வந்த தடைகள் விலகி நற்பலன்களை அடையமுடியும்.

**18883) பஞ்ச யக்ஞ ஹோமம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?**

துன்பங்கள் விலகி அனைத்து செல்வங்களும் கிடைக்கப்பெறுவர்.

**18884) பஞ்ச யக்ஞ ஹோமங்கள் ஐந்தும் எவை?** கணபதி ஹோமம், மகாசண்டி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாசுதர்சன ஹோமம், ருத்ர ஹோமம்

**18885) கணபதி ஹோமம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?**

தடைகள் விலகி சகல செல்வங்களும் கிடைக்கும்.

**18886) மகாசண்டி ஹோமம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?**

பயம், தரித்திரம், எதிரிகள் தொல்லை நீங்கும்.

**18887) நவக்கிரக ஹோமம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?**

கிரக தோசங்களை நீக்கும்.

**18888) மகாசுதர்சன ஹோமம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?**

ஏவல், பில்லி சூனியம், எதிரிகளை அழிக்கும், வெற்றி கிட்டும்.

**18889) ருத்ர ஹோமம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?**

ஆயுள் விருத்தியடையும். ஹோமங்கள் செய்து நலமுடன் வாழ்வோம்....

**18890) எப்போது சாமி தரிசனம் செய்யக் கூடாது?**

காலையில் கோவில் திறந்த உடனேயே சென்று சாமி கும்பிட கூடாது.

**18891) எப்போது சாமி தரிசனம் செய்யலாம்?**

சிவாச்சாரியார முதலில் தீபம் ஏற்றி ஆராதனை காட்டிய பிறகே நாம் சென்று தரிசிக்க வேண்டும்.

**18892) திரை போடப்பட்ட நேரங்களில் சாமி தரிசனம் செய்யலாமா?** கூடாது

**18893) சன்னதியில் தீபம் இல்லாத போது சாமி தரிசனம் செய்யலாமா?** கூடாது.

**18894) கோவிலுக்குச் சென்று விட்டு வீடு திரும்பி வந்ததும் உடனே கால்களை கழுவலாமா?** கூடாது.

**18895) எப்போது கழுவலாம்?**

சிறிது நேரம் கழித்த பின்னரே காலைக் கழுவ வேண்டும்.





வரலாற்றுப் புகழ் பெற்ற சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதஸ்வாமி ஆலயத்தில் மாசிமக உற்சவத்தில் (16)திகதி தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.இதில் பல பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

## நாதப் பிரம்ம யோகம் - 07



R. Lookwood என்ற ஆய்வாளர் எலி முதலிய விலங்குகள் அரை மாத்திரை ஸ்வரங்களில் ஒலி எழுப்ப முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார்.

எலிகளால் அஷ்டக சுரங்களின் அதி குறைந்த சுரத்தைவிட குறைவாக ஸ்வரத்தை ஏற்படுத்த முடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார். R. Lookwood பல விதமான எலிகளை வைத்து அவை எழுப்பும் ஒலிகளைக் கொண்டு அவற்றின் வித்தியாசங்களைத் தொகுத்துள்ளார். பல பறவைகள் ஸ்வரத்தை மாற்றி, ஏற்றி, இறக்கிப் பாடக்கூடிய தன்மை உடையவை என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சில அறிவியலாளர்கள் பறவைகள் தமது ஒலிகளை எழுப்பும் போது அவற்றின் பயம், கோபம், வெற்றி, இன்பம் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டும் ஆற்றலுடையவை என்று அறிந்திருக்கிறார்கள். மனிதர்களில் குரல் நாண் பெண்களைவிட ஆண்களுக்கு மூன்று மடங்கு பெரியது. இதனால் பெண்கள் மென்மையான இனிமையான பலவித சுரங்களை ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் ஆண்கள் பலத்த குரலில் கோபம், அன்பு, பொறாமை ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடியவர்களாகவும் பரிணாமத்தில் இருக்கிறார்கள். எப்படிப் பறவைகள் தமது ஸ்வரங்களை மாற்றி உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறதோ அதுபோல் மனிதனும் இசையினது, ஸ்வரத்தினது முக்கியத்துவத்தை நன்கு புரிந்து வைத்துள்ளான். ஸ்வரத்தில் மாற்றத்தைச் செய்து ஒலிகளைப் பாவிப்பது இயற்கை மனிதன் உட்பட விலங்குகளுக்குத் தந்துள்ள பெரிய வரப்பிரசாதம்.

இசை என்பது பறவைகள் சண்டையிடும் இரைச்சல்களில் ஆரம்பித்து பல்வேறு மனிதன் உருவாக்கும் சிக்கலான ஸ்வரங்கள் வரை பரந்து விரிந்தது என்று Science and Music என்ற நூலில் Sir Jemes Janes குறிப்பிடுகிறார்.

மனித நாகரீகம் இசையை மிக உயர்ந்த அளவிற்கு வளர்த்துள்ளது. எனினும் இன்றைய நவீன மனிதர்கள் இசையை எப்படிப் பறவைகள் கூச்சலிடுவதற்கும், சண்டை பிடிப்பதற்கும் பாவிக்கின்றனவோ அதைப் போன்று காதல், பொறாமை, கோபம், சோகம் போன்ற குறிப்பிட்ட ஒரு சில உணர்ச்சிகளுக்கே பாவிக்கின்றனர். மார்க்ஸ் முல்லர் போன்ற மானிடவியலாளர்கள் மனித இனத்தில் மொழி தோன்றுவதற்கு முந்தைய நிலையில் இசையே பாவிக்கப்பட்டது என்று கருதுகிறார். ஏனென்றால் மனிதனது ஆரம்ப உணர்ச்சி வெளிப்பாடு என்பது துன்பம், வலி, மகிழ்ச்சி போன்ற சொற்ப அளவினை வெளிப்படுத்தவே தேவை இருந்தது. இதை அவன் குரலின் அளவை கூட்டி, குறைத்து வேறுபட்ட ஸ்வரங்களில் எளிமையாக வெளிப்படுத்த முடியும். படிப்படியாக பரிணாமத்தில் மூளை வளர்ச்சியுற சிந்தனை ஆற்றல் வளர்ந்து, மிகச் சிக்கலான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றான். **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## சனிக்கிழமை விரதம்



சனிக்கிழமை விரதத்தை சில ராசிக்காரர்கள் முறையாக பின்பற்றி வந்தால் செல்வம், ஆரோக்கியம், ஆயுள் ஆகிய முப்பலன்கள் நிச்சயம் கிடைக்கும். கும்பம் மற்றும் மகர ராசிக்காரர்களுக்கு அதிபதியாக இருப்பவர் சனி பகவான்.

எனவே இவர்கள் நிச்சயமாக சனிக்கிழமை விரதத்தை கடைபிடித்தால் நல்ல பலன் கிடைத்து, வாழ்க்கை இனிமையாக இருக்கும். ரிஷபம், கன்னி, துலாம் மற்றும் கும்ப ராசிக்காரர்களின் லக்னத்திற்கு யோகாதிபதியாக சனி பகவான் இருக்கிறார்.

எனவே இவர்களும் சனிக்கிழமை விரதத்தை தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் இவர்களுக்கும் நல்ல பலன்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. மற்றும் மற்ற ராசிக்காரர்களும் சனிக்கிழமை விரதத்தை கடைப்பிடித்து வர அவர்களிடமிருந்து துன்பம் தரக் கூடிய தீயபலன்கள் விலகி, நல்ல பலன்கள் கிடைக்க பெறுகின்றனர்.

இவ்வாறு முறையாக சனிக்கிழமை விரதத்தை பின்பற்றி வரும் அனைவருக்கும் செல்வம், ஆரோக்கியம், ஆயுள் ஆகிய முப்பலன்கள் நிச்சயம் கிடைக்கிறது.

சனிக்கிழமை நாளில் மாலைநேரத்தில் கோவிலுக்கு சென்று, சனிபகவானுக்கு கருப்பு வஸ்திரம் சாத்தி, கருப்பு எள் மற்றும் வேகவைத்த சாதம் இவற்றை படைத்து, தீபமேற்றி வழிபட்டு வந்தாலும் உங்களுக்கு நல்ல நற்பலன்கள் கிடைக்கும்.

## துளசி திருக்கல்யாணம்

பல கல்ப காலங்களுக்கு முன்பு, கார்த்திகை மாத சுக்ல பட்ச துவாதசி தினத்தில், நாராயணருக்கும், துளசி தேவிக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றதாக சொல்கிறார்கள். தேவர்களும், அசுரர்களும் இணைந்து திருப்பாற்கடலைக் கடைந்தபோது, லட்சுமிதேவியின் தங்கையாக அவதரித்தவள், துளசி தேவி என்கிறார்கள். லட்சுமியை, மகாவிஷ்ணு ஏற்றுக்கொண்டார். துளசியும், விஷ்ணுவையே மணந்து கொள்ள நினைத்தாள்.

ஆனால் லட்சுமிதேவி, அவளை துளசிச் செடியாக மாற்றி விட்டாள். அப்போது அவளது விருப்பத்தை அறிந்த மகா விஷ்ணு, 'நான் சாளக்கிராமமாக இருக்கும் வேளையில் எல்லாம், துளசி என்னோடு இருப்பாள்' என்றார்.

விஷ்ணு பூஜை என்பது துளசி இல்லாமல் நடைபெறாது. அவ்வாறு துளசி இன்றி செய்யப்படும், பெருமாளுக்கான வழிபாடு வீண் என்பது ஆன்மிகவாதிகளின் கருத்து.

பெருமாளுக்கு எத்தகைய சிறப்பு வாய்ந்த நைவேத்தியங்களைப் படைத்தாலும், அந்த நைவேத்தியம் துளசி இலையும், நீரும் இன்றி பூரண நிலையை அடையாது.

துளசிச் செடியின் வேர், கிளை, இலை உள்ளிட்ட அனைத்திலும் தேவதைகள் குடியிருப்பதாக சொல்லப்படுகிறது. பல கல்ப காலங்களுக்கு முன்பு, கார்த்திகை மாத சுக்ல பட்ச துவாதசி தினத்தில், நாராயணருக்கும், துளசி தேவிக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றதாக சொல்கிறார்கள்.

இந்த நிகழ்வானது, தீபாவளிக்குப் பிறகான 15வது நாளில் வரும் துவாதசியில் நடைபெறுவதாக ஐதீகம். அன்றைய தினம் துளசிக் கட்டையை மணமகளாகவும், நெல்லி மரத்தை மணமகனாகவும் வைத்து திருக் கல்யாணத்தை செய்வார்கள்.

இன்னும் சிலர், லட்சுமியையே, துளசியின் அம்சமாக பாவித்து, விஷ்ணுவுக்கும் லட்சுமிக்கும் இந்த திருக்கல்யாணத்தை செய்து வைப்பார்கள்.






கொழும்பு ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகள் தேவஸ்தானத்தில் பிரம்மஸ்ரீ வி. சுப்பிரமணியம் குருக்கள் தலைமையில் இடம்பெற்று வந்த நவசண்டி யாகத்தின் நிறைவு நாளன்று (17.02.2022) வஸோந்தரரா ஹோமம் பூர்ணாகுதி பூஜை இடம்பெறுவதை படத்தில் காணலாம். (படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

# நகர்வலம்



அநுராதபுரம் மாவட்டம்;

## அறுவடை செய்யப்படும் நெல்லினை கொள்வனவு செய்ய மத்திய நிலையங்கள்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை பெரும் போகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லினை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்காக வேண்டி 29 மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் அநுராதபுரம் மாவட்ட பிரதேச அலுவலக முகாமையாளர் டீ.எம்.என். தென்னகோன் தெரிவித்தார்.

அதற்கமைவாக மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்களில் அரசாங்கத்தின் உத்தரவாத விலையான நாடு ஒரு கிலோ 90 ரூபாவுக்கும் சம்பா 92 ரூபாவுக்கும் கீரிசம்பா 95 ரூபாவுக்கும் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இதுவரையில் 3400 மெட்ரிக் டொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இம்முறை அநுராதபுர மாவட்டத்தில் நாற்பதாயிரம் மெட்ரிக் தொன் நெல்லினை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் அநுராதபுரம் அலுவலக பிரதேச முகாமையாளர் தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

## தென் மாகாணத்தில்; தென்னை மர நோயை கட்டுப்படுத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை

### சுமார் 300 மில். நிதியும் ஒதுக்கீடு

**(மாத்தறை தினகரன் நிருபர்)**

தென் மாகானத்தில் தென்னை மரத்திற்கு தீவிரமாக ஏற்பட்டு வரும் நோயை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் ரொசான் டி சில்வா மாத்தறை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் (18) தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன, தென் மாகான ஆளுநர் விலிகமகே, மாத்தறை மாவட்ட இணைப்புக் குழு இணைத் தலைவர் நிபுன ரணவக்க ஆகியோர் தலைமையில் இக் கூட்டம் நடை பெற்றது. தெங்கு ஆராய்ச்சி சபை, தெங்கு அபிவிருத்திச் சபை தோட்டத் தொழில் அமைச்சின் மூலம் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 2006ம் ஆண்டு தொடக்கம் தென்னை மரங்களுக்கு இந்நோய் பரவ ஆரம்பித்துள்ளது. 702 கிராம சேவகர் பிரிவுகளில் இந்நோயால் பீடித்த 3,27,883 தென்னை மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன. இதற்காக அரசாங்கம் 790 மில்லியன் ரூபாவை நஷ்டஈடாக வழங்கியது.

மேலும் இந்த மூன்று மாவட்டங்களில் மேற்படி நோய் பரவாமல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்வாறு நோய் ஏற்படின் இம் மரங்கரை வெட்டி அகற்றுவதற்காக 300 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## குடிபோதையில் ஆபாசம்; பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

விலச்சிய தம்பியாவ வீதியில் குடிபோதையில் ஆபாசமான. முறையில் நடந்து கொண்டதாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தந்திரிமலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் தந்திரிமலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருபவராவர். சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதேச சிரேஷ்ட உயர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளை கடமையில் இருந்து இடைநிறுத்துவதற்கு தந்திரிமலை பிராந்திய பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

'2020 கொவிட்' விடுமுறை கால சுற்றாடல் போட்டி;

## ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயம் மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**




2020 ஆம் ஆண்டு 'கொவிட் 19' தொற்றின் போது பாடசாலைகள் விடுமுறைகள் வழங்கப்பட்டிருந்த காலத்தில் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட 'வளமான நிலத்திற்கு மாணவர் சக்தி வீட்டுத் தோட்ட போட்டி 2020' இல் பத்து பேர்ச் இற்கும் குறைவான மட்டுப்படுத்தப்பட்ட நிலமுடைய பாடசாலையின் கீழ் போட்டியிட்ட ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயம் வலய மட்டத்தில் வெற்றியீட்டி சாதனை படைத்துள்ளது. மாகாண மட்டப்போட்டிக்கு தமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் பிரதி அதிபர் என். எஸ். டேன் தெரிவித்தார்.

இப்பாடசாலை ஹம்பாந்தோட்டைகோட்டத்திலிருந்துதெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பாடசாலையாகவும் வலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு தமிழ் மொழிப் பாடசாலையாகவும் இது காணப்படுவதாகவும் பிரதி அதிபர் மேலும் தெரிவித்தார்.

2019/ 2020 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட பாடசாலை சுற்றாடல் போட்டியிலும் கோட்ட மற்றும் வலய மட்டத்தில் முதலாவது இடத்தினை பெற்று தென் மாகாணத்தில் வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு பாடசாலையினை சிறந்த சுற்றாடல் பேணும் விவசாய பாடசாலையாக கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைத்து வரும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பெற்றோர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் மண்றும் நலன் விரும்பிகளுக்கும் பிரதி அதிபர் நன்றி தெரிவித்துள்ளார்.

சீனன்கோட்டை மாணிக்கக் கல் சந்தை;

## வெளிநாட்டு வியாபாரிகளிடம் இருந்து வரி அறவிட நகர சபை தீர்மானம்

**பேருவளை விசேட நிருபர்**



பேருவளை நகர சபைக்குட்பட்ட சீனன் கோட்டை பத்தை இரத்தினக்கல் வர்த்தக சந்தைத் தொகுதியில் இரத்தினக்கற்களை கொள்வனவு செய்யும் வெளிநாட்டு வியாபாரிகளிடம் இருந்து ஒரு தொகை வரியை அறவிடும் யோசனையொன்றை பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மட் நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முன்வைத்துள்ளார்.

நகர சபையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இந்த யோசனையை முன்வைத்தார்.

சர்வதேச புகழ்பெற்ற சீனன் கோட்டை இரத்தினக்கல் வர்த்தக சந்தைக்கு உலகின் பல நாடுகளிலிருந்தும் முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் வருகை தந்து கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான இரத்தினக்கற்களை கொள்வனவு செய்து தமது நாட்டிற்கும் வேறு நாடுகளுக்கும் எடுத்துச் சென்று அதனை விற்பனை செய்து பாரிய அளவில் இலாபம் பெற்று வருகின்றனர்.

நீண்ட காலமாக எமது நகர சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பூமியை தமது வியாபார நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு வர்த்தகர்கள் பயன்படுத்தி வருகின்ற போதிலும் அதற்காக ஒரு சதமேனும் நகர சபை அறவிடுவதில்லை.

பேருவளைக்கு வந்து இரத்தினக் கற்களை கொள்வனவு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு நகர சபை மூலம் அனுமதி அட்டை ஒன்றை வழங்கவும் அந்த அட்டையை பயன்படுத்தி நகர சபை எல்லையில் மாணிக்க கற்களை கொள்வனவு செய்ய முடியும் எனவும் அதற்காக அவர்களிடமிருந்து ஒரு தொகைப் பணம் வரியாக அறவிடப்படும் என்றும் நகர பிதா கூறினார்.

இவ்வாறு ஒரு தொகையை வரியாக அறவிடுவதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகர்களினால் நகர சபைக்கு மாதாந்தம் சுமார் 10 இலட்சம் ரூபா வரையில் வருமானத்தையீட்டிக் கொள்ள முடியும் என்றும் இவ்வாறு அறவிடப்படும் பணம் நகரின் அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் என்றும் நகர பிதா மேற்படி கூட்டத்தின் போது யோசனையை முன்வைத்தார்.




சமுர்த்தி உதவி பெறுவோருக்கு அரசினால் 1000 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கும் வைபவம் வெலிகம தேர்தல் தொகுதியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வெலிகம தேர்தல் தொகுதி பொ.ஜ. பெரமுன அமைப்பாளருமான சரத் யாப்பா அபேவர்தன இதனை பிரதேச சமுர்த்தி பெறுவோருக்கு வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

படங்கள்; வெலிகம தினகரன் நிருவர்



எம்.வை.எம் நளீர் எழுதிய "கல் எலிய முஸ்லிம் கிராம வரலாறும் பரம்பரையும்" நூல் வெளியீட்டு விழா கல்எலிய தௌபீக் ஸன்ஸ் வரவேற்பு மண்டபத்தில் (20) நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் எம்.வை.எம் நளீரிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் அருகில் விசேட அதிதி தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் எம்.எம் முஹம்மத் (நளீமி), கௌரவ அதிதிகளான ஏ.எச்.எம் கலீல், எம்.ஏ.எம். நூறுல்லாஹ் (நளீமி) ஆகியோரையும் படங்களில் காணலாம்.

## உணவு பழக்க வழக்கம்; பெற்றோர்களை வலியுறுத்தும் செயலமர்வு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

சிறார்களுக்கான ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்கள் தொடர்பாக பெற்றோர்களை வலியுறுத்தும் செயலமர்வொன்று அண்மையில் புத்தளம் மூன்றாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள ஐ.எப்.எம். முன்பள்ளியில் இடம்பெற்றது.

முன்பள்ளி பொறுப்பாசிரியை எம்.எஸ்.பௌசுல் ரூசி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதான வளவாளராக டாக்டர் நிஹார் கலந்து கொண்டு விரிவுரை வழங்கினார். முன்பள்ளி மாணவர்கள் சகிதம் பெற்றோர்களும் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## உயிர் இழப்புகளை கட்டுப்படுத்திய அரசு மீது பெண்கள் நம்பிக்கை



**(மொறட்டுவை மத்திய விசேட நிருபர் )**

இந்த நாட்டில் மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த கொடூர யுத்தத்தின் போது வடித்த கண்ணீர் , உயிர்களைப் பலிகொண்ட கொரோன ஆகியவற்றினால் உயிர் இழப்புகளை கட்டுப்படுத்திய அரசாங்கம் தாய்மார்களின் மனதை வென்றுள்ளதே தாய்மார்களின் இன்றைய வருகையாகும் என மொறட்டுவை மாநகர முதல்வர் சமன் லால் பெர்னாந்து தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மொறட்டுவ தொகுதி மகளிர் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

மொறட்டுவை ஸ்ரீபாலி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற இச்சம்மேளனத்தின் வருடாந்த அமர்வில் தொடர்ந்து உரையாற்றிய முதல்வர் சமன் லால்,

இது தவிர பல பிரச்சினைகளுக்கு நாம் இன்று முகம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இது எமக்கு மட்டுமல்ல முழு உலகத்திற்கும் உள்ளதுதான். கொரோன தலை தூக்கியதன் காரணமாக இவ்வாறான பிரச்சினைகளுக்கு உலகம் முகம் கொடுக்க நேரிட்டது. எனினும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாடு தடுப்பூசி ஏற்றி மக்களை பாதுகாத்ததில் முன்னிலை வாகிக்கிறது என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையினாலே இன்றைய கூட்டத்திற்கு அதிக தாய்மார்கள் வருகை தந்து எமக்கு நம்பிக்கையை தந்துள்ளனர் என்றார்.

மகளிர் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கம்பஹ மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க, முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான மகளிர் சம்மேளனத்தின் செயலாளருமான திருமதி அசோகா லங்காதிலக உட்பட முக்கிய பிரமுகர்களும் இதில் கலந்து சிறப்பித்தனர்.





கல்வியை முடித்துவிட்டிருக்கும் மாணவிகள் உட்பட சுய தொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்கி வரும் டலண்ட் ஹப் அகடமிக்கின் 2022 வருடாந்த கண்காட்சி (19) கொழும்பு ரமடா ஹோட்டலில் நிறுவனத்தின் பணிப்பாளர் பஸ்லியா ரமீஸ் தலைமையில் நடைபெற்றது. விஷேட அதிதிகளாக தெமடகொட ஹைரியா பாடசாலையின் அதிபர் நஸீரா ஹஸனார். சசனிகா ஜயலத் ஜயசுந்தர, றுவான் மார்ட்டினர்ஸ். ஒராசி சிறிவர்த்தன. பிரதமரின் ஊடக செயலாளர் ஜே. யோகராஜா உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். இதன்போது கேக் ஏனைய உணவு வகைகள் மற்றும் ஆடைத் தயாரிப்புக்களில் தொழிற் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட சுமார் 210 பேரின் சிறந்த தயாரிப்புப் பொருட்களை அதிதிகள் பார்வையிடுவதைப்படத்தில் காணலாம்.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேரசூசி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருக்கும் முகவரிகளுக்கு அஞ்சலிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| இல. | பரீட்சை | பரீட்சை நடைபெறும் திகதிகள் | பரீட்சை நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக முறைப்பட்ட - தொகுதி 2 சேவை வகுதியைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2022) | 2022 பெப்ரவரி மாதம் 27 | கொழும்பு |

அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரியுடன் இத்திணைக்களத்தில் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையைத் தொடர்பு கொள்ளவும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை www.doenests.lk இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**தொலைபேசி : 011-2785230/ 011-2786150**
**தொலைநகல் : 011-2784232**

**எல்.எம்.டி. தர்மசேன**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

5/5/2/AD/2021
**நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**
2022 பெப்ரவரி 21ஆந் திகதி

புத்தசாசன, கலாசார மற்றும் மத விவகார அமைச்சு

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

## வெற்றிடங்கள்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வெற்றிடமாகவுள்ள கீழுள்ள பதவிகளுக்காக இங்கு குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்ட அபேட்சகர்களிடம் இருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதவி: — பிரதிப் பொது முகாமையாளர் — நிதி மற்றும் நிர்வாகம் (HM 1-1)

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட பட்டத்துடன் பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருப்பது மற்றும் முதல் பட்டத்தைப் பெற்ற பின் அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையின் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**ஊதியம் :** 02/2016HM 1-1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம்

- ரூபா 80,295/= (தவிர அரசாங்கத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)
- இந்தப் பதவி சார்ந்த உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 55 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:**
கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

**பதவியின் பண்பு மற்றும் பணி நிபந்தனை**
இந்த ஆட்சேர்ப்பு அடிப்படையில் 6 மாத காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் அமையும் என்பதோடு, பதவித் தேவை மற்றும் திருப்திகரமான செயல்திறன் அடிப்படையில் சேவைக் கால ஒப்பந்தத்தை நீடிக்கும் வாய்ப்பு உள்ளது. அதேபோன்று ஒருமாத கால அறிவித்தலில் ஒப்பந்தக் காலத்தை முடிவுக்குக் கொண்டுவர நிர்வாகிக்கு முடியுமாக உள்ளது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

### பதவி: — உதவிப் பொது முகாமையாளர் — சட்டம் (MM 1-1)

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட சட்டம் தொடர்பான பட்டத்துடன் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்து 03 ஆண்டுகள் அனுபவம்.

**அல்லது**

இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணி பரீட்சையில் சித்திபெற்று உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் பெற்ற பின் 03 ஆண்டுகள் அனுபவம்.

**ஊதியம் :** 02/2016 MM 1-1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம்

- ரூபா 53,175/= (தவிர அரசாங்கத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

**வயதெல்லை:** 45 வயதிற்கு மேற்படாமதிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

**பதவியின் பண்பு மற்றும் பணி நிபந்தனை**
இந்த ஆட்சேர்ப்பு அடிப்படையில் 6 மாத காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் அமையும் என்பதோடு, பதவித் தேவை மற்றும் திருப்திகரமான செயல்திறன் அடிப்படையில் சேவைக் கால ஒப்பந்தத்தை நீடிக்கும் வாய்ப்பு உள்ளது. அதேபோன்று ஒரு மாதகால அறிவித்தலில் ஒப்பந்தக் காலத்தை முடிவுக்குக் கொண்டுவர நிர்வாகிக்கு முடியுமாக உள்ளது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

### பதவி: — உதவிப் பொது முகாமையாளர் — சந்தைப்படுத்தல், தயாரிப்பு மற்றும் ஆராய்ச்சி (MM 1-1)

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட வெகுசன தொடர்பாடல்/அரங்கியல் கலை கற்கை மற்றும் திரைப்படமியற்றல்/முகாமைத்துவம் தொடர்பில் முதல் பட்டம் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் அது சார்ந்த துறையில் 03 ஆண்டுகள் அனுபவம்.

**ஊதியம் :** 02/2016 MM 1-1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம்

- ரூபா 53,175/= (தவிர அரசாங்கத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

**வயதெல்லை:** 45 வயதிற்கு மேற்படாமதிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

**பதவியின் பண்பு மற்றும் பணி நிபந்தனை**
இந்த ஆட்சேர்ப்பு அடிப்படையில் 6 மாத காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் அமையும் என்பதோடு, பதவித் தேவை மற்றும் திருப்திகரமான செயல்திறன் அடிப்படையில் சேவைக் கால ஒப்பந்தத்தை நீடிக்கும் வாய்ப்பு உள்ளது. அதேபோன்று ஒருமாத கால அறிவித்தலில் ஒப்பந்தக் காலத்தை முடிவுக்குக் கொண்டுவர நிர்வாகிக்கு முடியுமாக உள்ளது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

### பதவி: — ஊடக மற்றும் பிரச்சார அதிகாரி (JM 1-1)

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட வெகுசன தொடர்பாடல் தொடர்பான பட்டத்துடன் பட்டத் தகைமைபெற்ற பின் அரச திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் ஓர் ஆண்டு அனுபவம்.

**ஊதியம் :** 02/2016 JM 1-1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம்

- ரூபா 42,600/= (தவிர அரசாங்கத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

**வயதெல்லை:** 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

**பதவியின் பண்பு மற்றும் பணி நிபந்தனை**
இந்த ஆட்சேர்ப்பு அடிப்படையில் 6 மாத காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் அமையும் என்பதோடு, பதவித் தேவை மற்றும் திருப்திகரமான செயல்திறன் அடிப்படையில் சேவைக் கால ஒப்பந்தத்தை நீடிக்கும் வாய்ப்பு உள்ளது. அதேபோன்று ஒருமாத கால அறிவித்தலில் ஒப்பந்தக் காலத்தை முடிவுக்குக் கொண்டுவர நிர்வாகிக்கு முடியுமாக உள்ளது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாகவும் நற்பண்பைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் என்பதோடு, கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் நிழற்பிரிதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

1. கல்விச் சான்றிதழ்களின் பிரதி
2. பிறப்பத்தாட்சிச் சான்றிதழின் பிரதி
3. அனுபவம் தொடர்பான சான்றிதழ் பிரதி

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

I. மேல் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தகைமையை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்களினால் தயாரிக்கப்பட்ட அனைத்தும் அடங்கிய சுயவிபரக்கோவையைக் கொண்ட விண்ணப்பங்களை, உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரினது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் 2022.03.11 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களையும் உறுதி செய்வதற்கு குறித்த ஆவணங்களின் பிரதிகளை உறுதி செய்து விண்ணப்பப்படிவத்தில் இணைத்து அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடல் வேண்டும்.
II. விண்ணப்பங்கள் ஏற்கும் திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய் என்பது ஆட்சேர்ப்புக்கு முன்னர் அல்லது ஆட்சேர்ப்புக்கு பின் தெரியவந்தால் நீங்கள் இந்தப் பதவிக்கு தகுதியற்றவர் என கருதப்படுவதோடு பதவி நீக்கப்படுவதற்கு அது காரணமாகும்.
III. இது தொடர்பில் முழுமையான விபரம் திரைப்படக் கூட்டுத்தாபன இணையதளத்தில் இருந்து (www.nfc.gov.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர், ஜயந்த தர்மதாச**
**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.**

**பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப் படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்:
**அக்சிஸ் ஏசியா இக்விடி (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: **PV 78714**

பதிவு முகவரி :
**இல. 67, வாலுகாராம வீதி, கொழும்பு -3**

கம்பனியின் புதிய பெயர்:
**ஓரச் இன்விடி பாட்னர்ஸ் (பீவீடீ) எல்டீடி**

**செயலாளர்**

Repeat Your ad For Better Offers

# சாதனை வீரர் சுல்பிகார் கௌரவிப்பு

இனங்களுக்கிடையில் இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு தழுவிய தனி நபர் சைக்கிள் சவாரியை எட்டுநாட்களுக்குள் (1407 KM) வெற்றிகரமாக நிறைவு செய்த இலங்கையின் பெருமை, சாதனை வீரர் சுல்பிகாரை வரவேற்று கௌரவிக்கும் சிறப்பு நிகழ்வு (19) ஜே.ஜே.பௌண்டேசன் ஏற்பாட்டில், பிரபல தொழிலதிபர்,சமூக சேவகர் DR. I.Y.M.அனீப் தலைமையில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சி பிரிவு பணிப்பாளர் யூ.எல் யாக்கூப், சிரேஸ்ட அறிவிப்பாளர், சட்டத்தரணி, கவிஞர் ஏ.யெம் தாஜ், சிரேஷ்ட அறிவிப்பாளர் "மனித நேயன்" இர்சாத் ஏ காதர், பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின் ஆகியோர் நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்டு சாதனையாளர் சுல்பிகார் குறித்து பாராட்டி பேசினர். JJ FOUNDATION பணிப்பாளர் Dr.IYM அனீப் சாதனை வீரர் சுல்பிகாருக்கு நினைவு சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தமை விசேட அம்சமாகும்.



**பெயர் மாற்றம்**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் 63/N தொட்டலாகல பிரிவில் தொட்டலாகல வத்த ஹப்புத்தளையில் வசிக்கும் **சுரேஷ்குமார் வளர்மதி** ஆகிய எனது பெயரை எனது விருப்பத்தின் அடிப்படையில் இதன்பிறகு **சுபோதா மதுஷானி பெரேரா** என எனது பெயரை மாற்றிக் கொள்வதாக இலங்கை குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

# இலங்கை வங்கி

## விலை கோரல் (IFB)

**இலங்கை வங்கிக்கு தரவு இழப்பு / கசிவுத் தவிர்ப்புத் தீர்வு, தரவு வகைப்படுத்தும் கருவி என்பவற்றை வடிவமைத்தல், வழங்குதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்**

**கேள்விப்பத்திர இலக்கம் : P/PROC/2022/25**

BOC சதுக்கம், இலக்கம் 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை வங்கித் தலைமையகத்தின் 14ஆவது மாடியிலுள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதிப் பிரதான முகாமையாளரிடமிருந்து இலங்கை வங்கிக்கான தரவு இழப்பு / கசிவைத் தவிர்த்தல் தீர்வு (DLP), தரவு வகைப்படுத்தல் கருவி என்பவற்றை வடிவமைத்தல் வழங்குதல் செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக தகுதியுடைய கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை கூறல்கள் கோரப்படுகின்றன. ஏலவிலை கூற ஆர்வமுடைய உள்நாட்டு முதன்மையான உற்பத்தியாளர் அல்லது அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்களைக் கொண்ட வெளிநாட்டு முதன்மையான உற்பத்தியாளர் அல்லது வெளிநாட்டு முதன்மையான உற்பத்தியாளரிடம் அனுமதி பெற்ற முகவர் அல்லது கூட்டு முயற்சிகள் / கூட்டமைப்புகள் ஏலவிலை கூறல்களை சமர்ப்பிக்க முடியும்.

| | |
|---|---|
| ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும் | 2022.03.11ஆம் திகதி 1200 மணி வரை |
| ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் நேரம் | 0900 மணி முதல் 1200 மணி வரை |
| ஏலவிலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2022.03.14ஆம் திகதி 1000 மணி |
| ஏலவிலை கூறல்களைத் திறக்கும் காலம் | ஏலவிலை கூறல் முடிவடைந்த உடன் |
| முன்கூட்டிய ஏலவிலைகூறல் கூட்டம் | 2022.03.03 1100 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகக் கட்டடத்திலுள்ள 03ஆம் தளத்தில் அல்லது இணையவழி இடம் பெறும் |

**இந்த ஏல விலை கூறலில் பங்குபற்றுவதற்கு விலை கூறுவோர் குறைந்தபட்சம் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

i. ஏலவிலை கூற ஆர்வமுடையவரின் வருடாந்தப் பணப் புரள்வு 2019/2020, 2018/2019, 2017/2018 முதலான கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் ஆகக் குறைந்தது ரூ. 75 மில்லியனாகவோ அல்லது அதற்குச் சமனான அமெரிக்க டொலர் பெறுமதியுடையதாகவோ காணப்பட வேண்டும்.

ii. ஏலவிலை கூறுபவர் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் உலகளாவிய ரீதியில் உள்ள ஏதேனும் ஒரு நிதி நிறுவனத்திற்கு DLP தீர்வினை வழங்கியிருக்க வேண்டும்.

iii. ஏலவிலை கூறுபவர் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் உலகளாவிய ரீதியில் உள்ள ஏதேனும் மூன்று நிறுவனங்களுக்கு தரவு வகைப்படுத்தல் தீர்வுகளை வழங்கியிருக்க வேண்டும்.

iv. ஏலவிலை கூறுபவர் இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கை வங்கியின் நிராகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் காணப்படாதவராக இருத்தல் வேண்டும்.

v. ஏலவிலை கூறுபவர் இலங்கையினுள் காணப்படும் வங்கியின் வர்த்தக எல்லை தொடர்பாக கருத்து வேறுபாடு உடையவராக இருத்தலாகாது.

ஏலவிலை கூற ஆர்வமுடையவர்கள் ஆங்கில மொழி விலை கூறல் ஆவணத்தொகுதி மற்றும் தொடர்புடைய விவரக் குறிப்புகளை 2022.03.11ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1400 மணிக்குள் இலக்கம் 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள இலங்கை வங்கியின் 14ஆம் தளத்தில் உள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பம் திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா. 15,120/- என்பவற்றைச் (ரூபா.14,000/- + VAT) (கட்டணம் செலுத்தும் முறை பணமாகும்) சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் மற்றொரு வர்த்தக வங்கியிடமிருந்து ரூபா.600,000/- (ரூபாய் ஆறு இலட்சம் மாத்திரம்) பெறுமதியில் பெறப்பட்டதும் 2022.07.11ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். வங்கி உத்தரவாதத்திற்குப் பதிலாக பண வைப்புகள் / வங்கிக் கொடுப்பனவுக் கட்டளை / வங்கிக் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பொது ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விலைகூறலுடன் PCA3 படிவத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

ஏலவிலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்காமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்,
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி,
14ஆம் தளம்,
"இலங்கை வங்கிச் சதுக்கம்"
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை
கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி இல.: 0094112544310, 0094112434786
மின்னஞ்சல் : procurement@boc.lk

## தர்கா நகர் முஅய்யதுல் இஸ்லாம்;

# அரபுக்கல்லூரி 7வது பட்டமளிப்பும் 105வது வருட பூர்த்தி விழாவும்

**பேருவளை விசேட நிருபர்**

தர்காநகர் முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி 105 ஆவது வருட பூர்த்தி விழாவும் 7 ஆவது பட்டமளிப்பு வைபவமும் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கலாபீட நிர்வாக சபைத் தலைவர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எஸ்.ஏ.எம் மஸா ஆலிம் (பஹ்ஜி) தலைமையில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

விழாவில் தென்னிந்தியாவைச் சேர்ந்த அரூஸியதுல் காதிரிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அல்லாமா கலாநிதி அஹமட் நாஸிர் ஆலிம் பின் அஷ் ஷெய்க் சுஹைப் ஆலிம் அரூஸியதுல் காதிரி ஜெலாலி, ஜெமாலி பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

2017 ஆம் 2019 ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் கல்வியைப் பூர்த்திசெய்த 18 மாணவர்கள் விழாவில் பட்டம் பெற்றுக் கொள்ளவுள்ளதாக அதிபர் ஷெய்குல் முஅய்யதி மௌலவி எம். அஸ்மிகான் (முஅய்யதி) தெரிவித்தார்.

தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் அஸ்லம், முன்னாள் அதிபர் மௌலவி அப்துல் வாஹித் (பஹ்ஜி), அக்குரனை ரஹ்மானிய்யா முன்னாள் அதிபர் மௌலவி முஹம்மத் ஜிப்ரி (ரஹ்மானி), அகில இலங்கை இமாம்கள் மன்ற தலைவர் மௌலவி பௌஸூல் அமீர் (முஅய்யதி) கல்முனை மன்பவுல் ஹூதா அரபுக் கல்லூரி விரிவுரையாளர் மௌலவி எம். ஹம்ஸூல்லாஹ் முஅய்யதி ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்துகொள்வர்.

உலமாக்கள்,புத்திஜீவிகள், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள், கலாபீட நிர்வாக சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் விழாவில் பங்குபற்றுவர்.

# ஆற்றில் நீராடிய பெண்ணின் தங்கச் சங்கிலி அபேஸ்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மல்வத்து ஓயா ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த பெண் ஒருவருடைய இரண்டரை பவுண் தங்கச்சங்கிலியொன்றினை அறுத்துச் சென்ற சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் (19) மாலை அநுராதபுரம் சுது பாலத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே தனது பிள்ளைகளுடன் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த பெண்ணுடைய கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை அறுத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# போதைப்பொருள் வைத்திருந்த 10 பேர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நகரை அண்மித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் மூலம் மூன்று இலட்சம் ரூபா பெறுமதிமிக்க போதைப்பொருட்களை வைத்திருந்த பத்து பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் புத்த கயா மாவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஆறு கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் தம்பவெல குருதெனிய கண்டி என்ற முகவரியைச் சேர்ந்த ஒருவரையும் விஜயபுர கஜபா மாவத்தை பகுதியில் 5 கிராம் 968 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் மேற்கொண்ட மற்றுமொரு சுற்றி வளைப்பின் போது போதை தரும் மாத்திரைகளை வைத்திருந்த அநுராதபுரம் மயிலகஹ சந்தியை வசிப்பிடமாக கொண்ட ஐவரை கைது செய்துள்ளதுடன் போதைப் பொருள் மற்றும் கேரள கஞ்சாவுடன் ஸ்ரீராவஸ்திபுர, பன்டுளகம மற்றும் தஹியாகம பகுதிகளைச் சேர்ந்த மூவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

# விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

## வாடகை அடிப்படையில் தலைமை நிறுவனத்திற்கு மோட்டார் காரொன்றை வழங்குவதற்கான பெறுகை

**விலைக்கோரல் இல. S2/A3/2022/04**

விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வாடகை அடிப்படையில் (சாரதி இன்றி) தலைமை நிறுவனத்திற்கு மோட்டார் காரொன்றை வழங்குவதற்கான பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைகின்றார்.

2. விலைமனுதாரர்கள் பின்வரும் ஆகக்குறைந்த மூலப் பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- இரண்டு வருட காலத்திற்கு வாடகை அடிப்படையில் மோட்டார் கார்களை வழங்கும் தரப்பினர், பதிவு செய்யப்பட்ட வாகன வழங்குநர்கள் அல்லது வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.
- 2016 வருடத்திற்குப் பிந்தாத உற்பத்தி வருடத்தைக் கொண்டவையாகவிருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரர் வாடகைதாரர் தீர்மானிக்கும் இடத்தில் வாகனத்தை பார்வைக்காக வைத்தல் வேண்டும்.
- ஒருமுறை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், சேர்விஸ் மற்றும் பராமரிப்பு காலத்தில் இதனையொத்த வாகனமொன்றை பிரதியீடாக வாகன வழங்குநர் வழங்குதல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை 2022 பெப்ரவரி 21ஆம் திகதி முதல் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் நிர்வாகப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: +94 112887015 மின்னஞ்சல் முகவரி: kmpdjayampathi@gmail.com (அலுவலக மின்னஞ்சல்). விலைமனு ஆவணங்கள் பார்வையிடும் நோக்கத்திற்கு மட்டும் NAO இணையதளத்திலும் *(http://www.auditorgeneral.gov.lk)* கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 பெப்ரவரி 21ஆம் திகதி முதல் 2022 மார்ச் 14ஆம் திகதி வரையில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியும் மற்றும் தலைமை கணக்காளருக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரிலும் ஆங்கில மொழியிலான ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. விலைமனுக்களை 2022 மார்ச் 15ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் கணக்காய்வாளர் நாயகத்தின் பெயரில் மூன்று இலட்சம் ரூபா (300,000.00 ரூபா) பண வைப்பு அல்லது வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்ட வங்கி உத்தரவாதம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. நாட்டின் சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் 2022 மார்ச் 04ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் இடம்பெறும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் வளமுள்ள விலைமனுதாரர்கள் நேரடியாக அல்லது Zoom நிகழ்நிலையின் ஊடாக கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தேசிய கணக்காய்வு அலுவலகம் (NAO),**
**இல. 306/72, பொல்துவ வீதி,**
**பத்தரமுல்ல.**

---

## மகாவலி வலயம் சார்ந்த கால்வாய்கள் மற்றும் குடியேற்ற பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

## இலங்கை மகாவலி அதிகார சபை

# கேள்வி அறிவித்தல்

இலங்கை மகாவலி அதிகார சபையின் திணைக்களப் பெறுகைக் குழுத் தவிசாளரின் சார்பில் இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் இல. 500, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 எனும் இடத்தில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 09வது மாடியில் 2022-03-15ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு பின்வரும் வேலைகளுக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| இல. | ஒப்பந்த இல. | வேலை விபரங்கள் | தேவையான ஆகக் குறைந்த CIDA பதிவு, தரம், துறை | ஒரு தொகுதி ஆவணங்களுக்கான மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | DDG/TS/CON/L/IRR/30 | மகாவலி ‘‘எல்’’ வலயத்தின், வஹரதென்ன, ருவண்மடுவ குளத்தின் மடையை நிர்மாணித்தல் (மதிப்பீட்டுப் பெறுமதி வெட் இன்றி 10 மில்லியன் ரூபா மற்றும் ஒப்பந்தக் காலம் 210 நாட்கள்) | C6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு | 5,000.00 |
| 2 | DDG/TS/CON/L/IRR/31 | மகாவலி ‘‘எல்’’ வலயத்தின், நெலும் குளத்தின் குள அணைக்கட்டை மறுசீரமைத்தல் (மதிப்பீட்டுப் பெறுமதி வெட் இன்றி 15 மில்லியன் ரூபா மற்றும் ஒப்பந்தக் காலம் 210 நாட்கள்) | C6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு | 5,000.00 |

மேற்காணும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள அந்தந்த வேலைகளுக்காக காட்டப்பட்ள்ள தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரம் மற்றும் குறித்த துறையில் பதிவைக் கொண்டுள்ள CIDA வில் பதிவு செய்து கொண்டுள்ள மற்றும் 05 மில்லியன் ரூபாவை விஞ்சும் ஒப்பந்தங்கள் தொடர்பில் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இவ்விலைகோரலுக்குத் தகைமையுடையவர்களாவர்.

கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 2021-02-18ஆம் திகதிய மற்றும் 04/2016 (iii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன கேள்விகளை மதிப்பிடுகையில் கவனத்திற் கொள்ளப்படும். மேலும் 2021-01-11ஆம் திகதிய மற்றும் 03/2020(ii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

வளமுள்ள விலைமனுதாரர்கள் நிறுவனத்தின் கடித்தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒரு தொகுதி கேள்வி ஆவணங்களுக்கான ரொக்கப் பணமாக மீளளிக்கப்படாத கட்டணத்தையும் செலுத்தி கொழும்பு-10, டீ.பி. ஜாயா மாவத்தை, இல. 500இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 3ம் மாடியின் (தொழில்நுட்ப சேவைகள்) பிரதிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இவ்வேலைகளுக்கான கேள்விப் படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். 2022-02-21ஆம் திகதி முதல் 2022-03-14ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் மட்டுமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். எந்தவொரு கேள்விதாரரும் ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதானது ஒப்பந்தக்காரர்களின் CIDA பதிவு எல்லைகளுக்கு அமைவாக வரையறுக்கப்படும்.

2022-02-21ஆம் திகதி முதல் 2022-03-14ஆம் திகதி வரையில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் கொழும்பு-10, டீ.பி. ஜாயா மாவத்தை, இல. 500இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 3ம் மாடியின் (தொழில்நுட்ப சேவைகள்) பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்விப் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு, முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன் 2022-03-15ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கொழும்பு-10, டீ.பி. ஜாயா மாவத்தை, இல. 500இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 9ம் மாடியின் பணிப்பாளர் நாயகத்திற்கு நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்யலாம். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே அவை திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகளான இரண்டுக்கு (2) மேற்படாத நபர்கள் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-2689651, 011-2687475.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை.**

---

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE
TO BUY YOUR
DREAM CAR!
Sunday Observer adz



- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

---

# பெறுகை அறிவித்தல்

## ஆயுர்வேத திணைக்களம்

### சுதேச மருத்துவ மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை மேம்பாடு மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சு

## சுத்திகரிப்புச் சேவைகள், பாதுகாப்புச் சேவைகள், பச்சை மூலிகைகள், உலர்ந்த மூலிகைகள், பச்சை / உலர் உணவுகள், சமைத்த உணவுகள், உலர்ந்த விறகுகள், சலவைச் சேவைகள் வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரல்

2022 மே மாதம் 01ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலத்திற்கு நாவின்ன ஆயுர்வேத திணைக்களம் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களுக்குத் தேவையான பின்வரும் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ஆயுர்வேதத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் இயைபுடைய வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

I. **பாதுகாப்புச் சேவைகள் வழங்குதல்**
**AYU/SUP/3/3/3/Security/2022**
- தலைமை அலுவலகம், நாவின்ன, மஹரகம.
- உள்நாட்டு வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவனம், நாவின்ன
- பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், நாவின்ன
- தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
- கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
- ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
- சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கோணேஷபுரி
- யூனானி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய்
- ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை
- சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை
- ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, நிந்தவூர்
- சிறுநீரக நோய் நிவாரண ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மதவாச்சி
- பாரம்பரிய ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மிஹிந்தலை.
- ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், பட்டிபொல
- ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், பின்னதுவ.
- ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், கன்னெலிய
- ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், பல்லேகலை
- ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், கிராந்துருகோட்டே

II. **சுத்திகரிப்புச் சேவைகள் வழங்குதல்**
**AYU/SUP/3/3/3/Cleaning/2022**
- தலைமை அலுவலகம், நாவின்ன, மஹரகம.
- உள்நாட்டு வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவனம், நாவின்ன
- பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், நாவின்ன
- தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
- கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
- ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
- சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கோணேஷபுரி
- யூனானி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய்
- ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை
- சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை
- ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, நிந்தவூர்
- சிறுநீரக நோய் நிவாரண ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மதவாச்சி
- பாரம்பரிய ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மிஹிந்தலை.

III. **பச்சை மூலிகைகள் வழங்குதல்**
**AYU/SUP/3/3/3/Raw Drugs/2022**
- தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
- கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
- ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
- சிறுநீரக நோய் நிவாரண ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மதவாச்சி
- பாரம்பரிய ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மிஹிந்தலை.

IV. **உலர்ந்த மூலிகைகள் வழங்குதல்**
**AYU/SUP/3/3/7/Dry Drugs/2022**
- பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், நாவின்ன
- தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
- கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
- ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
- சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கோணேஷபுரி
- ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை
- சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை
- சிறுநீரக நோய் நிவாரண ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மதவாச்சி
- பாரம்பரிய ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மிஹிந்தலை.

V. **உலர்ந்த/ உலராத உணவுகள் வழங்குதல்**
**AYU/SUP/3/3/7/Raw& Dry Foods/2022**
- பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், நாவின்ன
- தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
- கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
- ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
- யுனானி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய்
- சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை
- சிறுநீரக நோய் நிவாரண ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மதவாச்சி

VI. **சமைத்த உணவுகள் வழங்குதல்**
**AYU/SUP/3/3/7/Cooked Foods/2022**
- ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை

VII. **உலர்ந்த விறகுகள் வழங்குதல்**
**AYU/SUP/3/3/5/Firewood/2022**
- ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை
- ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
- யூனானி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய்
- சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை

VIII. **சலவைச் சேவைகள் வழங்குதல்**
**AYU/SUP/3/3/7/Laundry/2022**
- பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், நாவின்ன
- தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
- கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
- ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
- சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கோணேஷபுரி
- யூனானி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய்
- ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை
- சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை
- சிறுநீரக நோய் நிவாரண ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மதவாச்சி

**03. விலைமனு ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு**

விலைமனு ஆவணங்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.1 வியாபாரம் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்வதற்காக பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.

3.2 உலர்ந்த / உலராத / சமைத்த உணவுகள், பிளக்கப்பட்ட விறகுகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள் மூன்று வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதை ஆவணம் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

3.3 சலவைச் சேவையை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள் இரண்டு வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அதை ஆவணம் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

3.4 பச்சை மூலிகைகள் / உலர்ந்த மூலிகைகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள் இரண்டு வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும். அதை ஆவணம் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

3.5 சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் தொடர்பில் விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முன்வரும் வழங்குநர்கள், தொழிற் சட்டங்களைக் கடைபிடிப்பதாக தொழிலாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.6 சலவைச் சேவைகள் மற்றும் உணவு வழங்கும் சேவைகள் தொடர்பில் விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முன்வரும் வழங்குநர்கள், தமது வியாபாரத்தின் முறையான தன்மை தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரிடம் பெற்றுக்கொண்ட தகுதிச் சான்றிதழை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.7 இயைபுடைய பிரதேசத்தின் வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3.8 மேற்படி விடயங்களுக்குப் புறம்பாக அந்தந்த விலைக்கோரல் நிபந்தனைகளின் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

மேற்படி வழங்கல் மற்றும் சேவைகளுக்காக விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு விரும்பும் நபர்கள் அல்லது நிறுவனங்கள், அதற்கான விலைமனு ஆவணங்களை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரியில் அமைந்துள்ள ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திலுள்ள வழங்கல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

> விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் திகதி 2022 மார்ச் மாதம் 21ஆம் திகதி பி.ப. 3.00 மணியாகும்.
> விலைமனு ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் திகதி 2022 மார்ச் மாதம் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணியாகும்.
> இதற்கு இயைபான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022 மார்ச் மாதம் 15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஆயுர்வேத திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

04. **பெறுகைக் கட்டணங்கள்**

பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக ஒரு விலைக்கோரல் ஆவணத்தில் சகல நிறுவனங்களுக்கும் விலைகளைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அதற்கு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 12,500.00 ரூபா செலுத்துதல் வேண்டும்.

சுத்திகரிப்பு சேவை வழங்குதல், பச்சை மூலிகைகள் வழங்குதல், உலர்ந்த மூலிகைகள் வழங்குதல், உலர்ந்த / உலராத உணவுகள் வழங்குதல், சமைத்த உணவுகள் வழங்குதல் என்பவற்றுக்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் வெவ்வேறாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 3,500.00 ரூபா செலுத்துதல் வேண்டும்.

உலர்ந்த உணவு வழங்குதல், சலவை சேவைகளை வழங்குவதற்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் வெவ்வேறாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 1,000.00 ரூபா செலுத்துதல் வேண்டும்.

இந்த பெறுகைக் கட்டணத்தை ஆயுர்வேத திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அந்தப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனு ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும். அல்லாவிடில் ‘‘ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம்’’ பெயரில் இலங்கை வங்கி, மஹரகம கிளையில் பேணப்படும் 7041294 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து, அந்த வைப்புச் சீட்டை விலைமனு ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

05. ஒவ்வொரு நிறுவனங்களின் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக வெவ்வேறாக விலைமனு ஆவணத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுப்பிணைமுறியைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து ஒவ்வொரு பிரதியையும் வெவ்வேறான உறைகளில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வழங்கல் மற்றும் சேவையின் பெயர் மற்றும் இயைபுடைய நிறுவனத்தின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு ஒரு உறையில் ‘‘மூலப் பிரதி’’ எனவும், மற்றைய உறையில் ‘‘நகல் பிரதி’’ எனவும் குறிப்பிடுதல் வேண்டும். பின் அவ்விரு உறைகளையும் ‘‘தலைவர், பெறுகைக் குழு, ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதான கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும்.

06. அனைத்து விலைமனுக்களும் 2022 மார்ச் மாதம் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் என்பதுடன் ஏற்றக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதால் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு தமது ஆளடையாளத்தை உறுதி செய்ததன் பின் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் விலைமனு ஆவணங்களை, 2022 மார்ச் மாதம் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படுவது நிறைவடைவதால், அந்த விலைமனு ஆவணங்கள் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதா என விண்ணப்பதாரர்கள் உறுதி செய்து கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**ஆயுர்வேத ஆணையாளர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம.**
**2022-02-21**

# மீட்டுக் கொள்ளப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

வ/ப பன்னில்பத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கஹவத்த, என்தான, பஹமுனுபன்ன, தெமுவாத, ஹொரஹின் எல்ல, மடலகம குடியிருப்பு, நகல்வத்துர ஆகிய கிராமிய வங்கிகளில், 2018.01.01 முதல் 2020.09.30 வரை அடகு வைத்து, 2022.03.25 வரை மீட்டுக்கொள்ளப்படாத அடகு நகைகள், 2022.03.26 அன்று மு.ப. 09.30 முதல் கஹவத்த வ/ப பன்னில்பத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்**

**தொலைபேசி இல:**
**045-2271153/ 045-2270242**

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 பெப்ரவரி 23ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 80,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122E276 | LKA18222H268 | LKA36423B248 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 25,000 | 25,000 | 80,000 |

ஏல விற்பனைத் திகதி : 2022 பெப்ரவரி 23
தீர்ப்பனவுத் திகதி : 2022 பெப்ரவரி 25
வழங்கப்படும் திகதி : 2022 பெப்ரவரி 25
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான
இறுதித் திகதியும் நேரமும் : 2022 பெப்ரவரி 23, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

## அற்றோணி தத்துவப்பத்திரத்தை மீளப்பெறல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டம், வாலவெல, மாத்தலாப்பிடிய, இல. 40இல் வசிக்கும் **தூல்வல மெதகெதர அனுஷா குமுது குமாரி தூல்வல** ஆகிய என்னால் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி **ஆர்.ஏ. சுனந்தா குமுது ரனசிங்க** என்பவரால் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட அற்றோர்ணி தத்துவப்பத்திர இல 5019 29.06.2020இல் யடவத்த பாடசாலை அருகில் இல. 1/2, இல் வசிக்கும் **பஹல கெதர நாலக்க பண்டார** (தே.அ.அ.இல. 812550799V) என்பவருக்கு வழங்கப்பட்டதை இன்று முதல் மீளப்பெறுவதோடு ரத்துச் செய்யப்படுகிறது.
இன்று முதல் மேற்கூறிய இல. 5019 அற்றோணி தத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

**தூல்வல மெதகெதர**
**அனுஷா குமுது குமாரி தூல்வல.**

---

## (107ஆம் அதிகாரமான) நொத்தாரிசு கட்டளைச்சட்டத்தின் முதலாவது உப அட்டவணையில் 'அ' பிரிவில் 2ம் பிரமாணத்தின் கீழான அறிவித்தல்

எனது பிரதிக்கிளை எழுதுநர் பயிற்சிக்காலம் முடிவடைந்திருப்பதால் நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் தகுதி பெற்றுள்ளேன். ஆதலால் நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பதிவாளர் நாயகம் அவர்களுக்கு விண்ணப்பிக்கவுள்ளேன் என்பதை இல. 352, கிரிவன்வெவ தெற்கு, வெலியோயா எனும் முகவரியில் வசிக்கும் திரு. I.M.M. தென்னகோன் ஆகிய நான் இத்தால் யாவருக்கும் அறியத்தருகிறேன்.

| ................... | ................................. |
|---|---|
| திகதி | I.M.M. தென்னகோன் |

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## எரிசக்தி அமைச்சு

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**தற்போதுள்ள கொங்கிறீட் நடைபாதையை வெட்டுதல் மற்றும் தகர்த்தல், அகழ்தல், குறைபாடு/ கசிவுகளைக் கண்டறிதல், குழாய் திருத்தவேலைகள் மற்றும் பதித்தல், பரீட்சித்தல், மீள்நிரப்புதல் மற்றும் கொங்கிறீட்டிடல் உட்பட கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் Apron A இல் உள்ள HP 7 முதல் HP 9 வரையான எரிபொருள் Hydrant குழாய்களின் திருத்தவேலைகள்**

**B/18/2022**

1. ''தற்போதுள்ள கொங்கிறீட் நடைபாதையை வெட்டுதல் மற்றும் தகர்த்தல், அகழ்தல், குறைபாடு/ கசிவுகளைக் கண்டறிதல், குழாய் திருத்தவேலைகள் மற்றும் பதித்தல், பரீட்சித்தல், மீள்நிரப்புதல் மற்றும் கொங்கிறீட்டிடல் உட்பட கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் Apron A இல் உள்ள HP 7 முதல் HP 9 வரையான எரிபொருள் Hydrant குழாய்களின் திருத்தவேலைகள்'' எனும் ஒப்பந்தத்திற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. இவ்வேலையின் நிர்மாணக்காலம் மூன்று (03) மாதங்களாகும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாத வராகவும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் **ICTAD** நிறுவனத்தில் இயைபுடைய சிவில் வேலைகளுக்கு C 4 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு மற்றும் இயைபுடைய இயந்திரவியல் வேலைகளுக்கு EM2 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைகளில் உள்ளடங்குபவை: இந்தக் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் / பெயரிடப்பட்ட உப ஒப்பந்தக்காரர்கள் இயைபுடைய சிவில் வேலைகளுக்கு C 4 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு மற்றும் இயைபுடைய இயந்திரவியல் வேலைகளுக்கு EM2 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் பெற்றோலிய எண்ணெய் / வாயு என்பவற்றிற்குப் பயன்படுத்தப்படும் உருக்குக் குழாய்களின் திருத்தவேலைகள் / உருக்கியொட்டும் வேலைகளில் ஆகக் குறைந்தது ஒரு வேலையிலாவது அனுவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை http://ceypetco.gov.lk/public-tenders எனும் CPC உத்தியோகபூர்வ இணையதளத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவை (ரூ. 925.93 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2022-03-14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கு தயவு செய்து 011-5855415 எனும் தொலைபேசியின் ஊடாக இயந்திரவியல் பொறியியலாளரைத் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு -09.**

---

# கேள்விகளுக்கான அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்குரித்தான பின்வரும் பிரதேச பிரிவுகளுக்குரித்தான பின்வரும் வழங்கல்களுக்காக உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொ. இல. | வேலை விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் | | | கேள்வி ஆவணக் கட்டணம் |
| | | | ரொக்கப் பணமாக | வங்கிப் பிணை முறியாக | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் | |
| 01 | 08 எண்ணிக்கையான இரு சக்கர டிராக்டர் டிரேலர்களைக் கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/07 (2022) | 16,000.00 | 32,000.00 | 2022-06-14 | ரூபா 2,500.00 |
| 02 | 03 எண்ணிக்கையான Four Wheel Tractor Low Bed Trailer கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/09 (2022) | 10,500.00 | 21,000.00 | 2022-06-28 | ரூபா 2,000.00 |
| 03 | 05 எண்ணிக்கையான Four Wheel Tractor Operated Bund Forming Machine கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/10 (2022) | 20,000.00 | 40,000.00 | 2022-06-14 | ரூபா 2,500.00 |

இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேற்படி ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் பெற்றுக்கொண்ட கேள்விப் படிவங்களைப் பயன்படுத்தி வெவ்வேறான கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் E நிரலில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாக உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்து 2022-02-22ஆம் திகதி முதல் 2022-03-14ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ''தலைவர், பிரதேச பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல வழங்குநர்களும் மேற்படி அட்டவணையின் D நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பிணைப் பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் வங்கிப் பிணை முறியின் ஊடாக பிணையை வைப்புச் செய்வதானால் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2022-03-15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் உடன் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதனை.**
2022-02-21

**081-2388122**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## போக்குவரத்து அமைச்சு

## வாகன ஒழுங்கமைப்பு, பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் புகையிரத பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

## வாடிக்கையாளர் மற்றும் அமுல்நடாத்துதல் முகவராண்மை

## இலங்கை போக்குவரத்து சபை

**உலக வங்கி நிதியிடப்பட்ட மூலதன செயற்றிட்டங்கள்**
**Pool Arrangement of the Contingent Emergency Response Component (CERC)**
**தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**
**Contract No.: IFB/CERC/MOT/SLTB/NCB-001/2021/C01 to 2021-C-06**

1. **Pool Arrangement of The Contingent Emergency Response Component (CERC)** இன் ஆகுசெலவிற்காக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது கடனொன்றை/ மானியமொன்றை பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த பணக்கொடுப்பனவுகளுக்காக இந்நிதியின் பாகமொன்றை செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலையின் பெயர் | விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனுப்பிணை (இ.ரூபாவில்) 2022 …………… ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். | பூர்த்தி செய்யும் காலப்பகுதி மாதங்களில் | கட்டிடங்களின் கீழான ஆகக்குறைந்த ICTAD தரம். |
|---|---|---|---|---|---|
| IFB/CERC/MOT/ SLTB/NCB-001/2021-C-01 | மஹரகம,மட்டக்குளி, இரத்மலான, மற்றும் களுத்துறை இபோச டிப்போக்களின் ஆண்களுக்கான சுகாதார வசதிகள் மற்றும் ஹோமாகம, மொறட்டுவ மற்றும் கடவத்த இபோச டிப்போக்களில் பெண்களுக்கான சுகாதார வசதிகளை நிர்மாணித்தல். | 12500 ரூபா | 350,000 | 06 மாதங்கள் | சி-5 |
| IFB/CERC/MOT/ SLTB/NCB-001/2021-C-02 | நீர்கொழும்பு, குளியாப்பிட்டிய இபோச டிப்போக்களில் ஆண்களுக்கான சுகாதார வசதிகள் மற்றும் வெலிசர, நிக்கவரட்டிய இபோச டிப்போக்களில் பெண்களுக்கான சுகாதார வசதிகளை நிர்மாணித்தல் | 7000 ரூபா | 200,000 | 04 மாதங்கள் | சி-6 |
| IFB/CERC/MOT/ SLTB/NCB-001/2021-C-03 | அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை இபோச டிப்போக்களில் ஆண்களுக்கான சுகாதார வசதிகள் மற்றும் வவுனியா இபோச டிப்போவில் பெண்களுக்கான சுகாதார வசதிகளை நிர்மாணித்தல் | 5500 ரூபா | 150,000 | 04 மாதங்கள் | சி-6 |
| IFB/CERC/MOT/ SLTB/NCB-001/2021-C-04 | கண்டி வடக்கு, யட்டிநுவர இபோச டிப்போக்களில் ஆண்களுக்கான சுகாதார வசதிகள் மற்றும் யட்டிநுவர இபோச டிப்போவில் பெண்களுக்கான சுகாதார வசதிகளை நிர்மாணித்தல் | 7000 ரூபா | 200,000 | 04 மாதங்கள் | சி-6 |
| IFB/CERC/MOT/ SLTB/NCB-001/2021-C-05 | யாழ்ப்பாண இபோச டிப்போவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சுகாதார வசதிகளை நிர்மாணித்தல் | 3500 ரூபா | 100,000 | 03 மாதங்கள் | சி-7 |
| IFB/CERC/MOT/ SLTB/NCB-001/2021-C-06 | தங்காலை இபோச டிப்போவில் ஆண்களுக்கான சுகாதார வசதிகள் மற்றும் கதிர்காமம் இபோச டிப்போவில் பெண்களுக்கான சுகாதார வசதிகளை நிர்மாணித்தல் | 3500 ரூபா | 100,000 | 03 மாதங்கள் | சி-7 |

3. தகைமைத் தேவைப்பாடுகள்: பின்வரும் தேவைப்பாடு/ தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான காட்சிப்படுத்தலுக்கான ஆவண சான்றை விலைமனுதாரர் வழங்கல் வேண்டும்.
   - ❖ மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்தத்திற்கு உரித்தான தரத்திற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள ICTAD/ CIDA பதிவு. கட்டிடங்களில் விஷேடத்துவம்.
   - ❖ கடந்த ஐந்து (5) வருடங்களில் ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வானது, அணுகல், தற்போதுள்ள நிதியிடல் வளங்கள் பின்வருமாறு.

| ஒப்பந்த இலக்கம் | கடந்த 5 வருடங்களில் தேவைப்படும் ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு | நிதியிடல் வளங்களின் அணுகல் அல்லது இருப்புநிலை. |
|---|---|---|
| IFB/CERC/MOT/ SLTB/NCB/001/2021/C-01 | 50 மில்லியன் ரூபா | 3.5 மில்லியன் |
| IFB/CERC/MOT/ SLTB/NCB/001/2021/C-02, C03 மற்றும் C-04 | 30 மில்லியன் ரூபா | 2.0 மில்லியன் |
| IFB/CERC/MOT/ SLTB/NCB/001/2021/C-05 மற்றும் C-06 | 15 மில்லியன் ரூபா | 1.0 மில்லியன் |

   - ❖ பொதுவான அனுபவம்: ஒப்பந்தக்காரராக, உப-ஒப்பந்தக்காரராக அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களில் ஒப்பந்தங்களின் கீழான அனுபவம்.
   - ❖ திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம்: ஒப்பந்தக்காரராக, முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உபஒப்பந்தக்காரராக ஆகக் குறைந்தது ஒரு (1) நிகரான தன்மையுள்ள ஒப்பந்தத்தில் கடந்த ஐந்து (5) வருடங்களில் ஒப்பந்தக்காரராக திருப்திகரமாகவும் போதுமானளவு பூர்த்தி செய்யப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.
   - ❖ கடந்த ஐந்து (5) வருடங்களில் கட்டிடங்களின் நிர்மாணம் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றில் பிரதான செயற்பாடுகளில் பெற்ற அனுபவம்.
4. உலக வங்கியின் வழிகாட்டிகளில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் மூலமாக விலைமனுக்கோரல் நடாத்தப்படும். பண்டங்களின் பெறுகை, வேலைகள் மற்றும் உசாத்துணையற்ற சேவைகள் ***IBRD*** கடன்கள் மற்றும் ***IDA*** மானியங்கள் மற்றும் உலக வங்கி கடன் பெறுநர்களினால் 2011 சனவரி இன் கீழானதும் பெறுகை வழிகாட்டிகளில் வரையறுக்கப்பட்டவாறு தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பெற்றலாம். மேலாக, ஆர்வ முரண்பாட்டின் உலக வங்கியின் கொள்கையை குறிப்பிட்டுள்ள 1.6 மற்றும் 1.7 பந்திகளை பார்க்கவும்.
5. 2022.02.21 ஆம் திகதியிலிருந்து 2022.03.08 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களான மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான உரித்தான மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணத்தை செலுத்திய பின்னர், கொழும்பு-05, பேர்னாட் த சொய்சா (கிருள வீதி) 200 ஆம் இலக்கத்திலுள்ள பெறுகைப் பிரிவு, இபோச பெறுகைக்குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு -05, பேர்னாட் த சொய்சா (கிருள வீதி) 200ஆம் இலக்கத்திலுள்ள இபோச தலைமையலுவலக கேள்விப் பிரிவிலிருந்து ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
6. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் கையேற்பதற்கு முன்னர், விரும்பின், விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதுடன் மேலதிக தகவலை கொழும்பு-05, பேர்னாட் த சொய்சா (கிருள வீதி) 200 ஆம் இலக்கத்திலுள்ள பெறுகைப் பிரிவு, இபோச பெறுகைக்குழு செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 011-7706110.
7. விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறுவதானால், பின்வரும் திகதி, நேரம் மற்றும் இடத்தில் நடைபெறும். [ஏற்புடையதாகின், திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை கீழே உட்செலுத்தவும்]

   திகதி: 2022.02.28 ஆம் திகதியன்று. நேரம்: பி.ப. 2 மணிக்கு.

   இடம்: இபோச தலைமையலுவலகம், 200, பேர்னாட் த சொய்சா மாவத்தை (கிருள வீதி), கொழும்பு-05.

   தொழில்வழங்குநரினால் ஒழுங்கு செய்யப்படும் வேலைத்தள விஜயமானது ஒழுங்கு செய்யப்படமாட்டாது.
8. விலைமனுக்கள் கொழும்பு-05, பேர்னாட் த சொய்சா மாவத்தை (கிருள வீதி) 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச தலைமையலுவக, பெறுகைப் பிரிவில், இபோச பெறுகைக குழு செயலாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்டதும் விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான ஒப்பந்த இலக்கமானது குறிப்பிடப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கோரலானது 2022.03.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படுவதுடன் அதன் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் கொழும்பு-05, பேர்னாட் த சொய்சா மாவத்தை (கிருள வீதி) 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச தலைமையலுவக, பெறுகைப் பிரிவில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக்குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இபோச தலைமையலுவலகம்,**
**இல. 200, பேர்னாட் த சொய்சா மாவத்தை (கிருள வீதி),**
**கொழும்பு-05.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# நாய்களுக்கான கருத்தடை – 2022

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – புத்தளம்

01. புத்தளம் மாவட்டத்தின் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் பெண் நாய்களுக்கு கருத்தடை செய்வதற்கான விலைமனு அழைப்பு 2022 பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி முதல் 2022 மார்ச் மாதம் 08ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

02. விலைமனு மாதிரி மற்றும் ஏனைய விபரங்களுடனான விண்ணப்பப்படிவம் 5000.00 ரூபாவாகும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் விலைமனுப் பிணை முறியாக 58000.00 ரூபாவை ரொக்கப் பணமாக அல்லது அதற்குச் சமமான பெறுமதியான வங்கிப் பிணையொன்றை வழங்குதல் வேண்டும். 2022 பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி முதல் 2022 மார்ச் மாதம் 07ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் வருகை தந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட உங்களது விலைக்கோரல் மாதிரிகள் மற்றும் ஏனைய இயைபுடைய ஆவணங்களை கடித உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நாய்களுக்கான கருத்தடை - 2022'' எனக் குறிப்பிட்டு 2022 மார்ச் 08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம், பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்தின் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம்.

04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அன்றைய தினமே விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். இந்த வேலை தொடர்பான இறுதித் தீர்மானத்தை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**புத்தளம்.**

**032 2247261 / 032 2248855**

---

### பகிரங்க அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம் கென்டர் இக்விடீஸ் லிமிட்டட் தனது பெயரை சென்பின் செகியுரிடீஸ் லிமிட்டட் என 2022.01.31 முதல் அமுலுக்கு வருமாறு மாற்றம் செய்துள்ளதாக சொல்லப்பட்ட பிரிவு 8 இன் விதிகளுக்கமைய இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

கம்பனியின் பழைய பெயர்:
**கென்டர் இக்விடீஸ் லிமிட்டட்**
கம்பனியின் இலக்கம்:
**PB160**
பதிவு அலுவலகம்:
**லெவல் 8, தெற்கு பகுதி, மில்லேனியம் ஹவுஸ், 46/58, நவம் மாவத்த, கொழும்பு - 02**
கம்பனியின் புதிய பெயர்:
**சென்பின் செகியுரிடீஸ் லிமிட்டட்**
**சபையின் கட்டளைப்பிரகாரம்**
**கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள்**
**சென்பின் செகியுரிடீஸ் லிமிட்டட்**

---

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம், பின்வரும் கம்பனி 2019.03.06ஆம் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

**வோட்டர்லொஜிக் (பீவீடீ) எல்டிடீ**

**PV 00209538**

646/2/3, ஸ்டேசன் வீதி,
கொட்டாவ, பன்னிப்பிட்டிய,
மஹரகம.

**கம்பனி செயலாளர்**

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## சுற்றுலாத்துறை அமைச்சு
## தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
# விலைமனுக்கோரல் - 2022

01. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பின்வரும் பெறுகை நடவடிக்கைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரப்படுகின்றது

| ஒப்பந்தத்தின் பெயர் | தகைமைகள் | விலைமனுப் பிணையம் | | மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | | காசாக இத் திணைக்களத்தில் வைப்புச் செய்வதாயின் ரூபா | வங்கி வரைவு ஒன்றாக எனின் ரூபா | |
| பேராதெனிய அரச தாவரவியல் பூங்காவின் நூதனசாலையின் வெளிக்கள நிலத்தை அலங்கரித்தல் (கிட்டிய மதிப்பீடு 8 மில். ரூபா) | C7அல்லது C6 கட்டிடம் | 40,000.00 | 80,000.00 | 1,000.00 |

02. விலைமனுக்கோரலானது நாடளாவிய தேசிய போட்டிரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

03. இதற்கான ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022.02.21 முதல் 2022.03.14 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத படிவக்கட்டணத்தைச் செலுத்தி (ஒரு தொகுதிக்காக) பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்காதிணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் கணக்குப்பிரிவில் இதற்கான விலை மாதிப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனு மாதிரிப்படிவங்களை பெற்றுக் கொள்வதற்காக ICTAD/CIDA பதிவுப் புத்தகம் (மூலப்பிரதி)/ வியாபரப்பதிவுச் சான்றிதழுடன் தாபனத்தின் கடிதத்தலைப்பில் விண்ணப்பக் கடிதமொன்று சமர்ப்பிக்கப்படல் கட்டாயமாகும்.

04. மேற்படி விலைமனுப்பிணையத்தை பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், என்ற பெயரில் அரச அங்கீகாரம் பெற்ற வணிக வங்கியொன்றிலிருந்து சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அன்றேல் அவ் விலைமனுப்பிணைத் தொகையை பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் வைப்புச் செய்தல் முடியும். விலைமனு ஆவணங்களுடன் விலைமனுப் பிணையம் சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுப்பிணையமானது விலைமனுத் திறக்கப்படும் தினமான 2022.03.15 முதல் முன்வரும் 90 நாட்களுக்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்.

05. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக உரியவாறு முத்திரையிட்டு (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு) 2022.03.15 அன்று பி.ப. 2.30 இதற்கு முன்னர் தலைவர், திணைக்களப் பாரிய அளவான பெறுகைக்குழு, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த.பெ. 14, பேராதெனிய' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டுமென்பதுடன் தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். விலைமனுக்களை அடக்கும் தபால் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான ஒப்பந்தத்தின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் அத்தபாலுறைகளில் உரித்தான ஒப்பந்த நிறுவனத்தினதும் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

06. விலைமனுத் தொடர்பான தீர்மானமெடுக்கும் முழுமையான உரிமை திணைக்களப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் இவ் அறிவித்தலில் அல்லது விலைமனு மாதிரிப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை தொடர்பான ஏதேனும் விடயங்கள் தொடர்பாகத் தீர்மானம் வழங்கும் உரிமை தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும். (இது தொடர்பாக மேலதிக விபரங்களை 081-2388654 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் இத்திணைக்களத்தின் பிரதான கணக்காளரை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்).

07. விலைமனு முன்னோடிச் சந்திப்பு 2022.03.07 அன்று மு.ப. 10.30 இற்கு தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,**
**பேராதெனிய.**2022.02.21

---

## தெஹிவளை கல்கிசை மாநகர சபை
# கேள்வி அறிவித்தல்

ரத்மலானை புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியில் கடை அறைகளின் விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல் மீன் கடை அறைகளின் விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல் மற்றும் 2022 ஆண்டிற்கு ஆட்டிறைச்சி விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு விடல்.

தெஹிவளை கல்கிசை மாநகர சபைக்கு சொந்தமான ரத்மலானை புதிய வர்த்தக கட்டிடத்தொகுதியின் கடை அறைகளின் விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல் மீன் விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு விடல் மற்றும் 2022 ஆண்டிற்காக ஆட்டிறைச்சி விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக மேல் மாகாணத்தில் கடந்த கிட்டிய 03 வருடத்திற்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ள நபர்களிடமிருந்து நகல் பிரதியுடனான பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. தெஹிவளை கல்கிசை மாநகர சபையினால் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களில் மாத்திரம் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். குறித்த அட்டவணையில் ஒவ்வொரு விற்பனை கூடத்திற்கும் முன்னால் தரப்பட்டுள்ள கேள்வி வைப்பு மற்றும் அவ் அட்டவணையின் கீழ் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தை செலுத்திய பின்பு நகர சபையின் தரை மாடியில் அமைந்துள்ள கலப்பு வருமானப் பிரிவில் வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யக் கூடிய இறுதித்தினம் 2022 மார்ச் 18 மு.ப. 10.00 மணிவரையாகும். ஒரு கேள்விப் பத்திர தொகுதியில் விலைமனுக்கள் சமர்ப்பிக்க முடிவது ஒரு கடை அறைக்கு மட்டுமே
2. பொறியிடப்பட்ட உறையில் உள்ளடக்கப்படும் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியான 2022 மார்ச் 18 பி.ப. 2.00 இற்கு முன் மாநகர ஆணையாளர் பணிமனையில் அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும்.
3. கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்படும் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்பு சமர்ப்பிக்கப்படும் சகல கேள்விப் பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.
4. இக் கடை அறைகளுக்கான குறைந்தபட்ச கேள்வி அட்டவணையில் ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்கும் எதிரில் தரப்பட்டுள்ளது. சித்திரகமான கேள்விதாரர்கள் தமது கேள்விக் கட்டணத்தை ஒரேமுறையில் செலுத்துதல் வேண்டும்.
5. கேள்வி ஆவணங்களின் சகல நிபந்தனைகளுக்கு அமைவாகாத கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை தெஹிவளை கல்கிசை மாநகர சபையைச் சார்ந்தது
6. தெஹிவளை கல்கிசை மாநகர சபையின் இல. 011 2738701/ 011 2738702 என்ற தொலைபேசி இலக்கங்களில் 112 எனும் நீடிப்பு ஊடாக கலப்பு வருமானப் பிரிவை அழைத்து இக் கேள்வி கோரல் பற்றிய தகவல்களை விசாரித்தரியலாம்.

**வர்த்தக கட்டிடத் தொகுதி கடை அறைகளை குத்தகைக்கு விடுவதுடன் சம்பந்தப்பட்ட அட்டவணை**
**மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 1000.00**

| தொடர் இல. | சதுரஅடி அளவு | கடை இலக்கம் | மாதாந்த வாடகை (ரு) | குறைந்தபட்ச கேள்வி (ரூ.) | கேள்விப் பிணை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | (8*10)=80 | 25 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 2 | (8*10)=80 | 32 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 3 | (8*10)=80 | 33 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 4 | (8*10)=80 | 34 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 5 | (8*10)=80 | 35 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 6 | (8*10)=80 | 36 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 7 | (8*10)=80 | 41 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 8 | (8*10)=80 | 42 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 9 | (8*10)=80 | 45 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 10 | (8*10)=80 | 46 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 11 | (8*10)=80 | 47 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 12 | (8*10)=80 | 55 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 13 | (8*10)=80 | 67 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 14 | (8*10)=80 | 69 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 15 | (8*10)=80 | 74 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 16 | (8*10)=80 | 75 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 17 | (8*10)=80 | 81 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 18 | (8*10)=80 | 92 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 19 | (8*10)=80 | 94 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 20 | (8*10)=80 | 95 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 21 | (8*10)=80 | 96 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 22 | (8*10)=80 | 99 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 23 | (8*10)=80 | 103 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 24 | (8*10)=80 | 108 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 25 | (8*10)=80 | 109 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 26 | (8*10)=80 | 111 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |
| 27 | (8*10)=80 | 116 | 6500.00 | 200,000.00 | 20,000.00 |

**ஆட்டிறைச்சி விற்பனைக்கான உரிமையை குத்தகைக்கு விடுவதுடன் சம்பந்தப்பட்ட அட்டவணை**
**மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 2500.00**

| கடை இலக்கம் | இடம் | வருடாந்த குறைந்தபட்ச கேள்வி (ரூ.) | கேள்விப் பிணை (ரூ.) |
|---|---|---|---|
| 122 | ரத்மலானை புதிய விற்பனை நிலையத்தின் வரிக்கட்டண இல. 4/119 | 800,000.00 | 80,000.00 |

**மீன் விற்பனைக்கான உரிமையை குத்தகைக்கு விடுவதுடன் சம்பந்தப்பட்ட அட்டவணை**
**மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 1000.00**

| தொடர் இல. | சதுரஅடி அளவு | கடை இலக்கம் | மாதாந்த வாடகை (ரு) | குறைந்தபட்ச கேள்வி (ரூ.) | கேள்விப் பிணை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | (8*10)=80 | 124 | 15000.00 | 500,000.00 | 50,000.00 |
| 2 | (8*10)=80 | 125 | 15000.00 | 500,000.00 | 50,000.00 |
| 3 | (8*10)=80 | 126 | 15000.00 | 500,000.00 | 50,000.00 |

**எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும,**
**மாநகர ஆணையாளர்,**
**தெஹிவளை கல்கிசை மாநகர சபை.**

2022.02.17

---

### கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் சப்ரகமுக
# பெறுகை அறிவித்தல்
## 2022/2023 ஆண்டில் பாதுகாப்புச் சேவையை வழங்கல்

சப்ரகமுவ மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு உரித்தான பிராந்திய அலுவலகங்களிற்கு 2022.04.01 முதல் 2023.03.31 வரை பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக சிவில் பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் வழங்கநரொருவராக தேசிய பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப் பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து சப்ரகமுவ மாகாண கல்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தேசிய போட்டி ரீதியிலான பெறுகை முறைமையினடிப்படையில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| சேவை | நிறுவனங்கள் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணைத் தொகை ரூபா | ஆதனச் சான்றிதழ் பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|
| பாதுகாப்பு சேவையை வழங்கல் | சப்ரபமுவ மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு உரித்தான கேகாலை உந்துகொடையிலுள்ள கால்நடை வளர்ப்பு அபிவிருத்திப் பயிற்சி நிலையத்திற்கு மற்றும் பின்வரும் பிராந்திய அலுவலகங்கள் எஹலியகொட, கல்தொட்ட, கலவான ஒப்பநாயக்க, இரத்தினபுரி (கால் நடை வைத்தியசாலை) ரம்புக்கண, வரகாபொள, பிதிப் பணிப்பாளர் பணிமனை கேகாலை, தெரணியகல, அரநாயக்க தெஹிஓவிட்ட செயற்கை கருக்கட்டல் உப நிலையம், பெயர் பீல்ட் கலிகமுக யட்டியன்தொடடை, சூரியகந்த | 2,500.00 | 11,000.00 | 500,000.00 |

1. 2022.02.21 முதல் 2022.03.14 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக் காரர்களுக்கு மாத்திரம் இதற்கான விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.
   - தேசிய அடையாள அட்டை
   - 2022.01.01 அன்று அல்லது அதற்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன் கூடிய பொது 170 மாதிரிப்படிவத்தில் ஆதனச் சான்றிதழ் அல்லது கம்பனியொன்றாகப் பதிவு செய்யப்பட்டிருப்பின் கடந்த ஆண்டின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுகளின் பிரதி
3. நாங்கள் வழங்கும் விலைமனுப் படிவங்களை நன்கு வாசித்து அதன் பிரகாரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக 2022.03.15 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், பெறுகைக் குழுவிற்குக் கிடைக்கக் கூடியவாறு கீழே காணப்படும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக திணைக்களப் பெறுகைப் பெட்டியில் சேர்த்தல் முடியும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிங்கப்படும். விலைமனுத்திறத்தல் அன்றைய தினம் மு.ப. 10.00 இற்கு மேற் கொள்ளப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
5. இது தொடர்பான மேலதிக விபரங்களை கீழே காணப்படும் தொலைபேசி எண்ணை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு.**
**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**

**தொலைபேசி இல. 045-2226927**

## ஆஸிக்கு எதிரான 5ஆவது 20க்கு20 போட்டி:

# இறுதி ஓவர் வரை பரபரப்பு; வைட் வோஷில் இருந்து தப்பியது இலங்கை



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 5 ஆவதும் இறுதியுமான இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று தொடரில் முதல் வெற்றியை சுவைத்தது.அத்துடன் ஆஸி அணி 4-1 என தொடரையும் கைப்பற்றியது.

மெல்போனில் இடம்பெற்ற இப்போட்டியில் பெற்றுக்கொண்ட வெற்றியை அடுத்து வைட் வோஷில் இருந்து இலங்கை அணி தப்பியது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 154 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அவ்வணி சார்பாக துடுப்பாட்டத்தில் மத்தியூ வேட் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க பந்துவீச்சில் சமீர மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர்.

இதனை அடுத்து 155 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஆவது ஓவரில் ஒரு பந்து மீதமிருக்க 5 விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இலங்கை அணி சார்பாக குசல் மெண்டிஸ் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களை பெற்றுகொடுத்த அதேவேளை அணி தலைவர் தசுன் ஷனக 35 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.



அதன்படி நேற்றைய போட்டிக்கான இலங்கை அணி மூலம் ஜனித் லியனகே மற்றும் காமில் மிஷ்ரா ஆகியோர் சர்வதேச அறிமுகம் பெற, சுழல் பந்துவீச்சாளரான பிரவீன் ஜயவிக்ரமவிற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக குசல் மெண்டிஸூம் தொடரின் சிறப்பாட்டக்காரராக கிளென் மெக்ஸ்வெலும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதேவேளை இலங்கை அணி இந்திய அணியுடன் எதிர்வரும் 24ம் திகதி லக்னோவில் 20க்கு 20 போட்டியில் ஆடுவதற்காக இந்திய செல்கிறது. அத்துடன் அவுஸ்திரேலிய அணி எதிர்வரும் மார்ச் மாதம் 4ம் திகதி பாகிஸ்தான் சென்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது குறிப்பிட்டத்தக்கது.

# சுதந்திர கிண்ண கால்பந்தாட்டம்: அரையிறுதியில் தென் மாகாணம்

**திருகோணமலை குறூப் நிருபர்**



INDEPENDENCE TROPHY
CEYLON PROVINCIALS LEAGUE 2022

சுதந்திர கிண்ண கால்பந்து தொடரில், 7 ஆம் வாரத்திற்காக இடம்பெற்ற போட்டிகளில் கிழக்கு மற்றும் தென் மாகாண அணிகளுக்கு இடையிலான போட்டியும், மேல் மற்றும் வடக்கு மாகாண அணிகளுக்கு இடையிலான போட்டியும் சமநிலையில் நிறைவு பெற்றன.

இரத்தினபுரி சீவலி மைதானத்தில் இடம்பெற்ற முதல் போட்டியில், வட மாகாண அணி மேல் மாகாண அணிக்கு எதிரான போட்டியை 1-1 என சமநிலை செய்தது.

வட மாகாண அணி ஏற்கனவே இத்தொடரின் அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ள நிலையில், தங்கள் குழாத்தில் உள்ள ஏனைய வீரர்களுக்கு இப்போட்டியில் வாய்ப்பளித்தது. மறுமுனையில் மேல் மாகாண அணி இப்போட்டியில் மிகப்பெரிய வெற்றி பெற்று , அடுத்த போட்டியில் தென் மாகாண அணி கிழக்கு மாகாண அணியிடம் தோல்வி அடைந்தால் மாத்திரமே, மேல் மாகாண அணிக்கு அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெறக்கூடிய வாய்ப்புகள் இருந்தன.

போட்டியின் 10 ஆவது நிமிடத்தில், சலன பிரேமரத்ன கொடுத்த பந்து பரிமாற்றத்தை வட மாகாண கோல் காப்பாளர் சதுசன் ஒழுங்காக பிடிக்க தவறவிட, மேல் மாகாண அணிக்கு முதலாவது கோல் கிடைத்தது. தொடர்ந்து மேல் மாகாண அணி வீரர்கள் முதலாம் பாதியில் கோல் அடிக்க முயற்சித்த போதும் அவர்களால் அடிக்க முடியாமல் போனது. இரண்டாம் பாதியில் மேல் மாகாண அணி தற்காப்பு ஆட்டத்தை விளையாட 80 ஆவது நிமிடத்தில் கீதனின் ஹெடர் மூலம் வட மாகாண அணி முதலாவது கோலைப் பெற்று போட்டியை சமநிலை செய்தது.

கேகாலையில் இடம்பெற்ற இப்போட்டியில் தென்மாகாண அணிக்கு எதிரான ஆட்டத்தை கிழக்கு மாகாண அணி எவ்வித கோல்களும் அடிக்காமல் சமநிலை செய்தது.

முதலாம் பாதியில், இரு அணிகளும் எந்த விதமான கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபடாமல் இருந்தாலும், போட்டியின் அதிக நேரம் பந்தை தென் மாகாண அணி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது.

எனினும் இரண்டாம் பாதியில், கிழக்கு மாகாண அணி அதிக கோலடிக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திய போதும் அவர்களால் கோல்களை அடிக்க முடியாமல் போனது. மறுபக்கம் தென் மாகாண அணி எந்தவொரு கோலுக்கான முயற்சியையும் செய்யவில்லை.









# டயலொக்-இலங்கை கிரிக்கெட் தேசிய சுப்பர் லீக்கின் சம்பியனாக ஜப்னா தெரிவு

இலங்கை கிரிக்கெட் ஏற்பாட்டில் முதன்முறையாக நடைபெற்ற டயலொக் இலங்கை கிரிக்கெட் தேசிய சுப்பர் லீக் ஒருநாள் தொடரின் இறுதிப்போட்டியில், கண்டி அணியை 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய ஜப்னா அணி சம்பியனாக முடிசூடியது.

கண்டி – பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கண்டி அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை ஜப்னா அணிக்கு வழங்கியது. போட்டியானது சீரற்ற காலநிலை காரணமாக தாமதமாக ஆரம்பமானாலும், அணிக்கு தலா 50 ஓவர்களாக நிர்ணயிக்கப்பட்டது.

அதனடிப்படையில் களமிறங்கிய ஜப்னா அணிசார்பாக அணித்தலைவர் சதீர சமரவிக்ரம மற்றும் சமிந்த பெர்னாண்டோ ஆகியோர் தலா 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பின்னர் களமிறங்கிய துனித் வெல்லாலகே மற்றும் நிஷான் மதுசங்க ஆகியோர் இணைப்பாட்டமொன்றை கட்டியெழுப்பினர்.

இதன்போது ஆட்டத்தில் மழைக் குறுக்கிட்ட போதும், மீண்டும் ஆட்டம் ஆரம்பமானது. இதில் நிஷான் மதுசங்க 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இலங்கை இளையோர் அணியின் தலைவர் துனித் வெல்லாலகே, நிமந்த மதுசங்கவுடன் துடுப்பெடுத்தாடி தன்னுடைய அரைச்சதத்தையும் பதிவு செய்தார்.

நிமந்த மதுசங்க 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சிறப்பாக துடுப்பெடுத்தாடிய துனித் வெல்லாலகே 74 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். இவரின் ஆட்டமிழப்புடன் ஆட்டத்தில் மீண்டும் மழை குறுக்கிட்டது. எனினும், பின்னர் ஆரம்பித்த இந்த போட்டியில் அணிக்கு 49 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது. இந்தநிலையில் பின்வரிசையில் ரவிந்து பெர்னாண்டோ அணிக்காக மிகச்சிறந்த இன்னிங்ஸ் ஒன்றை ஆடி 41 ஓட்டங்களை குவிக்க, ஜப்னா அணி 48.3 ஓவர்கள் நிறைவில் 258 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்துவீச்சில் அபாரமாக செயற்பட்ட அசித பெர்னாண்டோ 5 விக்கெட்டுகளை வீழ்த்த, சச்சிந்து கொலம்பகே 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய கண்டி அணிக்கு ஆரம்பம் மோசமானதாக அமைந்திருந்தது. லஹிரு உதார, ஓசத பெர்னாண்டோ, லசித் குரூஸ்புள்ளே மற்றும் கவீன் பண்டார ஆகிய முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க கண்டி அணி 65 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது.

அணித்தலைவர் கமிந்து மெண்டிஸ் மற்றும் சஹான் ஆராச்சிகே ஆகியோர் ஐந்தாவது விக்கெட்டுக்காக 73 ஓட்டங்களை விளாசி வெற்றியிலக்குக்கான புத்துயிரை கொடுத்தனர். எனினும், சஹான் ஆராச்சிகே 33 ஓட்டங்களுடனும், கமிந்து மெண்டிஸ் 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க கண்டி அணியின் வெற்றிக்கனவு சரியத்தொடங்கியது.

இவர்களை தொடர்ந்து எதிர்பார்க்கப்பட்ட புலின தரங்கவும் ஆட்டமிழக்க, 164 ஓட்டங்களுக்கு கண்டி அணி 7 விக்கெட்டுகளை இழந்தது. கண்டி அணியின் நம்பிக்கை முழுமையாக வீழ்ச்சியடைய தீக்ஷில டி சில்வா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

தீக்ஷில டி சில்வா வெறும் 19 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 2 பௌண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களை விளாசியிருந்த போதும், முக்கியமான தருணத்தில் நிமந்த மதுசங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இவரின் ஆட்டமிழப்பின் பின்னர் கண்டி அணியின் வெற்றிக் கனவு தகர்க்கப்பட்டது. எனவே, கண்டி அணி இறுதியாக 45.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 221 ஓட்டங்களை




பெற்று, 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

ஜப்னா அணியின் பந்துவீச்சை பொருத்தவரை, பிரமோத் மதுஷான் 4 விக்கெட்டுகளையும், நிமந்த மதுசங்க 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தி ஜப்னா அணியின் வெற்றியை உறுதிசெய்தனர். எனவே, முதன்முறையாக நடைபெற்ற டயலொக் இலங்கை கிரிக்கெட் தேசிய சுப்பர் லீக்கின் சம்பியனாக ஜப்னா அணி மகுடம் சூடியது.தொடரின் சிறந்த பந்துவீச்சாளர் – புலின தரங்க (கண்டி)

தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரர் – நுவனிந்து பெர்னாண்டோ (கொழும்பு)

தொடர் ஆட்டநாயகன் – தனன் ஜய டி சில்வா (ஜப்னா)

ஆட்டநாயகன் (இறுதிப்போட்டி) – துனித் வெல்லாலகே

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.